**SKY WINGS LTD**
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119,Tooting High street, London, SW17 OSY



BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 10 ♦ ISSUE - 210 ♦ FRIDAY 24 JANUARY 2013



**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)

Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk



உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM






**Krishna Fancy & Video**
- இந்தியன் பேன்ஸி ஜீவல்லரி
- பார்ட்டி டெக்கரேசன்
- மணப்பெண் அலங்காரம்
- தென் இந்திய மலர்கள்
- டெய்லரிங், போன்கார்ட்
- பேக்ஸ் – ஜெராக்ஸ்
- விமான டிக்கெட்டு
- ஆடியோ – வீடியோ
- [தமிழ் – மலையாளம்]
- செய்தித்தாள்கள் [தமிழ்–மலையாளம்]

மல்லிகைப் பூ Special Offer 80p Only
Tel: 0208 684 9835
307, London Road, Croydon, CR0 3PA
Fax: 0208 683 0852 | Mob: 07712704302



**வீடு விற்பனைக்கு**
HOUSE FOR SALE IN DEHIWALA, SriLanka
This large 3 storey house built in 2005 has 4 rooms, each with an attached bathroom, living halls, balcony, and a large open roof-top with a prayer room.
Benefit from 24 hour security, ideally situated for living accommodation or investment
To view photos and additional information, please visit www.rathas.weebly.com or call
UK - 07852120649 / US +0014104588570



**FM Carpets**
விலையில், தரத்தில், சேவையில் என்றும் முன்னணியில்
Special Offers for Landlord & Estate Agents
இலவச மதிப்பீடு, இலவச ஃபிட்டிங், துப்புரவான சேவை
Huge Stock Variety of Colours Fast Fitting
வீட்டிற்கும் தொழில் நிலையங்களுக்கும் ஏற்றவை
MANY OFFERS IN STORE www.fmcarpets.com
Tel : 020 8252 6433 / 07946 566 885
120 Aldborough Road South, Seven Kings, Illford, IG3 8EZ



**Money Save Solution**
பணக் கவலையா? கடன் பிரச்சினையா?
உங்களின் மாதாந்த கட்டுத்தொகையைச் செலுத்தப் போராடுகிறீர்களா? கவலையை விடுங்கள்.
கடன்காரர்கள் வீட்டிலும் வேலையிலும் துரத்துகிறார்களா?
மாதத்தின் பாதியில் எதுவுமே கையில் மிஞ்சவில்லையா?
இந்த அழுத்தம் உங்களை சோர்வடையச் செய்கிறதா?
எமது அனுபவம் உங்களுக்கு உதவும். மேலும் கடன் எதுவும் வாங்காமல் உங்களால் செலுத்தக்கூடிய ஒரு சிறிய தொகையை மாதாந்தக் கட்டணமாக கட்ட ஒழுங்கு செய்து தரப்படும்.
Debit Management (DMP)
Individual Voluntary Arrangement (IVA)
Bankruptucy Assistance
Payment Protection Insurance (PPI)
Life Insurance & Critical Insurance
08001218193 or 07949455366



**We may have herbal solutions for your problems !!**
உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா?
காலத்தை வீணடிக்காமல் தொடர்பு கொள்ளுங்கள்.
ஆண்மைக் குறைவுக்கான சிகிச்சைகளும் எம்மிடம் உண்டு
சகலவிதமான மருத்துவ ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்
**Herbal Aid Health Centre**
10 Park Avenue, Southall, Middx, UB1 3AQ
Tel: 020 8843 0330
www.herbalaidhealthcentre.co.uk | herbalaid@hotmail.co.uk



குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk



**சென்னையிலிருந்து UK விசா**
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94



நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors | 115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk



ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# Do you want to become an Accountant?

**Sage**

- We teach Sage for those don't have exposure to accounting package.
- Our approach will be more practical oriented and focused on the real accounting issues.
- We will teach the candidate to enable them to work in Sage independently.
- Our course includes the preparation of Trial Balance, Balance Sheet, Profit & Loss Account and VATcomputation including EU Sales Listing.

**Excel**

- We conduct classes for Basic and Advanced Excel (such as V-Lookup, H-Lookup, IF functions, Pivot tables, data worksheet consolidation, IRR & NPV computations) for complex modelling for accountants.
- You will get the chance to learn how to model practical case scenarios.

## AIKON ACCOUNTANTS LTD

CHARTERED MANAGEMENT ACCOUNTANTS

**Tel: 020 3585 3484, Mob: 077 1632 4331**

Email: accounts@a-accountants.com Web: www.a-accountants.com

## United College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்



**C1, B1 & B2 Test**

**Our services:**

- ESOL with citizenship (B 1)
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம். சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு

£ 150 .00 மட்டுமே
* Including Everything

Certificate only in six days

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

**Head Office - Croydon Tel: 0208 1509 953 | 0753 8933 261**
**14, Lombard Business Park, 2 Purley Way, Croydon CR0 3JP.**



# OM GURU SHAKTHI ASTROLOGICAL CENTRE

## GURUJI: KRISHNA SHASRI





இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவர்த்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சனை, வியாபார முன்னேற்றமின்மை, பில்லி சூனியம் மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலலும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்களால் குணப்படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங்களை உங்கள் கைநாடி மூலம் கண்டுபிடித்து போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்கு சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

**21 LEE HIGH ROAD**
**LEWISHAM SE13 5LD**

Near: SIVAN TEMPLE, Opposite: KAVIAYA (SATHYAM) SUPER MARKET

**Tel: 07404567306**
**07506737606**

Open
7 Days a Week
9.30am to 8.00pm



REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

# UK COOL

AND SHOPFITTING Ltd.



168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல் வாழ்த்துக்கள்



**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension



UK COOL & SHOP FITTING LTD

**MOVING & DEVILERY**

**7 Days 24 HRS services & Repair**

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

# GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

**07983 589 993**
**07723 467 012**




## கௌரவம்!

ஆசிரியருக்கு,

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அதி வணக்கத்துக்குரிய இம்மானுவேல் அடிகளார், அகவை எண்பதை அடைந்துள்ளதை மறந்து விடாமல், அவருக்குத் தரவேண்டிய உரிய கௌரவத்தை ***ஒரு பேப்பர்*** தந்து வாசகர்களுக்கு நினைவூட்டியது தமது கடமையினின்றும் வழுக மாட்டோம் என்ற உறுதியான செய்திக்கு மனமார்ந்த நன்றி

*- அன்புடன் மகாலிங்கம்*

## களைகட்டிய தைப்பொங்கல்!

இம்முறை தைப்பொங்கல் பண்டிகை புலம்பெயர்ந்த நாடுகளில் எல்லாம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளமையை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. குறிப்பாக இளையவர்கள் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளனர். இது ஒரு வேளை தமிழக தொலைக்காட்சிகளின் வருகையால் ஏற்பட்டதோ தெரியவில்லை. இருந்தாலும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

*- அழகானந்தன்*

## யாழ்பாணத்து மாப்பிள்ளை

நடிகர் விஜய் இன் திரைபடம் ஒன்றுக்கான விமர்சனத்தில் யாழ்ப்பாணத்து மாப்பிள்ளையான அவரை அவமதிச்சிட்டினம் எண்டு அதைப் பிரசுரித்த உதயன் பத்திரிகைக்கு எதிராக யாழ்பாணப் பெடியள் போர்க்கொடி தூக்கியிருக்கினம். எத்தினை ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டபோது வீட்டுக்கிள்ளை இருந்த இந்த ஓடுகாலிகளுக்கு சினிமா நடிகனைப் பற்றி எழுதினது ரோசம் பொத்துக்கொண்டு வந்திட்டுதோ? திருந்தாத ஜென்மங்கள் இதுகள்.

*- இணுவை இரங்கன்*

## கட்அவுட்க்கு பாலாபிசேகம்!

நாடு வழமைக்குத் திரும்பியிட்டுது. கார்ப்பெற் றோட்டிலை பால் ஒடுகிறது எண்டு புழகிக்கொண்டு திரிஞ்ச என்ரை நண்பர் கந்தையா அண்ணை, புலியள் இருந்திருந்தால் இப்பிடி நடந்திருக்குமோ எண்டு கவலையோடை இண்டைக்குக் கேட்டார். என்னெண்டால் அஜித் குமாரின்ரை கட் அவுட்டுக்கு மட்டக்களப்பிலை பால் வார்க்கிறார்களாம். அதை நிப்பாட்டோணுமாம்.

*- பரமகுமாரன்*

## தென்னாபிரிக்காவின் முயற்சி அம்பலம்

கறுப்பின உரிமைகளுக்குப் போராடிய தென்னாபிரிக்க காங்கிரஸ் வேறு, ஆட்சியிலிருக்கும் அதன் உறுப்பினர்கள் வேறு என்பதனை அவர்களுடனான தனது உறவாடல் அனுபவங்கள் மூலம் வெளிக்கொண்டுவந்திருந்தார் பரா பிரபா. அவர் தொடர்ந்து ***ஒரு பேப்பர்*** ல் எழுதவேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

*- நிலாமதி*

## வினையூக்கியின் கதைகள் அருமை

***ஒரு பேப்பர்*** ல் வெளிவரும் வினைžக்கி செல்வகுமாரின் சிறுகதைகளை தொடர்ந்து படித்துவருகிறேன். புலம் பெயர் வாழ்வனுபவங்களை அவருக்கே உரித்தான எள்ளலுடன் சுவாரசியமா எழுதுகிறார். இறுதியாக வந்த 'தன்னைப்போல் ஒருத்தி' மற்றும் பேஸ்புக் பற்றிய அவரது சிறுகதைகள் சிறப்பாக இருந்தன. அவருக்கு எனது வாழ்த்துகள்.

*- கோகிலா*

## பேராசிரியர் தம்பையாவிற்கு இறுதி வணக்கம்

சிங்கள பௌத்த பேரினவாதத்தை உலகுக்கு வெளிப்படுத்திய 'Buddhism Betrayed' என்ற நூலை எழுதிய பேராசிரியர் ஸ்ரான்லி தம்பையா இம்மாதம் 19 திகதி காலமானார். புகழ்பெற்ற ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறை பேராசிரியராக இருந்த அவரது மரணம் பற்றிய செய்திகளை தமிழ் இணைய தளங்களில் காண முடியவில்லை. இந்த இணையங்களை நடாத்துபவர்களும் பாவம். அவர்களது அறிவுக்கெட்னவரையில்தான் அவர்களால் சிந்திக்க முடியும்.

*- எழிலன்*

## பொடிவைத்துப் பேசுகிறார் விக்கி

1981 இல் யாழ் நூலகத்தை எரித்ததில் இப்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவருக்கு தொடர்பிருந்தது என்று யாழ்பாணத்தில் ஒரு கூட்டத்தில் சொல்லியிருக்கிறார் முதலமைச்சர் விக்கினேஸ்வரன். சரி ஆர் அந்த அமைச்சர் என்பதை சொல்வதற்கு இந்த முன்னாள் நீதவான் ஏன் அச்சப்படுகிறார்? இப்பிடியான கிசுகிசுக் கதையளை விட்டுட்டு. சம்பந்தப்பட்ட அமைச்சர் மீத சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதா?

*- டேவிட் சுந்தர்*

## எத்தினை பேர் இருக்கிறாங்கள்?

யாழ்பாணத்திலை ஆமிக்காரர் அஞ்சு பேருக்கு எண்ட விகிதாசாரத்திலை இருக்கினம் எண்டு பொதுவாகச் சொல்கிறார்கள். விக்கினேஸ்வரனும் அப்பிடித்தான் சொல்கிறார். ஆனால் பன்னிரண்டாயிரம் பேர்தான் இருக்கிறதாக மகிந்த சொல்கிறார். மகிந்தவிற்கு கணக்குத் தெரியாது எண்டு விட்டுவிடலாம். அல்லது கணக்கு விடுகிறார் எண்டும் எடுக்கலாம்.

விக்கினேஸவரனுக்கு முன்னாலை இதை மகிந்த சொல்லேக்கிள்ளை, இந்தாள் ஏன் எதிர்த்து ஒரு கேள்வியுமில்லாம் கம் எண்டு இருக்குது?

*- தியாகராசா*

## அரிசி எங்கடைதான்

உலகிற்கு 'அரிசி'யை அறிமுகம் செய்த பெருமை தமிழர்களைச் சாரும். அலெக்சாண்டர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்புவரை அரிசியைப் பற்றி ஐரோப்பியர்களுக்குத் தெரியாது. அலெக்சாண்டருடன் வந்த அரிஸ்டாட்டில் அன்றைய சிந்தாற்றின் (Indus river)தென்புறமுள்ள அனைத்து அறிவுச் செல்வங்களையும் பெரியதொரு குழுவினருடன் வந்து திரட்டிச் சென்றுள்ளார்.

அதில் ஒன்றுதான் 'அரிசி'.

*- தமிழச்செல்வன்*

## இவரும் எங்கடை ஆள்தான்

விமல் வீரவம்ச பற்றி தெரியாத தமிழர்கள் இருக்க முடியாது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நம்பிக்கைக்குரிய அடியாள். தமிழர்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களை உதிர்த்து பிரபலம் தேடுபவர். தமிழ் தேசியவாதிகளும், அவரை சிங்கள இனவாதத்தின் குறியீடாக காட்டி வருகின்றனர்.

இதெல்லாம் தெரிந்த சங்கதிகள். விமல் வீரவம்ச பற்றி, பலருக்குத் தெரியாத தகவல் ஒன்றுண்டு. இனத்தால், பிறப்பால், அவரும் ஒரு தமிழர்தான்! அவரது முன்னோர்கள், ஆங்கிலேயர் காலத்தில் தமிழ்நாட்டில் இருந்துவந்து குடியேறிய, 'தமிழகத்து தொப்புள் கொடி உறவுகள்' ஆவர்.

*- உதயகுமார்*

***ஒரு பேப்பர்*** *தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....*
***Tel : 020 7043 4314***

# உலகத்தமிழர் பேரவையுடன் உறவுகள் இல்லை

**– பிரித்தானியத்தமிழர் பேரவை அறிக்கை**

உலகத்தமிழர் பேரவை (GTF) உடனான தமது உறவு நிலைபற்றி விளக்கி பிரித்தானியத் தமிழர்பேரவை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே இவ்விரு அமைப்புகளுக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்தமையும், பிரித்தானியத் தமிழர்பேரவையின் உறுப்பினர்களுக்கு உலகத் தமிழர் பேரவை அதன் செயற்பாடுகள் பற்றி விளக்கமளிக்க மறுத்துவருவது பற்றி செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் இவ்வறிக்கை வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியத் தமிழர் பேரவையால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :

'இலங்கைத்தீவில் போர் முடிவுற்ற காலப்பகுதியில், உலகளாவிய தமிழ் மக்களை ஒன்றினைத்து, ஒருமித்த குரல் எழுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டபோது, பிரித்தானியத் தமிழர் பேரவை முன்னின்று ஏனைய தமிழ் அமைப்புகளையும் இணைத்து, உலகத் தமிழர் பேரவை என்ற கூட்டமைப்பு உருவாவதற்கு முக்கிய பங்கு வகித்தது.

உலகளாவியளவில் செயற்படும் அனைத்து புலம் பெயர் தமிழ் அமைப்புக்களையும் உள்வாங்கி, அதனூடாக தமிழ் மக்களின் விடுதலைக்காய் ஒருமித்த குரல் கொடுக்கும் குறிக்கோளுடன், பதினான்கு தமிழ் அமைப்புக்களால் உலகத் தமிழர் பேரவை உருவாக்கப்பட்டது. காலப்போக்கில், ஏனைய தமிழ் அமைப்புக்களும் உள்வாங்கப்பட்டு அதன் மூலம் உலகத் தமிழர் பேரவையும், புலம் பெயர் தமிழினமும் மென்மேலும் பலம் பெற்று வளரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும், உலகத் தமிழர் பேரவையும் அதன் தலைமையும், கூடி முடிவெடுத்தல், ஜனநாயக ஆட்சி முறைமை, வெளிப்படையான செயற்பாடுகள், உள்வாங்கும் தன்மை, ஆகிய கோட்பாடுகளிலிருந்து விலகிச் செயற்பட்டதினால், இவ்வமைப்பு தனது பாதையிலிருந்து விலகி, வழி தவறி செல்கின்றது என்றே தோன்றுகிறது. இந்த அமைப்பின் நிர்வாகமானது, ஆரம்பத்தில் இணைந்த அமைப்புக்களை தக்கவைத்துக் கொள்ளவும், பிரதிநிதித்துவப்படாத தமிழ் அமைப்புக்களை இணைத்துக்கொள்ளவும் தவறியுள்ளது.

இதைத்தவிர, ஆண்டுகொருமுறை நடாத்தப்பட வேண்டிய பொதுக்கூட்டம் (AGM) 2010ம் ஆண்டிலிருந்து நடைபெறவில்லை. இத்தகைய செயல்களால், தனக்கான மக்கள் ஆதரவினை இழந்ததோடு மட்டுமல்லாமல், முன்னர் அங்கத்துவம் வகித்த புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் இவ்வமைப்பிலிருந்து வெளியேறியுள்ளன.

தமிழ் மக்களுக்கான நீதிக்கும் விடுதலைக்குமான சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் போரட்டங்களில், உலகத் தமிழர் பேரவையின் நிலைப்பாட்டை நோக்கின், அது இலங்கை தீவில் இடம்பெறும் திட்டமிடப்பட்ட இனவழிப்பை வெளிக்கொண்டுவரத் தவறிவிட்டதாகவே தோன்றுகிறது. அதே சமயத்தில், நீதி வேண்டியும் சிறிலங்கா அரசை பொறுப்புக் கூறுமாறும் வலியுறுத்தி தமிழ் மக்கள் முன்னெடுக்கும் போரட்டங்களை மழுங்கடிக்க இலங்கையரசு மேற்கொள்ளும் நகர்வுகளையும், உலகத் தமிழர் பேரவை வரவேற்பதாகத் தோன்றுகிறது.

உலகத்தமிழரை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் உலகத் தமிழர் பேரவை, தெளிவற்ற, பிரதிநிதித்துவமில்லாத கருத்துக்களை, தமிழ் மக்களின் கருத்துக்களாக வெளியுலகுக்கு வெளியிட்டு வருவதனை எம்மால் ஏற்க முடியவில்லை. பரவலான மக்கள் பங்களிப்புகளை உள்வாங்கி, அதனூடாக எடுக்கப்படும் கூட்டு முயற்சிகள் மற்றும் முடிவுகளாலேயே, தமிழ் மக்களின் நம்பிக்கையை மீளப் பெறலாம் என்று நாம் நம்புகிறோம். இது, உள்ளூர், தேசிய, சர்வதேச தமிழ் அமைப்புக்கள் அனைத்துக்கும் பொருந்தும்.

உலகத் தமிழர் பேரவையின் நிர்வாகத்தில் எந்தவித பிரதிநிதித்துவமும் நாம் மேற்கொள்ளவில்லை என்றும் அவ்வமைப்பினடமிருந்தும், அதன் செயற்பாடுகள் அனைத்திலிருந்தும் விலக்கிவைக்கப்பட்டுள்ளோம் என்பதினையும் வெளிப்படையாக அறிவிக்கிறோம். எமது உறுப்பினர்களின் விருப்பதிற்கினங்கவும், நீண்ட கலந்தாலோசனைக்குப் பிறகுமே இந்த முடிவற்கு நாம் வந்துள்ளோம்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை அடிப்படையாக கொண்டு இயங்கும் அனைத்து அமைப்புக்களுடனும் இணைந்து உலகத் தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும், விடிவிற்குமாய் நாம் வழமை போல தொடர்ந்து போராடுவோம் என உறுதியளிக்கிறோம்.'

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 694-712, London Road, Hounslow, TW3 1PG (SATNV TW31PX)
0207 099 2400



➡ Life in the UK Preparation Course
B1 Speaking and Listening
- All Applicants after 28th October 2013
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport / Naturalisation
➡ IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test

OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE & WE TRAIN YOU UNTIL YOU PASS
New rules applicable from October 28th
for British Citizenship and Indefinite Leave to Remain (ILR)
FREE INITIAL ASSESSMENT
Other Centres: Hounslow High Street, Wembley, Holloway Road, Whitechapel

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JANUARY 24, 2014, ISSUE 210

## மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேணடும்

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழியிலிருந்து இதுவரை நாற்பத்தினான்கு மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றுள் குழந்தைகளின் மண்டையோடுகளும் அடங்குவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகளிலிருந்து அறிய முடிகிறது. கண்டெடுக்கப்பட்ட சில மண்டையோடுகளை அவதானிக்குமிடத்து, இவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் 1999ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட ‘இரணகோசா’ நடவடிக்கையில் கொல்லப்பட்ட பொது மக்களின் எச்சங்களாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

சிறிலங்கா அரச அதிகாரிகளின் முன்னிலையில் நடைபெறும் இவ்வகழ்வு நடவடிக்கைகளினை, பார்வையிடுவதற்கு மக்கள் பிரதிநிதிகள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. இதிலிருந்து விசாரணைகள் பாரபட்சமற்ற முறையில் நடைபெற்று, கொல்லப்பட்டவர்களும், கொலைக்கு காரணமானவர்களும் இனங்காணப்படுவார்கள் என நம்பிக்கை கொள்ள முடியாதுள்ளது. ஏற்கனவே இம்மனிதப் படுகுழிக்கும் தமக்கும் எதுவித தொடர்புகளும் இல்லையென சிறிலங்கா இராணுவம் அறிவித்துள்ள நிலையில், தமது படைகளை சிக்கலுக்குள்ளாக்கும் எந்த நடவடிக்கையிலும் சிறிலங்கா அரசாங்கம் இறங்காது என எதிர்பார்க்கலாம்.

யாழ் செம்மணிப்பகுதியிலும் இது போன்ற ஒரு மனிதப்படுகுழி முன்னர் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. ஜே.வி.பி கிளர்ச்சிக்காலத்தில், அரசபடைகளால் கொல்லப்பட்டவர்களின் புதைகுழிகளில் சில தென்னிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை ஊடகங்களுக்கான செய்திகளாக அமைந்தனவே தவிர, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து எதுவித தகவல்களும் வெளியாகவில்லை. குறித்த பகுதிகளுக்கு பொறுப்பாயிருந்த இராணுவ அதிகாரிகளது பெயர்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்ட போதிலும் அவர்கள் மீது எதுவித ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. திருக்கேதீஸ்வரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிபோல் தமிழர் தாயகப்பகுதியில் குறிப்பாக இன்னமும் இராணுவம் வசமுள்ள பிரதேசங்களில் பல புதைகுழிகள் இருப்பதாக அஞ்சப்படுகிறது. வன்னியில் இறுதியுத்தம் நடைபெற்ற இடங்களிலும், பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களிலும் மனித எச்சங்கள் தோண்டி அழிக்கப்பட்டதாகவும் முன்னர் தகவல்கள் வெளி வந்திருந்தன.

இந்நிலையில், இப்புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடாத்தப்பட வேண்டும் என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள், அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளும் விடுத்திருக்கும் கோரிக்கையை சர்வதேச சமூகத்தின் முன் கொண்டு செல்வதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புகள் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*“ஒரு பேப்பருடன் இணைந்து பணியாற்றத் தயாரா? அழையுங்கள்’ எண்டு அடிக்கடி நாங்கள் சொல்லிறது வழக்கம். அதைப்பார்த்திட்டு கனபேர் இது ஏதோ ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்ட விசயம் எண்டு நினைக்கினம் போல இருக்குது. பெருசா ஒரு அசுமாத்தத்தையம் காணேல்லை. அப்படியில்லை, சரியான செய்திகள் மக்களிட்டை போய் சேர்கிறதுக்கு நீங்கள் உதவலாம். அதுக்கு நீங்கள் ஒண்டும் பெரிய ஊடகவியலாளர்களாக இருக்க வேண்டியதில்லை. வழக்கமாக கதைக்கிற மொழியிலையே விடயங்களை எழுதி அனுப்பலாம். உங்கடை போனில் எடுத்த படங்கள் தெளிவாய் இருந்தால் அவை போதுமானதாக இருக்கும்.*

*உள்ளூரில் நடக்கிற விழாக்கள், கூட்டங்கள் பற்றி நீங்கள் தாராளமாக எழுதி அனுப்பலாம். சமூகப்பிரச்சனைக்கள், வழமையாக பேசப்படாத அல்லது பேசக் கூச்சப்படுகின்ற விசயங்களைப் பற்றியும் நீங்கள் எழுதலாம். அரசியல் விசயங்களில் உங்களின்ரை கருத்துகளையும் எழுதி அனுப்பலாம். இதுக்கெல்லாம் நீங்கள் ஒண்டும் அரசியல் ஆய்வாளர்களாக இருக்கோணும் எண்டில்லை. உங்கடை கருத்தோடை நாங்கள் ஒத்துவரமாட்டம் எண்டும் தயங்கவேண்டாம். எங்களுக்கு ஒத்துவராத விசயங்களையும் நாங்கள் பிரசுரித்து வருகிறம். இதாலை படுகிற அவதி வேறை, அதுக்காக இதுகளிலை விட்டுக் கொடுப்புகளுக்கு இடமில்லை எண்டதை உங்களுக்கு அறியத் தருகிறோம்.*

***ஒரு பேப்பர்*** *பணியகத்தில் பணியாற்ற ஒருவர் தேவை எண்டு ஒரு விளம்பரம் போட்டிருந்தோம். அந்த விளம்பரத்தில் தவறுதலாக பெண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம் எனப் போடப்பட்டிருந்தது. இந்த வெற்றிடத்திற்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம், திருத்தப்பட்ட விளம்பரம் இதழ் 209 இலிருந்து பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இத்தவறு காரணமாக ஆட்களை நேர்முகப்பரீட்சைக்காக தேர்வு செய்வதனை ஒத்திப் போட்டுள்ளோம்.*

KidsPaper *இல் எழுதிறதிற்கு உங்களுடைய குழந்தைகளுக்கு ஊக்கம் குடுங்கோ. இது அவையளுக்கு எழுத்து பயிற்சியாக இருக்கிறது மாத்திரமில்லை, அவையளின்ரை கருத்துகளை மற்றவை அறிஞ்சு கொள்ளிற தக்கும் ஒரு வாய்ப்பைக் குடுக்கும். அவையள் பள்ளிக்கூடத்திலையும் மற்ற விடயங்களிலையும் சாதித்தவை பற்றியும் அறியத்தாருங்கள் இது மற்றப் பிள்ளையளையும் ஊக்கப்படுத்தும்.*

*இப்ப ஒரு தமிழ்பிள்ளை விண்வெளிக்குப் போக இருக்கிறதா செய்தி வந்திருக்கு. அவ ஆரெண்டு தேடிக் களைச்சு போனம். இது பற்றிய விபரங்கள் தெரிந்தால் அறியத்தாருங்கோ.*

*வேறை என்ன.. சந்திப்பம்*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# Conducting A Census; Another Cosmetic Exercise Before Geneva 2014



**Dr. Paul Newman**

I fully acknowledge that it is nothing but a ploy of the present regime to thwart the International community once again just before the 25th UNHRC in March.

The entire date was collected by the Gram Sevaka Niladharis and government staff, the respondents did not have a chance to fill the questionnaires which were in Tamil and Sinhalese, and there was no English translation available. There are serious allegations by very responsible people of the north that many villages were left out. The same type of population census carried out the last time would result in the reduction of the MP seats for Jaffna electoral district from 9 to 6 in the next elections. Only direct relatives of the victims, (husband or wife and parents if the victim was unmarried) were eligible to register.

Though the forms had all the details, the contents were orally dictated for filling them up, which means the people who work for the government who collected the data, collected only what was instructed to them or only what they wanted, whereas the guidelines had all the details and this to tell the outer world that the census was of International standard.

During the census one of the important issues locally was the question of witness protection especially if the families had links with the militants or if the families were to be present till the end of the war in Mullivaikal, the question raised is, when a high profile human rights activist like Fr.Yogeswaran SJ was questioned immediately after he met Ms.Navi Pillay, the UN Human Rights Commissioner, how will they be spared? Is it wise to give all the details?

In Jaffna the army has moved out physically to a large extent but the psychological scars remain and the presence of the para military too has made people think twice before they indulge in giving out details of the losses they have incurred especially if they have lost their near and dear ones, the reasons for their death/disappearance and the alleged perpetrators.

Many of those who have surrendered do not even speak about that if they have young girls and young wifes at home fearing the security forces. Hence, the question of many disappeared people remains a mystery.

In this entire system of conducting the census, one big fallacy is that nobody other than a family member can register the disappearance of a family or if an entire family was killed in the war. The numbers are not small; apart from those killed Sri Lanka needs to account for 146,679 unaccounted people.

It would be good if an environmental census is taken on how many Palmyra trees were broken by the armed forces and in terms of economic value how much each family lost as a result of the destruction of these trees. It would be noteworthy if a census is taken on how many trees have been felled by the armed forces during the course of the war and how much timber have been stolen by the timber smugglers of the south for export. It would be good to take a count of how many Sinhala families have been resettled by the state sponsored resettlement schemes in the North and East.

In this whole exercise one wonders the fate of the more than 70,000 refugees in the 112 camps of Tamilnadu and 40,000 living outside apart from those Tamil asylum seekers, refugees and Tamil Diaspora in the western countries who left everything after the state sponsored pogrom of 1983, who will compensate them?

In the questionnaire there is no mention of how much land the Tamils have lost to the armed forces and how the Tamils have been deprived of their livelihood as a result of the agricultural activities taken up by the armed forces and the occupation of the coastal areas used by the Tamil fishermen.

The whole approach needs a very professional approach, people undertaking the census should be trained, there should be independent monitoring mechanisms, there should be no coercion or any pressure on the respondents and the whole process should involve the civil society, the religious groups, NGOS and INGOs, only then it can be impartial and accepted by the victims.

Many of those who have surrendered do not even speak about that if they have young girls and young wifes at home fearing the security forces. Hence, the question of many disappeared people remains a mystery.

The immediate need for the people is not an audit or census but the land that was grabbed from them; they need to return to their ancestral properties. They need to live in an environment which is natural, devoid of the presence of the armed forces both in uniform and civvies, an administration where the Governors of the North and East are not men accused of aiding genocide. For this kind of a project to succeed, there needs to be a transitional administration under international supervision for aiding the civilians speak out their minds without fear.

# Sri Lanka guilty of continued crime of genocide against Eelam Tamils: PPT




**By: Ramanan Veerasingham**

Ruling that Sri Lanka is guilty of the crime of genocide against the Eelam Tamils and that UK and USA, are guilty of complicity to this crime, the Rome-based Permanent Peoples' Tribunal (PPT) Wednesday said in Geneva that the campaign of "genocide against the Eelam Tamil group is a continuing process, one that has not yet accomplished the total destruction of their identity."

Releasing a 64-page detailed judgement in Geneva on its probe into the allegations of genocide in Sri Lanka, it said that Sri Lankan government's "genocidal coordinated plan of actions reached a climax in May 2009", clearly to erase the Eelam Tamil identity.

"On the strength of the evidence presented, the Tribunal reached the consensus ruling that the state of Sri Lanka is guilty of the crime of genocide against Eelam Tamils and that the consequences of the genocide continue to the present day with ongoing acts of genocide against Eelam Tamils," the detailed judgement of the PPT said.

It said although Colombo's genocidal strategy has changed with killings "being transformed into other forms of conduct", its intention "to destroy the group and its identity remains and continues, through causing serious bodily or mental harm to members of the Eelam Tamil group".

Internationally renowned jury of eleven genocide experts, experts on international law and human rights defenders last month examined several studies and background papers on the charges and heard evidence from more than 30 witnesses and analysts, before reaching the verdict into its probe against the Sri Lankan State and its accomplices on the charge of genocide against the Tamil people.

It said that the notification of the procedures and invitations to participate in the session of the PPT in Bremen, Germany were submitted to the representatives of the Governments of Sri Lanka, India, the United States of America and the United Kingdom through their embassies in Berlin and Rome in letters sent on 12 November 2013.

"According to the Statutes of the PPT and as specified in the notification, in the absence of a positive response to the request for formal representation of their positions, the PPT mandated a Rapporteur to present the views of the four accused governments," it said.

Regarding the characterization of the victims as belonging to a particular national, ethnical, racial or religious group population, the Tribunal specifies that the victims are in this case the Eelam Tamils as a national group. The ruling said that the Tribunal has considered carefully whether to determine the target group as "part of the Tamil national group" (as proposed in the Accusation) or, as eventually decided, to find that genocide had been committed against the "Eelam Tamils as a national group".

## Overt UK complicity

Recognizing that the Sri Lankan state alone did not have the capacity to achieve its genocidal ambitions, and given the evidence presented, the Tribunal ruled that "the UK and the USA are clearly accomplices in the genocidal process".

The PPT ruling said that Britain's assistance to the Government of Sri Lanka in the latter's attempts to build up its security, military, intelligence and police capacity vis-à-vis the LTTE "continued right up to the final phase of the war against the Eelam Tamils in May 2009".

"The Tribunal found that UK complicity in the genocide against the Eelam Tamils during the period of the armed struggle and its repression was overt and explicit and qualifies as 'aid or assistance' furnished by one State for the commission of a wrongful act by another State", under Article 16 of the International Law Commission's Articles on State Responsibility".

"Further, the Tribunal views the events of 2009 as the logical manifestation of the structural genocide that had been put in place during the colonial period and in the construction of the newly independent unitary Sri Lankan state," the detailed PPT ruling released in Geneva said Wednesday.

## Active US complicity

Coming hard on the role of the US in the crime, the PPT ruling said that "active US complicity in the genocide arises not only from its sustained efforts to increase the power and effectiveness of the Sri Lankan military, the direct perpetrator of the genocidal acts taking place in the last months of the war, but perhaps even more significantly from its role in blocking and even reversing political and diplomatic initiatives to implement the peace process and in blacking out information on the unfolding critical situation and the unprecedented worldwide protests by Tamil communities in the diaspora."

These military and non-military actions constitute "the provision of means to enable or facilitate the commission of the crime", as determined to be included in "complicity" in genocide by the International Court of Justice in February 2007, it said.

Despite knowing that "the success of the entire peace process depended on upholding the parity of status" between the two negotiating parties as stipulated in the Norwegian-brokered Cease Fire Agreement, "the US continuously worked to destabilise the balance by not only itself favouring the Government of Sri Lanka, but also demanding that others, such as the EU, do the same", it said, adding that the move set in motion the demise of the peace process.

## Decision on India's role withheld

It said although the Tribunal was asked to consider the accusation that the Indian state is guilty of being complicit in the same crime, "owing to the complexity of India's shifting role within the conflict in Sri Lanka and, as there was neither sufficient material evidence nor time for the Tribunal to consider properly the afore-stated accusation, the panel of judges decided to postpone deliberations of the question"

"Regarding the charge against India, the Tribunal has decided to withhold its final decision pending the consideration of additional evidence, which could include examination of the potential responsibility of other States, such as China," it said.

Making scores of recommendations, the PPT said that the specific role and aim of the judgements of the Permanent People's Tribunal "cannot be confined to the condemnation of entities and persons who must be accountable".

"The permanent validity of the personal and collective rights which have been violated needs to be declared and hence directed to create space and obligations for the present and the future, when peoples who have been transformed into victims, can decide on their lives in dignity," it said.

## UN led international commission of inquiry

It recommended the United Nations, "whose failure to take action, which they officially describe as 'systemic', had a decisive role in the failure to prevent as well as in the enactment of the genocidal process against the Eelam Tamils"; to provide within the shortest delay a credible account of the decisions which led to the interruption of the peace process and to the order for UN officials and staff to withdraw.

The PPT also urged the UN "to give maximum priority to the establishment of a strategy aimed primarily at stopping the ongoing genocide, and also at creating concrete conditions for the Eelam Tamils to exercise their rights to peace and self-determination".

> The EU has also been asked to "reconsider with high priority its security policy, so strictly dependent on classifications imposed by the US government without regard for due process and irrespective of the evolving nature of liberation and resistance movements".

It has also recommended for the creation of "an international commission of inquiry – which excludes the states which have been directly and/or indirectly linked to the genocidal process – could be a first step in this direction".

It has also recommended the European Union, which had played a positive role with the promotion of the peace process, but later contributed to the implementation of the genocidal process with its acceptance of the US government position on the 'terrorist nature of the Eelam Tamils….to assume the responsibility of providing a transparent report on the reasons that led to the failure of the peace process".

EU has also been urged "to review its external policy, in order to assure that the political, economic, and cultural rights of the Eelam Tamils are respected and promoted with specific attention to the difficult situation of denial and repression created by the Sri Lankan government.

> "the UK and the USA are clearly accomplices in the genocidal process"

The EU has also been asked to "reconsider with high priority its security policy, so strictly dependent on classifications imposed by the US government without regard for due process and irrespective of the evolving nature of liberation and resistance movements".

*Courtesy: JDS*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon.................. 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

**இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.**

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

**ஒரு பேப்பர்**
**ORU PAPER**

***எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!***

*ஆசிரியர் குழு:*

*பிரித்தானியா*
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

*கனடா*
**தயா - அரவிந்தன் - சிந்து**

*பொறுப்பாசிரியர்*
**- கோபி -**

*மக்கள் தொடர்பு*
**சோபனா அருந்தவச்செல்வம்**

*விளம்பரம்*
**சோபனா - அஜந்தா**

*அச்சு*
**தர்சினி (கனடா) - சுகன்யா**

*வடிவமைப்பு*
**மயூ - யுகன்**

*முகப்பு வடிவமைப்பு*
**seven zero graphics**

*விளம்பர வடிவமைப்பு*
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

*தமிழ் எழுத்துரு உதவி*
**சுரதா யாழ்வாணன்**

*நிதி – நிர்வாகம்*
**சோபனா அருந்தவச்செல்வம்**

*வழங்கல்*
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
**லண்டன்** 020 7043 4310
**கனடா** 416 613 2850

தொலைநகல் **(Fax)**
**லண்டன்** 020 7043 4312
**கனடா** 416 438 7855

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

*மின்னஞ்சல்:*
**info@orupaper.com**

*இணையம்:*
**www.orupaper.com**


*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# வைக்கோற்பட்டடை.......
# உவமானம் எவ்வாறு பொருந்தும் ?

கடந்த ஆண்டு டிசெம்பர் 20ல் வெளியாகிய '***ஒரு பேப்பர்***' இல், '***ஆசிரியர்களை மந்தைகள் எனக் குற்றம் சொல்வது சரியா?***' என்ற தலைப்பில் திரு. சண்முகலிங்கம் என்பவரால் எழுதப்பட்ட கடிதத்தைப் படித்தேன். அதில் குறிப்பிடப் பட்டுள்ள 2013 நவம்பர் 16ம் திகதி கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழாக் கூட்டத்தில் சமூகமளித்தவர்களில் நானும் ஒருவன் என்ற வகையிலும், ஈழத்தமிழ் மக்களின் --அதுவும் குறிப்பாக எதிர்காலச் சந்ததியினரின்--நலன்க ளில் மானசிகமான அக்கறை கொண்டவன் என்ற வகையிலும் இதனை எழுதுகிறேன்.

அன்றைய கலைவிழாவில் கலந்து கொண்டவர் களில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப்பிள்ளை களின் தமிழ்க் கல்வி, தமிழ்ப் பாடசாலைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் பலர் உள்ள டங்குவர். அவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தவர் சட்டத்தரணி திரு. சிறீகந்தராசா. தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை வாய்ந்த தமிழ் அறிஞர், தமிழர் நலனில், தமிழ் மொழி தேக்கமடையாமல், சிதைக்கப் பட்டுச் சின்னாபின்னப்படாமல் வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் ஆழ்ந்த கரிசனை கொண் டவர். தமிழர்களுக்குள் மட்டும் முடங்கிடாமல், மற்றைய இனத்தவர்களும், குறிப்பாக ஆங்கிலம் பேசும் தமிழ் இளஞ்சந்தியினரும் தமிழின் அருமை யையும், பெருமையையும் அறிய வேண்டும் என்ற நோக்கத்தில் பல ஆக்கங்களையும் நூல் களையும் படைத்திருப்பவர் படைத்துக் கொண்டி ருப்பவர். அறிவுபூர்வமாக ஆராய்ந்தபின் மனதில் சரி என்று பட்டவற்றை எதுவித பாசாங்குமில் லாமல் நேர்மையாகச் சொல்லிவிட வேண்டும் என்பதைத் தவிர்க்கமுடியாத ஒரு தர்மமாகக் கொள்பவர்.

02.11.2013 அன்று லண்டனில் ஹவுன்ஸ்லோ (Hounslow) என்ற இடத்தில், தமிழர் கல்வி மேம் பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றில் 600 தமிழ் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அதில் ஒரு கைந்நூல் அனைத்து ஆசிரியர் களுக்கும் கையளிக்கப்பட்டது. திரு சிறிகந்தராசா வின் பார்வைக்கு வர நேர்ந்த அக்கைந்நூலிலுள்ள தமிழ்க் கல்விக்குப் பங்கமும் விளைவிக்ககூடிய இலக்கண இலக்கியத் தவறுகளை, அவர் வழமை போல் சம்பிரதாயமாகச் சில வார்த்தைகளைப் பேசிவிட்டுப்போகாது, தமிழ் ஆசிரியர்கள், தமிழ்ப் பிள்ளைகளின் தமிழ்க் கல்வி, கலாச்சாரம் ஆகிய வற்றில் அக்கறை கொண்டவர்கள் கலந்து கொண்டிருக்கும் அன்றைய கூட்டத்தில், காரண காரியங்களோடு ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டியது எப்படித் தவறாகும்? - மாறாக, அது ஒரு தமிழ் அறிஞனின், தமிழ்பால் அக்கறை கொண்ட ஒருவரின் நேர்மையான ஆதங்கம் அல்லவா?

அந்த உரையில் எந்தத் தமிழ் அமைப்பைப் பற்றியும் அவர் குற்றம் சொல்லவில்லை. தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய குறிப்பு களைக் கொண்டிருந்த கைந்நூலின் உள்ளடக் கத்தில் காணப்பட்ட குறைகள் பற்றியும், பயன் படுத்தப்படும் பாடநூல்களில் காணப்படும் குறை பாடுகள் பற்றியுமே அவர் பேசினார்.

சிறிக்கந்தராசா பேசிய கருத்துக்களில் தவறுகள் இருந்தால் அவற்றினைச் சுட்டிக் காட்டாது, "வைக் கோற்பட்டடை நாய்" என்றும் "இவர் யார் அதைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு" என்ற ரீதியிலும் சண்முகலிங்கம் எழுதியிருப்பது எவ்வாறு பொருந்தும்?

"தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை பாட நூல்கள் தமிழ் அறிஞர்கள் கூடி ஆராய்ந்து அவர் களது ஆலோசனைப்படியே எழுதப்பட்டன" என்கிறார் சண்முகலிங்கம். அதற்காக அவற்றில் எதுவித தவறுகளும் இல்லையென்றோ, அல்லது தவறுகள் இருப்பதற்கு வாய்ப்புகள் இல்லை யென்றோ அல்லது தவறுகள் இருந்தாலும் இல்லை என்றே கொள்ள வேண்டும் என்ற பாணியில் அவர் வசைபாடுவது எப்படி நியாயமாகும்?

தமிழ் ஆசிரியர்கள், தவறுகள் இருக்கின்றன என்பது தெரிந்தும், அல்லது தெரியப்படுத்தியும், அல்லது தெரிந்து கொள்ள விரும்பாமலும் "எமக்கேன் இந்த வம்பு" என்று ஒதுங்கும் தன்மையை மந்தைக் கூட்டத்திற்கு ஒப்பானது என்ற உருவகத்தில் கூறியதில் நியாயமும் உண்மையும் இருக்கின்றது. அப்படி ஒதுங்கு வதையே சண்முகலிங்கம் விரும்புகிறார் போலி ருக்கிறது. மற்றவர்கள் போகிறார்கள் என்பதற் காக, எங்கு போகின்றோம், எப்படிப் போகின் றோம், போகின்ற பாதை சரிதானா, என அறிவுபூர் வமாகச் சிந்தித்துச் செயலாற்றாமல் செல்பவர் களை மந்தைக் கூட்டம் என்று உருவகப்படுத் துவதில் என்ன தவறு?. - முழுப் பேச்சையும் கணக் கெடுக்காமல் சில சொற்களை மட்டும் முன்னி லைப்படுத்தும் சண்முகலிங்கத்தின் செயல் நேர்மைத் திறன் அற்றது. இதில் அவருக்குத் தனிப்பட்ட ரீதியில் இலாப நஷ்டங்கள் உண்டோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆங்கிலத்தில் ஒரு சொற்பிரயோகம் உண்டு "If you don't like the message , don't attack the messenger"- செய்தி பிடிக்காவிட்டால் செய்தியைக் கொண்டுவருபவரைச் சாடாதீர்கள். சண்முகலிங்கமும் செய்தியைப் பரிசீலிக்காமல் செய்தி சொல்பவரை, 'இடம் தகுதி பொருத்தம்' என்கிற போர்வைகளில் தனிநபர் வசைபாடல் களில் ஈடுபட்டிருக்கிறார்.

ஈழத்தமிழ் மக்களின் சாபக்கேடே இதுதான்.- எதனையும் அலசி ஆராயாமல், விடயங்களை அறிவுபூர்வமாகப் பரிசீலிக்காமல், நிராகரிப்பது அல்லது தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடுவது நமது பண்பாகி விட்டது. இந்த மனப்பான்மையி னால் தானே ஈழத்தில் எல்லாவற்றையும் இழந்த இன்றைய இழிநிலைக்கு நாம் எம்மைக் கொண்டு வந்திருக்கிறோம்.

சண்முகலிங்கம் விடயத்தை விட்டுவிட்டு சிறிகந்தராசாவைச் சாடுவதிலேயே தன் நேரத் தையும், எழுத்துக்களையும் விரயமாக்கி இருக் கிறார். "பார்த்தியா, நன்றாகக் குடுத்தேன்" என்று தனக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் பெருமை யாகப் பீற்றிக் கொள்ள அது உதவலாம். ஆனால் அது எவருக்கும் ஆக்கபூர்வமாக உபயோகமாகப் போவதில்லை.

எனினும், ஈழத்தமிழர்களின் சமூக, அரசியல் நலனிலும், எதிர்காலச் சந்ததியினரின் மேம் பாட்டிலும் அக்கறையும் கரிசனையும் கொண்ட பிரசுரம் '***ஒரு பேப்பர்***' என்பதால் உங்களுக்கு ஒரு தார்மீகக் கடமை இருக்கிறது. சிறிகந்தராசா அன்றைய கூட்டத்தில் வெளியிட்ட கருத்துக்களை அவரிடம் கேட்டோ, அல்லது அவை பற்றிய ஒரு கட்டுரையை அவரிடம் பெற்றோ '***ஒரு பேப்பர்***' இல் பிரசுரியுங்கள். சண்முகலிங்கத்திடமிருந்தோ, அல்லது அந்தக் கையேட்டை வெளியிட்டவர் களிடமிருந்தோ, சிறிகந்தராசாவின் கருத்துக்க ளுக்கான எதிர்வினைக் கருத்துக்களைப் பெற்றுப் பிரசுரியுங்கள். இது சம்பந்தமாக மற்றவர் களும் பங்குபற்றும் விதமாக (அந்தப் பாடநூல் களுக்கு ஆலோசனை வழங்கிய தமிழ் அறிஞர்கள் ஆகியோர் உட்பட) ஒரு கருத்துக் களத்தைத் தயவு செய்து உங்கள் பத்திரிகையில் ஏற்படுத்துங்கள்.

இதனால், தமிழ்ப் பாடசாலை அதிபர்கள், ஆசிரி யர்கள், பெற்றோர்கள், தமிழ்க்கல்வி சம்பந்த மான சமூக ஆர்வலர்கள், பாடநூல்கள் சம்பந் தமாக ஒரு ஆதாரபூர்வமான, தெளிந்த முடிவு களை எடுக்க வாய்ப்பு அளித்தவர் ஆவீர்கள். புலம் பெயர்ந்த தமிழ்ப்பிள்ளைகளின் முறையான அறிவு வளர்ச்சிக்கும் வழிசமைத்தவர் ஆவீர்கள்.

*- சி. ஆனந்தன்*

*இவ்விடயம் தொடர்பாக தமிழறிஞர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள் தமது கருத்தினை தெரிவிக்க விரும்பின் அவற்றை பிரசுரிக்க **ஒரு பேப்பர்** தயாராகவுள்ளது என்பதனை அறியத் தருகிறோம்.*

*- பொறுப்பாசிரியர்*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## தன் ஏமாற்று நடைமுறை. . . . .

தன்னை ஏமாற்றிக் கொள்ளுதல் என்பது எங்கள் மனம் ஈடுபடுகின்ற மாயங்களின் பயனாக நாமும் ஏமாந்து அதை பிறர் மீதும் திணிக்கும் ஒரு நிகழ்வு. ஒவ்வொருவரும் தன்னை ஏமாற்றிக் கொள்வது என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். தன்னை ஏமாற்றிக் கொள்வதின் முக்கிய அம்ச மாகத் திகழ்பவை ஏதோ ஒன்று நடக்கும் என்ற நம்பிக்கையும், மிக எளிதில் வார்த்தைகளுக்கும் எதிர் வார்த்தைகளுக்கும் திருப்திப் படும் இயல்பும் தான்.

நாம் எம்மை ஏமாற்றுதலிலிருந்து விடுபட, மேலெ ழுந்தவாரியான விளக்கங்களிலிருந்தும் பதில்களி லிருந்தும் எம்மைக் காத்துக் கொள்ள வேண்டும், அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளை உள்ளார்ந் தமாய் அணுக வேண்டும். பிறரை எப்படிப் நாங்கள் பார்க்கின்றோம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் நாளாந்தம் எப்படி செயற்படத் தொடங்கு கிறோம் என்பதையும் கவனத்தில் கொண்டு எங் களை நாங்களே ஏமாற்றுகின்றோம் என்பதை முதலில் உணரவேண்டும்.

சுய ஏமாற்றுத் தன்மை எங்களுக்கு ஒருவித உந்து சக்தியையும் ஆற்றலையும் செயற்திறனையும் அளித்து இதை மற்றையவர்கள் மீது திணிக்கவும் தூண்டுகிறது. ஆகவே தன்னை ஏமாற்றுதல் எம் மீது மட்டும் சுமத்தப்படுவதுடன் நில்லாது படிப்படி யாக மற்றையவர்கள் மீதும் எம்மால் சுமத்தப் படுகிறது. இதுதான் ஒன்றன்மீது ஒன்று செயற் படும் தன் ஏமாற்று நடைமுறை. இதை நாங்கள் ஒவ்வொருவரும் மிகத் தெளிவாகவும் குறிக்கோள் உடனும் நேர்த்தியாகவும் சிந்திக்க வல்லவர்கள் என நினைத்துச் செய்கின்றோம். ஆனாலும் நடை முறையில் இச்சிந்தனையால் நாமே நம்மிடம் ஏமாந்துள்ளோம் என்பதை உணருவதில்லை.

ஒரு பிரச்சனையை என்ன உள் நோக்கத்தோடு, என்ன உந்துதலோடு, அணுகுகின்றோம் என்பது தான் முக்கியம். தேடுகின்ற நாங்கள் ஒவ்வொரு வரும் இந்த ஏமாற்று வேலையை எங்கள் மீது திணித்துக் கொள்ளுகின்றோம். இதை நாங்களே செய்கின்றோம், வேறு யாரும் இதைத் திணிக்க முடி யாது. நாங்களே எங்களுக்குள் செய்கின்றோம். இருவருக்கிடையில் அல்லது இரு குழுக்களுக் கிடையில் அல்லது பல குழுக்கள் மத்தியில் அவர வருக்கென்று தனிப்பட்ட குறிக்கோள் இல்லாத போதுதான் ஒத்துழைப்பு ஏற்பட முடியும். அனை வரும் ஏதோ ஒன்றாக வேண்டும். இதை உணர்வது தான் எங்கள் ஒவ்வொருவருக்கம் உரிய தேடலா கும். நீங்களும் நாங்களும் சிந்தித்து திட்டமிட்டு செயல்படுத்தி விளைவையும் பயனையும் தீர் மானித்து ஒன்றாகக் கூடி உழைத்தோமானால் அதில் உள்ள நடைமுறை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். அந்த நடைமுறையில் எங்களுடைய சிந் தனைகளும் அறிவாற்றல் படைத்த மனங்களும் சந்திக்கின்றது என்பது தெளிவு.

நீங்களும் நாங்களும் அறிவுபூர்வமாக ஒரு குறிப் பிட்ட வேலையை செய்ய இணங்குகின்றோம். ஆனால் உள் மனதின் ஆழ்நிலையில் நீங்களும் நாங்களும் முரண்படுகிறோம். எங்களுடைய திருப் திக்கு ஏற்றபடி நாங்கள் ஒரு பயனை வேண்டுகின் றோம். நாங்கள் ஆதிக்கம் செலுத்த விரும்புகின் றோம். எங்களுடைய தலைமைத்துவத்தை முன் எடுக்கின்றோம். உங்களுடன் சேர்ந்து உழைப்ப தாகச் சொன்னாலும் இதுதான் மன ஆழத்தின் நிலைமை ஆனாலும் நாங்கள் இருபகுதியினரும் தான் அந்தத் திட்டத்தைத் தோற்றுவித்தவர்கள். வெளிப்புறத்தில் அத்திட்டத்தை ஒத்துக் கொண்ட போதிலும்கூட நாம் எதிர்க்கவே செய்கின்றோம் இது தான் எங்கள் எல்லோருடைய நடைமுறையும்கூட. ஏன் எல்லா உலகத் தலைவர்களினதும் நடை முறையுங் கூடஇதுதான் தன் ஏமாற்று நிலை.

எடுத்துக்காட்டாக எல்லா மதங்களும் சகோதரத் துவம், ஒரே கடவுள், ஒற்றுமை என்றெல்லாம் பேசு கின்றன. ஆனால் அந்த அந்த மதக்காரர்கள் அவர வர் நம்பிக்கையிலேயே இருக்கின்றனர். அதே வேளை கொள்கையாகவும் அறிவாற்றலாகவும் இது இப்படித்தான் என்று ஒத்துக் கொண்டிருக்கி றோம். உள்நிலையில் நாம் ஒருத்தருக்கு ஒருவர் எதிரியாக உள்ளோம். தன் ஏமாற்று சிந்தனை தரும் தடைகளை உடைக்காவிட்டால் எங்கள் ஒவ்வொரு வருக்கும் இடையில் ஒத்துழைப்பே இருக்க முடி யாது. ஒரு கூட்டத்தோடு ஒரு குறிப்பிட்ட கருத் தோடு ஒரு கொள்கையோடு ஒன்றுபடுத்திக் கொள் வது இருக்கும்வரை ஒத்துழைப்பை ஒருபோதும் எங்களால் கொண்டு வர முடியாது. ஆகவே நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்குள் சிந்தித்து இந்த தன்னை ஏமாற்றும் செயலிலிருந்து விடு பட்டு பழைய அனுபவங்கள், முடிவுகள், கருத்துக் களை விட்டு விட்டு ஒரு பொதுவான பிரச்சனை யை ஒட்டிய ஓட்டத்திற்கு உடன்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

*- ஞா.மனோகரன்*

# உடன்பட மறுப்பவர்களுக்கு வழங்கப்படும் 'தீவிரவாதி' முத்திரை




**கோபி**
*ஒரு பேப்பர்*

சர்வதேச அதிகார மையங்கள் மீது நம்மவர்களில்சிலர் கொண்டிருக்கும் அதீதமான பக்திமயப்பட்ட நம்பிக்கையையிட்டும், அவ்வாறில்லாது அதிகாரங்களின் முகவர்களுடன் விவாதித்துக் கொள்பவர்களுக்கு வழங்கப்படும் 'தீவிரவாதி' முத்திரையையிட்டும் பேசவேண்டியுள்ளது.

அண்மையில் எனது நெடுநாளைய நண்பர் ஒருவரைச் சந்தித்தபோது, "அமெரிக்கா எமது விடயத்தை கையில் எடுத்துவிட்டது, நாங்கள் இனி எதுவும் செய்ய வேண்டிய அவசியமில்லை" என எம்மிருவருக்கும் தெரிந்த ஒரு மூத்தவர் கூறியதாகத் தெரிவித்தார். அத்துடன் நின்றுவிடாது, "இவர்கள்தான் முன்பு எமது போராட்டத்தை அழித்தார்கள், இப்போது உதவப்போவதாகக் கூறுகிறார்கள்" என்று அங்கலாய்த்த அவர், "எமது தலைமை இவர்களது ஆட்டத்திற்கு ஆடாது என்பதால் எங்களை அழித்தார்கள்' என்று விளக்கமும் கூறினார். இது போன்ற உரையாடல்கள் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது. இங்கு உட்கிடையாக ஒரு செய்தி சொல்லப்படுகிறது, சிலர் அதை வெளிப்படையாகவும் சொல்கிறார்கள். அதாவது, கடுங்கோட்பாளர்கள் அல்லது தீவிரவாதிகளை சர்வதேச சமூகத்தினர் விரும்புவதில்லை, விடுதலைப் புலிகளை தீவிரவாதிகளாகவே உலகம் அறிந்து வைத்திருந்தது, ஆதலால் அவர்கள் எமது போராட்டத்தினை அங்கீகரிக்கவில்லை அல்லது ஆதரிக்கவில்லை என்ற முடிவுக்கு வருகிறார்கள். உலகெங்கிலும் இயக்கங்களுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் 'தீவிரவாத' முத்திரை வழங்கப்படுவது உள்நோக்கம் கொண்ட அரசியல் நடவடிக்கை என்பதனை பலரும் கவனத்தில் எடுப்பதில்லை.

மேற்படி உரையாடலுடன் தொடர்புபடுத்தக் கூடிய ஒரு கருத்துப்பரிமாற்றம் கடந்தவார இறுதியில் ருவிற்றரில் (twitter) நடைபெற்றது. பேரழிவில் முடிவுற்ற விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளிற்கு அனுசரணையாளராக பணியாற்றிய நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக் சூல்ஹெய்ம் அவர்களுக்கும் ருவிற்றர் பதிவர்களான சில தமிழ்ச் செயற்பாட்டாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற இக்கருத்து மோதல் சர்வதேச அதிகார மையங்களின் பிரதிநிதிகளின் சிந்தனைப் போக்கை வெளிக்காட்டுவதாக அமைந்திருந்து. அண்மையில் சிறிலங்காவில் கிறிஸ்தவ தேவாலயங்கள் சில தாக்கப்பட்டதை குறிப்பிட்டு, "அங்கு எல்லாச் சமயத்தை பின்பற்றுபவர்களும் இணைந்து 'தீவிரவாதிகளுக்கு' (Extremists) எதிராக அணிதிரள வேண்டிய நேரம் வந்துவிட்டது' என ஒரு ருவிற்ர் பதிவினை சொல்ஹெய்ம் இட்டிருந்தார். இது தொடர்பில் தமிழ்ச் செயற்பாட்டாளரகளான சில பதிவர்களுக்கும் அவருக்கும் இடையில் நடைபெற்ற கருத்து மோதலில், சிங்களவர்களில் மட்டுமல்ல தமிழர்களிலும் தீவிரவாதிகள் இருப்பதாகவும் உதாரணத்திற்கு தமிழ்நெற் இணையதளம் தீவிரவாதிகளின் கருத்தை பிரதிபலிப்பதாகவும் சொல்ஹெய்ம் பதிவுகளை மேற்கொண்டிருந்தார்.

சர்வதேச அதிகாரங்களின் பிரதிநிதிகளைப் பின்பற்றும் தமிழர்களும், தமது கருத்துடன் முரண்படுபவர்களை 'தீவிரவாதிகளாக' காட்டும் இம்முயற்சிக்கு துணை போகிறார்கள். தமிழ் அரசியலில் இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், அதன் புலம்பெயர் ஆதரவாளர்களும் மிதவாதிகளாகவும், மற்றையவர்கள், தாயகத்திலிருந்து செயற்படும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து புலம்பெயர் அமைப்புகள் பலவும் 'தீவிரவாதிகளாக' அடையாயளப்படுத்தப்படுகிறார்கள். இதில் வியப்புக்குரிய விடயம் என்னவெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் கொள்கையை முன்னிறுத்தி மக்களிடம் வாக்குக் கேட்கிறதோ, அக் கொள்கையில் உறுதியாக உள்ள அதன் உறுப்பினர்கள் 'தீவிரவாதிகள்' என அவர்களது சகாக்களாலேயே அழைக்கப்படுகிறார்கள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனை அவரது கட்சியைச் சேர்ந்த சுமந்திரன் தீவிரவாதியாகக் குறிப்பிட்டமையை இங்கு ஒரு உதாரணமாகக் கொள்ளலாம்.

'Extremist' என்ற சொல்லுக்கு ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி பின்வருமாறு விளக்கமளிக்கிறது. 'A person who holds extreme political or religious views, especially one who advocates illegal, violent, or other extreme action'. அரசியல் அல்லது சமயம் தொடர்பான கொள்கைளில் தீவிரமான கருத்துடையவர்கள், குறிப்பாக சட்டவிரோதமான, வன்முறையுடன் கூடிய தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுபவார்கள்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால், தமிழ்நெற் இணையதளத்தையோ, தமிழ்ச்செயற்பாட்டாளர்களையோ தீவிரவாதிகளாகக் கருத முடியாது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என அடையாளப்படுத்தப்படும், தாயகம்-தேசியம்-தன்னாட்சி உரிமை ஆகியவற்றை வலியுறுத்துபவர்களும், ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கபடுகிறார்கள் என்பதனைக் கூறிவருபவர்களும் இன்று 'தீவிரவாதிகளாக' அடையாளப்படுத்தப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. விடுதலைப்புலிகள் மீது இதே சக்திகளால் குற்றப்பட்ட 'பயங்கரவாத' முத்திரை ஒரு பாரிய இனவழிப்பின்போது உலகமக்களையே மௌனமாக வைத்திருந்தது என்ற நேற்றைய அனுபவத்திலிருந்து இதனை உற்று நோக்கினால், இவ்வாறான 'தீவிரவாத' முத்திரையின் பின்னால் ஒளிந்திருக்கும் அரசியலை அறிந்து கொள்ளமுடியும்.

மகாவம்ச மனோநிலையில் உள்ள சிங்கள பௌத்த பேரினவாதமே இலங்கைத்தீவில் உள்ள இனமுரண்பாட்டுக்கான காரணமாக இருக்கின்ற போதிலும், அதனை மறுத்து இனங்களின் மத்தியில் செயற்படும் தீவிரவாதிகளினால் ஏற்படுத்தப்படும் பிரச்சனையாக அடையாளங்காட்டவே வெளித் தரப்புகள் முயன்று வருகின்றன. சிங்கள, தமிழ்த் தரப்புகளிலுள்ள தீவிரவாதிகள் அகற்றப்படும் போது, அல்லது அவர்கள் வலுவிழக்கச் செய்யப்படும்போது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் பேணப்படும் என இவை கற்பிக்க முனைகின்றன. சிங்கள மக்களில் பெரும்பகுதியினர் ஒரு நியாயமான தீர்வு முயற்சிக்கு ஆதரவு வழங்குவார்கள் எனவும், ஆதலால் அவர்களுக்கு ஏற்புடைய தீர்வினையே வலியுறுத்த வேண்டும் எனவும் மேற்படி தரப்பினரால் ஆலோசனை வழங்கப்படுகிறது. இது இலங்கைத்தீவில் உள்ள பிரச்சனைகளை விளங்கிக்கொள்வதில் ஏற்பட்ட ஒரு குறைபாடு எனக் கருதிவிடமுடியாது. மாறாக உலக வல்லாதிக்கங்கள் தமது விருப்பத்திற்குரிய தீர்வினை திணிக்க முயல்கின்றன என்றே எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அதற்கேற்ப உள்ளூர் அரசியலை மாற்றியமைத்தலே அவர்களது இன்றைய நடவடிக்கையாக அமைந்திருக்கிறது.

சர்வதேச சக்திகளின் கருத்துகளை ஏற்று காலனித்துவ காலத்து விசுவாசத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற கருத்துக் கொண்டவர்கள் பெரும்பாலும் முந்தைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள். எனினும், அந்திமகாலத்தை அண்மித்திருக்கும் இவர்களை தமிழ்மக்களின் தலைவர்களாக முன்னிறுத்தப்படுவதில் பல்வேறு தரப்பினரும் ஒன்றுபட்டுள்ளார்கள். இவ்விடயத்தில் முரண்படுபவர்களை தீவிரவாத எதிர்ப்பு (Counter insurgency) நடவடிக்கையின் மூலம் கட்டுப்படுத்தலாம் என்பதே தீவிரவாத முத்திரை வழங்கலின் பின்னாலுள்ள அரசியல். இவ்வணுகுமுறையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கும், மேலைத்தேச ஜனநாயக நாடுகளுக்கும் இடையில் அதிக வேறுபாடுகளில்லை. சிறிலங்கா இராணுவ முறையில் அணுகுவதனை, மேலைத்தேச நாடுகள், மென் நடைமுறைகளின் மூலம் கையாளுகின்றன.

**மகாவம்ச மனோநிலையில் உள்ள சிங்கள பௌத்த பேரினவாதமே இலங்கைத்தீவில் உள்ள இனமுரண்பாட்டுக்கான காரணமாக இருக்கின்ற போதிலும், அதனை மறுத்து இனங்களின் மத்தியில் செயற்படும் தீவிரவாதிகளினால் ஏற்படுத்தப்படும் பிரச்சனையாக அடையாளங்காட்டவே வெளித் தரப்புகள் முயன்று வருகின்றன.**

கூட்டமைப்பும் அதன் ஆதரவாளர்களும் காலனித்துவ விசுவாசத்துடன் நடந்துகொண்டாலும், தங்களிடம் ஒரு அரசியல் மூலோபாயம் இருப்பதாகவே அவர்கள் கருதுகிறார்கள். சர்வதேச சக்திகள் முன் தாம் கீழ்ப்படிவானர்களாகவும், அவர்களது கருத்துகளை ஏற்று நடப்பவர்களாகவும் காட்டிக் கொள்ளுவதன் மூலம் சர்வதேச ஆதிக்கசக்திகளின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சிறிலங்கா அரசாங்கததை அவர்களுடன் முரண்படவைக்க முடியும் எனவும் அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அதனடிப்படையிலேயே அவர்களால் வெளியிடப்படும் கருத்துகள் அமைந்துள்ளமையை அவதானிக்க முடியும்.

- நாங்களும் தவறிழைத்திருக்கிறோம்
- இரண்டு பக்கமும் போர்க்குற்றங்களைச் செய்திருக்கின்றன
- சிங்கள மக்களுக்கு ஏற்புடைய தீர்வையே நாங்கள் வலியுறுத்த வேண்டும்
- பிரிந்து செல்லாத ஒற்றையாட்சி முறையையே வேண்டி நிற்கிறோம்
- நாம் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படுகிறோம் எனக் கூறமுடியாது

இவை வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும் கருத்துகள் மாத்திரமே. ஆனால் வெளித்தரப்புகளுடனான உள்ளகச் சந்திப்புகளில் எவ்வாறான கருத்துகள் வெளியிடப்படும் என்பதனை இவை கோடி காட்டுவதாக அமைந்துள்ளன.

இறுதியாக, அனைத்துலக மட்டத்தில் தமிழ் மக்களுக்கான ஆதரவுச் சக்திகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலோ, அத்தகைய ஆதரவு எல்லாத்தளங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் இக்கட்டுரை முழுமையாக உடன்படுகிறது. ஆனால் அத்தகைய ஆதரவைப் பெறுவதற்கு காலனித்துவகால நடைமுறைக்குச் சென்று 'தருவதைப் பெற்றுக்கொள்வோம்' எனற நிலைக்குச் சென்றுவிட முடியாது என்பதனை வலியுறுத்துகிறது.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper

## ஒரு பேப்பர்
### கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant. | 020 8640 4230 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| Best Food | 020 8692 9811 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri store ltd | 020 8553 7737 |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W. | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **Coventry** | |
| Eellakanthan Temple | 02476663554 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Palm Palace Restaurant | 020 8574 9209 |
| Spicy Palace Restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

Most Trusted and Reliable Name in the Trade Since 1985



GlenCarriers

Laksiri Seva

Services We Offer;

- இலங்கை மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை
- தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
- பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வீட்டுக்கு வீடு சேவை
- உங்கள் பொருட்களை நம்பிக்கையுடன் பாதுகாப்பாக உரிய நேரத்தில் அனுப்பி வைக்கவும் மேலும் 36 க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திச் செல்லப்படும் ஒரே ஒரு நிறுவனம் கிளென் கரியர்ஸ்

- Sea Freight and Air Freight
- Full Container (20ft and 40 ft)
- Pick-up and Delivery Services in UK and EU
- House Removals with FREE Survey

இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள் — Laksri Seva Customs Bonded Warehouses

Collection from £ 10 within London *

Collection from your door point in any part of UK or Europe*

2 x Tea Carton for £ 19.50 *

* Conditions Apply

**Colombo Warehouse**
Laksiri Seva Pvt Ltd.
66, New Nuge Road,
Peliyagoda, Colombo
+94 1129 177 29-31

**Eastern Province Warehouse**
Laksiri Seva Pvt Ltd.
26, Hmyl Lane, Main Street,
Addappallam, Ninthavur.
T: 0672 0510 50-51

அழையுங்கள் : 020 8743 7353

Mon - Sat : 9:30am to 5:30pm
Sun: 10:30am to 2:00pm

Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ


# 8ம் ஆண்டு நினைவஞ்சலி

In loving Memory of

## Yalini Logeswaren

*Who left us on 23rd January, 2006.*

*A wonderful daughter, wife, mother, sister and aunt.*



அமரர்

**திருமதி. யாழினி லோகேஸ்வரன்**

(Jaffna – Urumpirai)

மலர்வு: 16-11-1955

உதிர்வு: 23-01-2006

***Our Dearest Darling Daughter Yalini***

*Eight years, since you left us, we are in agony and pain*
*Only consolation is your memory and a Lovely grandson.*

*- Your ever Loving Ammah and Aiyah (Canada)*

***Dearest Ammah***

*Lonely is my home without you, Life to me is not the same.*
*Always remembered and still sadly missed by*

*- Your loving son- Nimalan (Australia)*

***Dearest Acca***

*Although it has been many years since your departure, the pain is still so strong in our hearts. We miss you so much, but you are still with us. That's the thing about love, it never dies.*

*- Ever Loving Sister Sharmini and Bhavan (London)*

***Our Periyammah***

*Eight years have gone by periyammah, but not a day goes by when we do not cherish our memories with you.*
*You continue to inspire us and guide us through our lives.*
*We shall remember and love you forever.*

*- Kavin and Surabi (London)*

***Our Yalini Mamee***

*We continue to celebrate your life as our loving mother, wife, sister and aunt.*
*Your are dearly remembered and respected by all your family members.*
*It does not feel like many years have gone by, since you have become dear to god.*
*Unfortunately you are not among us anymore but we live with your memories, which will always be with us.*
*You continue to rest in peace while we keep you warm in our hearts.*

*- Nisha (Canada)*

***Yalini Mamee,***

*I miss you, love you and think about you all the time.*
*I know you are with us in spirit guiding us through life. You will forever be in my heart.*
*"There are no good-byes, where ever you'll be, you'll be in my heart"*

*- Your niece, Thushy (Canada)*

***Our Yalini Aunty***

*No matters how many years pass, we will hold you close in our hearts.*
*Your life has filled us with memories too beautiful to forget.*
*Our thoughts and prayers are always with you.*

*- Ambi and Aarany (Australia)*

***Dearest Wife Yalini***

*Many a tear I've shed since you left me,*
*Many more will continue to fall,*
*You took my happiness with you,*
*nd I know in heaven above,*
*You are waiting for me.*

*- Ever loving Loges*

# இனவழிப்பை நிறுவ, நிறுத்த.....



*The Rome-based Permanent Peoples' Tribunal (PPT)*

பரா பிரபா

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையின் 25வது கூட்டத்தொடர் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது. இதில் சிறீலங்கா அரசாங்கம் மீது முறையான அழுத்தம் பிரயோகிக்கும் பிரேரணை நிறைவேற்றப்படுமா என்பது தெரியவில்லை. தமிழின அழிப்பை நிறுவ, நிறுத்த அனைத்துலக சுயாதீன போர்க்குற்ற விசாரணைக்கு வித்திடப்படுமா என்பதே புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது இருக்கும் கேள்வி. சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிராக ஒரு பிரேரணை கொண்டு வரப்பட்டால், மனித உரிமைகள் சபையில் உள்ள 47 நாடுகளில் எவை சிறீலங்கா ஆதரவாகவும், எதிராகவும் வாக்களிக்கும் என்பது முதலாவது கேள்வி. இதற்குப் பின்புலத்திலுள்ள இராசரீக நகர்வுகள் எப்படி இருக்கும் என்பது மற்றொரு கேள்வி. புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் என்ன செய்ய முடியும், அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்களா என்பன தொடர்ந்து வரும் கேள்விகள்.

முதலில் நாம் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். சிறீலங்கா அரசாங்கம், மற்றும் அதன் படைகள் மீது போர்க்குற்ற விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் சபை ஊடாகத்தான் செல்ல வேண்டும் என்ற நியதி இல்லை. இது பற்றி முன்னர் ஒரு தடவை விரிவான ஆதாரங்களுடன் பார்த்திருந்தோம். அதாவது சிறீலங்கா போன்று 'ரோம் சாசனத்தில்' கையெழுத்திடாத சூடான் மீதும் அதன் அரச தலைவர் ஓமர், பாதுகாப்பு அமைச்சர் உட்பட பலர் மீது அனைத்துலகப் பிடியாணை எப்படிப் பிறப்பிக்கப்பட்டது என்பது பற்றியும் நோக்கினோம். சூடான் பழங்குடிக் கறுப்பின மக்கள் மீது நடத்தப்பட்டது இனவழிப்பு என்பது, தொண்டு நிறுவனங்களும், மனித உரிமை அமைப்புக்களும் முன்னின்று நடத்திய போர்க்குற்ற வழக்கில் நெதர்லாந்து ஹேக் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது.

தமிழர் தாயகத்தில் இனவழிப்பின் உச்சக் கட்டம் நிகழ முன்னதாக 2008ஆம் ஆண்டு திட்டமிட்டு சிறீலங்கா அரசாங்கத்தால் அங்கிருந்த செஞ்சிலுவைச் சங்கம் உட்பட வெளிநாட்டு தொண்டமைப்புக்கள், மனித உரிமை ஆர்வலர்கள், மற்றும் ஊடகங்கள் வெளியேற்றப்பட்டதுடன், போர் உச்சம் கண்டபோது உணவையும், மருந்தையும் தமிழர்களை அடிபணிய வைக்கும் போராயுதமாகவும், பேராயுதமாகவும் பயன்படுத்திய சிறீலங்கா அரசாங்கம், அடிப்படைத் தேவைப்பொருள்களைக்கூட எடுத்துச்செல்ல வெளிநாட்டு அமைப்புக்களுக்கு அனுமதி மறுத்திருந்தது. அந்த நேரத்தில் தனது அதிகாரத்தைக் கொண்டு அரசாங்கத்தை அடக்கி, அப்பாவி மக்களைக் காப்பாற்றியிருக்க வேண்டிய ஐக்கிய நாடுகள் சபை அதனைக் கண்டு கொள்ளாது இருந்து பாரிய மனிதப் பேரவலத்திற்குத் துணைபோனது.

நாம் மேலே சொன்ன இரண்டு செயற்பாடுகளும், தமிழ் மக்களிற்கான உடனடித் தீர்விற்கோ, அல்லது மேற்குலக நாடுகளின் நேரடித் தலையீட்டுக்கோ உடனடியாக வழிகோலும் என எதிர்பார்க்க முடியாது. ஜெனீவா ஐக்கிய நாடுகள் சபையில் சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிராக ஒரு கடுமையான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், நெதர்லாந்து ஹேக் அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றில் ஒரு வழக்கு நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்டாலும், அவை நியூயோர்க்கிலுள்ள ஐ.நா தலைமையலுவலகத்தின் பரிசீலனைக்கும், இறுதி முடிவிற்கும் விடப்படும் வாய்ப்பு உண்டு. ஜெனீவா அல்லது ஹேக் வழங்கும் பரிந்துரையின் அடிப்படையில் ஐ.நா பாதுகாப்புச் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அந்தத் தீர்மானம், வீற்றோ அதிகாரம் கொண்ட அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஸ்யா மற்றும் சீனா ஆகிய ஏதாவது ஒரு நாட்டினால் இலகுவாகத் தோற்கடிக்கப்படலாம். இவற்றில் முதல் மூன்று நாடுகளும் சிறீலங்காவிற்கு எதிராகச் செயற்பட்டாலும், பின்னிரண்டு நாடுகள் பற்றி தமிழ் மக்கள் நன்கறிவர். பான் கி-மூனின் நிபுணர் குழு அறிக்கை வெளியிட்டதற்கே ரஸ்யா கண்டனம் வெளியிட்டதை யாரும் மறந்திருக்கமாட்டீர்கள்.

தமிழ் மக்களின் விடிவிற்காக அயராது பணியாற்றுபவர்கள் மனம் சோர்ந்து போக வேண்டும் என்பது இப்பத்தியின் நோக்கம் அல்ல. மாறாக அவர்களும், அவர்களால் வழிநடத்தப்படும் மக்களும் குறுகிய கால எதிர்பார்ப்பின் அடிப்படையில் பணியாற்றி, மீண்டும், மீண்டும் ஏமாற்றங்களைச் சந்தித்து, சோர்ந்து போகக்கூடாது என்பதற்காகவும், தூரநோக்குடன் செயலாற்ற வேண்டும் என்ற விருப்பில் எழுத்தப்படும் பத்தியாக இதனைப் பார்த்தால் நன்று. தமிழ் மக்கள் மீது நடந்ததும், நடைபெற்றுக்கொண்டிருப்பதும் இனவழிப்பு என்பதை எதிர்காலத்தில் நிறுவ தமிழ் மக்கள், குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் திட்டமிட்ட அடிப்படையில் தொடர்சியாகப் பணியாற்றுதல் என்பது இன்றியமையாத ஒன்று. இவ்வாறு பணியாற்றக்கூடிய எத்தனை அமைப்புக்கள் அதற்குரிய வளங்களுடன் எம்மத்தியில் உள்ளன என்பதையும் நாம் உற்றுநோக்க வேண்டும். இந்த அமைப்புக்கள் மனித உரிமை அமர்வை முன்னிட்டு எவ்வாறான வேலைத்திட்டங்களை இதுநாள்வரை முன்னெடுத்தன என்பதையும் பார்க்க வேண்டும். குறித்த அமைப்பு அல்லது நிறுவனம் தமிழ் மக்களிற்காக முறையாகப் பணியாற்றுகின்றது என்பதைக் கண்டறிந்தால், அதற்கு எவ்வாறு ஆதரவாகவும், உதவியாகவும் இருப்பது என்பது பற்றியும் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். ஏனெனில் எழுதுவதும், விமர்சனம் செய்வதும் மிகவும் இலகு, இறங்கிநின்று வேலை செய்தால் அதன் வலி புரியும் என்பது இந்த அமைப்புக்களின் வாதமாக இருந்து வருகின்றது.

சிறீலங்கா அரசாங்கம் தமது இவ்வாறான பரப்புரைகளுக்கு பல மில்லியன் ரூபாய்களை செலவுசெய்து வருகின்றது. பிரித்தானிய தனியார் நிறுவனம் ஒன்றை பரப்புரைக்காக பல மில்லியன் செலவில் அமர்த்தியது உட்பட, தமது அரசாங்க அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங்கள், தூதரக செயற்பாடுகள், கொழும்பிற்கு அழைத்து வேறு விதமாகக் கவனித்தல் போன்ற பல முனைச் செற்பாடுகளை அது மேற்கொள்ளும். கடந்த சில மாதங்களாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலர் கொட்டாபய ராஜபக்ச அமெரிக்கா, இத்தாலி போன்ற நாடுகளுக்கு பயணம் செய்து பிரேரணையைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டது உட்பட முன்கூட்டிய பல செயற்பாடுகளை நாம் பார்க்கலாம். மறுபுறத்தில் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்களைப் பார்த்தால் எத்தனை பேர் தமது நாடுகளிலுள்ள அரசாங்கங்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஊடகங்களுடன் இணைந்து இதற்கான முன்கூட்டிய செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர் என்பது சரியாகத் தெரியவில்லை. ஐ.நா கூட்டத்தொடர் நடைபெறும்போது அங்கிருந்து நிழற்படங்களையும், காணொளிகளையும் எடுத்து தமிழ் ஊடகங்கள் மற்றும் இணையங்களில் அவசரமாக வெளியிடும் அமைப்புக்களும், செயற்பாட்டாளர்களும், தாம் அங்கு செல்ல முன்னர் என்ன விதமான எச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பதைப் புடம் போடுவது மிகவும் அவசியம்.

இந்த இடத்தில் பிரித்தானிய தமிழர் பேரவை வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், பிரித்தானிய பிரதமர் டேவின் கம்ரன் தமிழர் தாயகத்தில் வைத்து வெளியிட்ட கருத்தைச் சுட்டிக்காட்டி, அவருக்கு அழுத்தம் கொடுக்கும் மனுவொன்றை பிரித்தானிய தமிழர்கள் தமது தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. "நான் தெளிவாகச் சொல்லுகின்றேன், அடுக்க மார்ச் மாதத்திற்குள் விசாரணை முடிவடையாது விட்டால், ஐ.நா மனித உரிமைகள் சபையில் எமது உறுப்புரிமையைப் பயன்படுத்தி, மனித உரிமைகள் ஆணையாளருடன் இணைந்து - முழுமையான வெளிப்படையான அனைத்துலக சுயாதீன விசாரணை கோருவேன்?" என்ற பிரித்தானியப் பிரதமரின் கூற்றைக் கோடிட்டுக்காட்டி இந்த மனு வரையப்பட்டுள்ளது. இறுதிப்போரின்போது ஐந்து மாதங்களில் மட்டும் 70 ஆயிரம் போர் வரையில் கொல்லப்பட்டதாக ஐ.நா கூறுகின்ற போதிலும், 146,679 பேர் இதுவரை காணாமல் போயுள்ளனர் அல்லது கொல்லப்பட்டுள்ளனர் என்பதும் இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த மனுவை தமிழ் மக்கள் தமது தொகுதி நாடாளுமன்ற அங்கத்தவருக்கு அனுப்பி வைத்துவிட்டு இருந்துவிடாது. அவர்களை நேரில் கண்டு, தமிழின அழிப்பை நிறுவும் ஒரு ஆக்கபூர்வமான பிரேரணையை பிரித்தானியா முன்வைக்க வேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டும். இதில் கொன்சவேடிவ் கட்சிக்கான தமிழர்கள், தொழிற்கட்சிக்கான தமிழர்கள், மற்றும் லிப்டெம்மின் நண்பர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதையும் உற்றுநோக்க வேண்டும். இந்த செற்பாடு கனடா உட்பட புலம்பெயர்ந்த மக்கள் வாழும் அனைத்து நாடுகளில் ஒன்றிணைந்த விசையில் செயற்படுத்த வேண்டும்.

இம்முறை பொதுநலவாய மாநாட்டை இந்தியப் பிரதமர் புறக்கணித்திருந்தாலும், ஐ.நா பிரேரணை விடயத்தில் இந்திய வெளியுறவுக் கொள்கை என்ன என்பதை இலகுவில் புரிந்துவிட முடியாது. முன்னர் சிறீலங்காவிற்கு எதிரான பிரேரணைகள் தோற்றமைக்கு இந்தியாவும், அதன் நட்பு நாடுகளும் காரணமாக இருந்தன. இதில் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட இந்தியாவுடன், மலேசியாவும் எதிராக இருந்தமை மட்டுமன்றி, விடுதலைப் போரை நடத்திய கியூபா போன்ற நாடுகளும் அமெரிக்க எதிர்ப்புக்கொள்கை காரணமாக, இன்னொரு விடுதலை கோரும் இனத்திற்கு எதிராக வாக்களித்திருந்தன. இவ்வாறான நாடுகள் மத்தியில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் செய்யும் பரப்புரை பற்றிய புரிதல்கள் தமிழ் மக்களிற்கு இருத்தல் அவசியம்.

கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட பிரேரணையில், தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட 'கற்றுக்கொண்ட பாடங்களும், நல்லிணக்க ஆணைக்குழுவின்' பரிந்துரைகளை நிறைவேற்ற மேற்குலகால் ஒருவருட கால அவகாசம் சிறீலங்கா அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இப்பொழுதும் மீண்டும் சில வருடங்களை இழுத்தடிக்கவும், போர்க்குற்றம் புரிந்த படையினருக்கு பொதுமன்னிப்பு வழங்கவும் தென்னாபிரிக்கவின் 'உண்மையைக் கண்டறிதலும், நல்லிணக்கத்துக்குமா ஆணைக்குழு' பற்றி சிறீலங்கா அரசாங்கம் கரிசனை காட்டுகின்றது. இந்த கால வீண் விரையத்திற்கு இடமளித்தால், மேற்குலகம் வேறு திசையில் இழுத்துச் செல்லப்படுவதும், தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வின்று மழுங்கடிப்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகவிடும் அபாயம் இருக்கின்றது. தமிழின அழிப்பை நிறுவ, நிறுத்த - அனைத்துலக சுயாதீன போர்க்குற்ற விசாரணையின் அடிப்படையிலான பிரேரணை ஒன்றை பிரித்தானியா முன்மொழிவதுடன், அதனை மனித உரிமைகள் பேரவையில் உள்ள பெரும்பான்மையான நாடுகளை ஆதரிக்கச் செய்வது மிகவும் இன்றியமையாதது.



# எங்கள் நிலம் எமக்கு வேண்டும்
# எங்கள் நிலமே எமக்கு வேண்டும்....

**சுகி**

*(ஒரு பேப்பருக்காக)*

முன்பு ஒரு காலத்தில் வேலிச்சண்டை என்பது பெரிதாக, ஆங்காங்கு பேசப்படும் விடையமாக இருந்தது. வேலிச்சண்டையால் வருடக்கணக்காக, முகம் பார்க்க முடியாத கோபத்தில் ஆளுக்காள் பேச்சுவார்த்தை இல்லாத குடும்பங்களும் இருந்தன. இந்த வேலிச்சண்டை அதிகமாக வேலி அடைக்கும் போது வேலிகதியால்களை அரை அடி அல்லது ஒருசாண் அரக்கி வைத்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் தொடங்கி பிறகு அடி தடி, பெரிய வெட்டுக் கொத்து என்றும் முடிவதுண்டு. பார்த்தால் எல்லாம் ஒரு சாண் நிலத்துக்காகத்தான் கடைசியில் இருக்கும். முன்பு சிறுக சிறுக சேமித்து, நிலம் வேண்டி, அதை பண்படுத்தி, தோட்டம் துறவு என்றும், நடுவே ஒரு அழகாக வீடு என்றும் பார்த்து பார்த்து கட்டுவார்கள். எலிவளையானாலும் தனிவளை வேண்டும் போல, சிறிய வீடு என்றாலும் சோலை போல சிறப்பாக வைத்திருப்பார்கள். காலப் போக்கில் வீட்டை சுற்றி மதில்கள் வரத் தொடங்க இந்த வேலிச்சண்டைகள் அருகி போய்விட்டது. ஆனால் காணிகள், நிலங்களில் இருக்கும் பற்றும் பாராமரிக்கும் விதமும் மாறவில்லை.

*“சொந்த வீட்டில் சொந்த வளவில், நட்ட மரங்களின் நிழலில் கூடி*

*உறவுகள் சேர்ந்து கதைகள் பேசி மீண்டும் நாங்கள் உயிர்த்திடவே*

*எங்கள் கோயில் மணிகள் யாவும் வந்தோம் என்று ஒலித்திட வேண்டும்”*

இப்படி பாதுகாத்த எம் மண்ணை, பின்பு இராணுவத்தினரிடம் இருந்து மீட்டெடுக்கும், மண் மீட்பும் போர், அடுக்கடுக்காக எத்தனை நிகழ்ந்தது. ஒவ்வொரு அடி நிலத்தையும் எம் போராளிகள் எவ்வளவு உயிர்தியாகங்களை செய்து பெற்றார்கள். ஓயாத அலைகள் அலை அலையாக அடித்து ஓய்த போது, வெற்றியீட்டிய நிலங்களைப்பற்றி பேசி மகிழ்ந்தோம், அதில் மாவீரரானவர்களின் பெயர்கள் நினைவில் உள்ளனவா? எத்தனை போராளிகள் கிடங்கெடுத்து இருந்த நிலைகளில் இருந்து இம்மியளவும் பின்வாங்குவதில்லை என்ற மன உறுதியோடு சாவு கண்முன்னே தெரிந்தும், எமது மண்ணை மீட்க வேண்டும் என்ற உறுதியோடு போராடி கைப்பற்றினார்கள்.

*“அப்புவும் ஆச்சியும், பாட்டனும் பாட்டியும், மாமனும் மாமியும் ஒன்றாய்க் கூடி*

*ஊரைக் கூட்டி உலகம் போற்ற உயர்ந்த வாழ்வு மனம் போல வாழ*

*கயவர் கால்கள் தீண்டிய மண்ணை கடல் நீர் கொண்டு கழுவிட வேண்டும்”*

எமது போராளிகள் செங்குருதியால் நனைந்து பெற்ற எம் நிலத்தை, இன்று சிங்கள அரசு என்ன செய்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக சுவீகரிக்கிறது. பசுமையாக, வளமான மண்ணை பறித்துக் கொண்டு, கட்டாம் தரையாக புல் பூண்டு கூட முளைக்காத வளமற்ற நிலங்களில் தமிழ் மக்களை குடியேற்றுகிறது. காணும் இடங்களில் எல்லாம் புத்தர் சிலைகளை வேண்டும் என்றே திட்டமிட்ட வகையில் வைத்து வழிபாடு செய்கிறது. ஏ9 பாதையில் எல்லாமாக எத்தனை புத்த சிலைகள் 2009 இன் பின்பு மழைக்கு வரும் காளன்போல தோன்றியுள்ளன.

*“எங்கள் மறவர்கள் குருதியைச் சிந்திய மண்ணினை விழுந்து வணங்கிட வேண்டும்*

*ஊரின் வயல்கள் வரம்புகள் யாவும் சிட்டென பறந்து திரிந்திட வேண்டும்*

*நிழல்கள் தந்த மரங்கள் தழுவி நலமா என்று கேட்டிட வேண்டும்”*

ஒரு சின்ன சிலையை வைக்கும் போது, சின்ன சிலைதானே என்று பேசாமல் எமது அரசியல்வாதிகள் இருப்பதாலும், பிழை என்று தெரிந்த பொதுமக்கள் இராணுவ கெடுபிடிகளுக்கு அஞ்சி வாளாது இருப்பதாலும், அந்த சின்ன சிலை இருந்த இடம் ஒரு மாதத்தில் கற்கள் சுத்தவர அடுக்கி ஒரு வழிபாட்டு நிலமாக மாறி ஒருவருடத்திற்குள் இடத்திற்கேற்ற சிறிய, பெரிய புத்த கோயிலாக உருப்பெற்று விடுகின்றன. இனி கோயிலுக்கு வந்து போகும் சிங்கள மக்களுக்கு, சாப்பாட்டு கடைகள், அதை வைத்திருப்பரின் வீடு, கோயிலை பாராமரிப்பவர்களின் வீடு, என்று அந்த நிலத்தின் உண்மையான தன்மையே உருக்குலைந்து புதியதொரு புத்தர் வழிபாட்டு இடமாகத் தோற்றம் பெற்று விடும். உருப்பெற்ற கோயிலை 2,3 வருடங்களில் பின் இடிப்பது என்பது, பாபர் மசூதி இடித்த கதை போல உலகையே உலுக்கும் விடையமாகிவிடும், தமிழ் அரசியல்வாதிகளுக்கு, மக்கள் தான் அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். சிங்கள அரசு இதை திட்டமிட்டே செய்கிறது.

*“ஒவ்வொரு கல்லாய்ப் பொறுக்கி, அடுக்கி கட்டிய வீட்டில் கால்கள் பதிக்க*

*செந்நீர் கொட்டி சிவந்த மண்ணில், வளமது கொண்டு வாழ்வு சிறக்க*

*மீண்டும் எங்கள் ஊரில் கூடி பொங்கி நாங்கள் பகிர்ந்திட வேண்டும்”*

அண்மையில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் அரச ஆதரவுடன் ஏற்கனவே பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்ட நிலையில், அண்மையில் கொக்குத் தொடுவாய் மக்கள் குடியிருப்புக்கு அண்மையில் உள்ள கோட்டைக் கேணி, குஞ்சுக்குளம், அம்பட்டம் வாய்க்கால், கொத்தியகாடு, வெளிதொட்டக்கண்டக்குளம், வெள்ளக்கல்லடி ஆகிய பகுதியைச் சேர்ந்த சுமார் 345 ஏக்கர் பரப்பளவுள்ள தமிழர் குடியிருப்புகள் அபகரிக்கப்படுவது மக்களின் உந்ததாலும், வட மாகாணசபை உறுப்பினர் தலையீட்டினாலும் கனரக இயந்திரத்தை காட்டுக்குள் மறைத்து விட்டு சிங்களவர் ஓடியதாக படத்தோடு செய்தி வந்தது. இப்படி தெரிந்தும், தெரியாமலும் நாளுக்கு நாள் தமிழர் நிலங்கள் பறிபோகின்றன. மண் பறி போகும் போது அம் மண்ணின் கலை, பண்பாடு, கலாச்சாரம், மொழி எல்லாமே பறிபோய் விடுகின்றது

இதற்கு திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு பகுதிகளில் பாரம்பரிய தமிழ் நிலங்கள் இந்த 60 வருட போராட்ட கால வரலாற்று பகுதியில், பலவந்தமாக பறிக்கப்பட்டு சிங்கள குடியேற்றமாக மாறி, இப்போது காட்சி அளிக்கும் நிலை அதற்கு சான்று பகர்கின்றது.

மேலும் மீள் குடியேற்றம், புணர்வாழ்வு என்ற பெயரில் புல் பூண்டு முளைக்காத தரிசு நிலங்களை தமிழர்க்கு வலுகட்டாயமாக கொடுத்து விட்டு எமது நிலங்களை அதிஉயர் பாதுகாப்பு வலையம், சுதந்திர பொருளாதார வலையம் என அரச உதவியுடன் அபகரிக்கின்றன. இச் செயலுக்கு முற்றுப் புள்ளி வைக்காமல் விட்டால், இவ்வினவழிப்பு தமிழர் என்ற இனத்தையே தாயகத்தில் இல்லாமல் செய்து விடும்.

எங்கள் நிலம் எமக்கு வேண்டும். எங்கள் நிலமே எமக்கு வேண்டும். தமிழ் பிரதேசங்கள் சிங்கள மயமாக்கப்படுத்தலை உடனே தடுத்து நிறுத்த அதற்கெதிரான சாட்சியங்களை சேகரிப்பதிலும், திட்டமிட்ட இனவழிப்பு இதன் மூலம் நடப்பதை ஆவணப்படுத்தி, அத்தாட்சிப்படுத்தவும் பிரித்தானிய தமிழர் பேரவை தீவிரமாக செயல்படுகிறது. நில அபகரிப்பு பற்றிய தகுந்த ஆதாரங்களை சேகரிப்பதற்கு தமிழ் மக்களிடம் இருந்து படங்கள், ஒளிப்பதிவுகள், சாட்சி அறிக்கைகளை கோரிநிற்கிறது. மேலதிக விபரங்களுக்கும், தகவல்களை பகிர்ந்து கொள்ளவும்

admin@tamilsforum.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளும் படி வேண்டப்படுகிறீர்கள்.

- South East London- 07517461685
- Northeast London - 07940114059
- Northwest London – 07814484938
- Southwest London - 07907712060
- Outer London – 07533381189 / 07927023912

*கருத்துக்களுக்கு -*
*facebook.com/orupaper @orupaper*






# இலங்கையில் நடந்தது இனஅழிப்புத்தான்




*(ஜெர்மனி பிறேமன் நகரில் டிசம்பர் 2013 இல் நடைபெற்ற நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தில் கனடா வின்சர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் கவிஞர் உ. சேரன் முன்வைத்த வாதத்தின் முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம்)*

இனப்படுகொலை (Genocide) என்பது மிகவும் சிக்கலான, பேரதிர்ச்சி தரும் ஒரு நிகழ்வு. இதனை வெறுமனே அனைத்துலகச் சட்டங்கள் மூலம் மட்டுமே புரிந்து கொள்ள முயல்வதும் வரையறை செய்ய முற்படுவதும் சாத்தியமில்லை என்பது எனது வாதம் ஆகும். நடைமுறை, செயற்பாடு என்ற வகையில் இனப்படுகொலையாளரைக் குற்றக் கூண்டுக்குள் சிறைப்படுத்துவதற்குச் சட்டங்களும் சட்டத்துறை சார்ந்த நுண்மையான நிபுணத்துவமும் அவசியம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன் எனினும், ‘இனப்படுகொலை என்பது என்ன?’ என வரையறை செய்வதிலும் பல்வேறுபட்ட வடிவங்களில் இடம்பெறும் இனப் படுகொலைகளை இனங்கண்டு கொள்வதிலும் அனைத்துலகச் சட்டத்துறை போதுமானதலல்ல எமக்கு சமூகவியல், மானுடவியல், மானுடப் பண்பியல் சார்ந்த அணுகுமுறைகளும் அவசியம் என்பதைப் பல சட்டவல்லுநர்களும் புலமையாளரும் மீள மீள வலியுறுத்துகின்றனர். 1948ல் உருவாகக் பப்பட்ட இனப்படுகொலை தொடர்பான ஜெனிவா உடன்படிக்கை (Geneva Convention) இன்றைய காலத்துக்கேற்ற வகையில் புதுமையும் மாற்றமும் பெறவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். அனைத்துலகச் சட்டங்களும் அவற்றின் எண்ணக்கருக்களும் மெல்ல மெல்லப் பரிணாமம் பெற்று வருகின்றன என்பது உண்மை எனினும் உலக நிகழ்வுகளும் போரும் வன்முறையும் படுகொலைகளும் மிக விரைவாகப் பெருகிவிட்டன என்பதையும் நாம் கவனத்திலெடுக்க வேண்டும். இந்த வேகத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில் அனைத்துலகச் சட்டங்களும் சட்டப் பொறிமுறைகளும் மாற்றமும் வளர்ச்சியும் பெறவில்லை. இனப்படு கொலை தொடர்பாகவும் எமக்குப் புதிய வரைவிலக்கணங்களும் பார்வைகளும் மிக அவசியமாக உள்ளன.

எனவே, ஹெலன்பெயின் (1990) என்னும் அறிஞரின் கருத்துக்களை வழிமொழிந்து இனப்படுகொலை என்பதைப் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்ய விரும்புகிறேன். ‘தொடர்ச்சியாகவும் திட்டமிடப்பட்ட முறையிலும் ஒரு மக்கள் கூட்டத்தை அல்லது இனக் குழுமத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் சமூகநிலை சார்ந்தும் உயிர்முறை சார்ந்தும் அழித்தொழிக்க முனைவது அல்லது அழித்தொழிப்பது இனப்படுகொலை ஆகும் என்பது பொருத்தமான எளிமையான அதேநேரம் சுருக்கமான வரைவிலக்கணமாக அமைய முடியும் என நான் கருதுகிறேன். இப்போது நடைமுறையிலிருக்கும் அனைத்துலகச் சட்டங்கள், அனைத்துலக நிறுவனங்கள், ஐக்கியநாடுகள் அவை, அனைத்துலக நாணய நிதியம் போன்ற அமைப்புக்கள் அனைததுமே ‘நாடு - அரசு’ (Nation – State) என்பதை மட்டுமே கருத்திலும் கவனத்திலும் நடைமுறையிலும் கொண்டவை நாடுகள் இல்லாத எந்தத் தேசிய இனம்/ இனக் குழுமம் / மக்கள் கூட்டத்துக்கு இத்தகைய அமைப்புக்களில் பிரதிநிதித்துவமும் கிடையாது, அவை பற்றிய அக்கறையும் இல்லை. நாடற்ற தேசியங்கள், இடமற்ற இனக் குழுமங்கள், பல நாடுகளுக்கிடையே சிக்குண்டு கிடக்கும் புவியியலில் சிதறிக் கிடக்கும் குர்தீஷ் மக்கள், காஷ்மீர் மக்கள், தமிழர் போன்ற இனக் குழுமங்களுக்கு இப்போதுள்ள அனைத்துலக நிறுவன அமைப்புக்களில் இடம் கிடையாது. நவீன இனப்படுகொலைகள் இத்தகைய மக்களை நோக்கித் தான் குறிவைக்கப்பட்டுள்ளன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகத் தன்னாட்சி அல்லது தனிநாடு அல்லது தமக்கெனச் சுயநிண்ய உரிமையைக் கோரும் மக்களை நோக்கியே இனப் படுகொலை ஏவப்பட்டுள்ளது என்பதை நாங் கள் அவதானிக்க முடியும். இதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

பிரேஸிலின் பூர்விகக் குடிகள் (1957 - 1968), திபேத் (1959லிருந்து இன் றுவரை), பயாஃபரா போர், நைஜீரியா (1967 - 1970), பரகுவேயில் அச்சே பூர்விகக் குடிகள் (1968 - 1978), பங்களா தேஷ் / கிழக்குப்பாகிஸ்தான் (1971), குவாட்டமாலா(1968 - 1996), ஈழத்தமிழர்கள் (1983 -2009). படுகொலைகள்,

இனத்துவச் சுத்திகரிப்பு (Ethmic Cleaning) போன்ற சொற்கள், சொற்றொடர்களின் பயன்பாட்டுக்கு இன்றைய அனைததுலகச் சட்டப் பொறிமுறைகளில் எந்த வகையான பயன்பாடும் இல்லை. இத்தகைய அநியாயங்களுக்கும் இனப்படு கொலைகளுக்கும் பொறுப்பாக இருப்பவை நாடுகளும் அரசுகளும்தான். இந்த நாடுகளும் அரசுகளும் சேர்ந்துதான் அனைத்துலகச் சட்டங்களையும் நீதி முறைமைகளையும் உருவாக்கியிருக்கிறார்கள். எனவே இவர்களிடமிருந்து, இனப் படுகொலையாளர்களிடமிருந்து எவ்வாறு முற்றான நீதியை எதிர்பார்க்க முடியும்? ஒன்றில் மறுப்பார்கள், அல்லது மறைப்பார்கள். அதுதான் அவர்கள் செய்வது. அனைத்துலகச் சட்டப் பொறிமுறைகள், நீதிமுறைமை என்பன ஆண்டுக்கணக்காக இழுபடக்கூடியவை அன்றே தீர்ப்பு வழங்கும் வலுவற்றவை. இதனால் இனப் படு கொலையாளர்களும் இனப்படு கொலை புரிந்த அரசுகளும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், தடயங்களை அழிக்கவும் நிறைய வாய்ப்பு விரும்பியோ விரும்பாமலோ வழங்கப்படுகிறது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தப் பின்னணியில் இரண்டு புதிய கருத்துருவங்களை அல்லது எண்ணக்கருக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன். இவற்றைப் பற்றி இனப்படுகொலை தொடர்பாகத் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் அலெக்சாந்தர் லபான்ஹன்டன் (2002), இஸரேல் சார்ணி (1994) போன்றோர் நிறையவே எழுதியுள்ளனர். முதலாவது ‘இனப்படுகொலைக்கான முன்னோடித் தயாரிப்பு’ (Genocidal Priming) என்பது. இரண்டாவது இனப் படுகொலையை உள்நோக்கமாகக் கொண்ட கூட்டுப்படுகொலைகள் (Genocidal Massacres). இந்த இரண்டு வழிமுறைகளும் பின்னர் இனப் படுகொலைக்கு நேரடியாகவே இட்டுச் செல்கின்றன. இனப்படுகொலைக்கான முன்னோடித் தயாரிப்பு என்பது ஆண்டுக் கணக்காக மெல்ல மெல்ல இடம்பெற்று வருவது, மாற்று இனத்தவர்களின் குடியேற்றம் வெறுப்பு ஏற்படக் கூடிய வகையில் ‘மற்றவர்’களைப் பற்றிக் கல்வியிலும் பாடப்புத்தகங்களிலும் வரலாற்றெழுதலிலும் சித்தரிப்பது, திட்டமிட்ட ஒடுக்குமுறை, பண்பாட்டு அழிப்பு என்பன இந்த வகையுள் அடங்கும்.

இலங்கை அரசு தொடர்ச்சியாகவும் திட்டமிட்டும் இத்தகைய நடவடிக்கைகளில் 1948 இலிருந்தே ஈடுபட்டு வந்தமை தொடர்பான ஆவணங்கள் தீர்ப்பாயத்துக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. 1956, 1958, 1977, 1983 ல் நடந்தேறிய ஈழத் தமிழருக்கு எதிரான ‘கலவரங்கள்’ இந்த வழிமுறையின் தர்க்கரீதியான விளைவுதான். இனப்படுகொலையை உள்நோக்கமாகக் கொண்ட கூட்டுப் படுகொலைகள் வெறுப்பின் அடிப்படையில் நிகழ்த்தப்படுபவை. விடுதலைப் போராளிகள் அரச படையினர் மீது தாக்குதல் தொடுத்தமைக்குப் பதிலடியாகப் பொதுமக்களை அழிப்பதும் ஊர்களை எரித்து அழிப்பதும் இலங்கையில் பரவலாக நிகழ்ந்தவை.

ஜூன் 1956 - டிசம்பர் 2008 காலப்பகுதியில் இனப் படுகொலையை உள்நோக்கமாகக் கொண்ட 145 கூட்டுப் படுகொலைகள் ஈழத்தமிழர் வாழும் பகுதிகளில் இடம் பெற்றுள்ளன. தமிழ் மக்களுக்கெதிரான ‘கலவரங்களை’ யும் போர் உச்சம் பெற்றிருந்த காலத்தில் இடம்பெற்ற கூட்டுப் படுகொலைகளையும் நான் இந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை. இந்தக் கூட்டுப் படுகொலைகளில் 41 படுகொலைகள், இடம் பெற்ற ஊர்களுக்கு நான்சென்று தப்பிப் பிழைத்தவர்களை நேர்காணல் செய்திருக்கிறேன். அல்லது அந்தப்படுகொலைகளைப் பற்றி ஊடகவியலாளனாக விவரமாக எழுதியிருக்கிறேன் அல்லது சில படுகொலைகளுக்குச் சாட்சியாகவும் இருந்திருக்கிறேன். இவை பற்றிய முழு விவரங்களையும் பட்டியலையும் தீர்ப்பாயத்திடம் வழங்கியிருக்கிறேன். இந்தக் கூட்டுப்படுகொலைகளில் 82 வயதுள்ள முதியவரிலிருந்து எட்டு மாதக்குழந்தைகள் வரை அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பல சந்தர்ப்பங்களில் தமிழர்களைத் தனியாகப் பிரித்து அழைத்துச்சென்று இலங்கைப் படையினர் அவர்களைப் படு கொலை செய்துள்ளனர்.

இத்தகைய படுகொலைகள் பற்றிய எந்தத் தகவலும் இலங்கையின் சிங்கள, ஆங்கில மொழிப்பத்திரிகைகளில் வெளிவந்ததில்லை. அப்படி வெளியாகி இருந்தாலும், ‘பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்‘ என்ற வழமையான இலங்கை அரசின் உத்தயோகபூர்வமான அறிக்கையே வெளியாகும். 1982 இலிருந்து இன்றுவரை இலங்கையின் ஊடக நிலைமை பெருமளவுக்கு இதுதான்.

இனப்படுகொலை தொடர்பாகச் சில புதிய பார்வைகளை ருவாண்டாவில் டூட்ஸி மக்களின் இனப்படுகொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட அனைத்துலகத் தீர்ப்பாயம் (International Criminal Tribunal for Rwanda–ICTR) எமக்கு வழங்கியிருக்கிறது. இநதத் தீர்ப்பாயம் 1994ல் நிறுவப்பட்டது. பாலியல் வன்கொடுமைகளும் வன்புணர்வும் (RAPE) இனப்படுகொலைக் கருவிகள் எனவும் குறிப்பிட்ட சில சூழல்களில் அவை இனப் படுகொலைதான் எனவும் ICTR தீர்ப்பு வழங்கியுள்ளது. இது தொடர்பாக, இந்தத் தீர்ப்பாயத்தின் மதியுரைஞரும் சமூகவியலாளரும் அனைத்துலகச் சட்டத்துறையில் புலமையாளருமான போல் ஜே.மக்கெனரெலல் அவர்கள் எழுதியுள்ள பல சிறப்புக் கட்டுரைகளை நான் தீர்ப்பாயத்திடம் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

ஈழ இனப் படுகொலையிலும் பாலியல் வன்கொடுமைகளும் வன்புணர்வும் ஏராளமாக நிகழந்துள்ளன என்பதற்கான ஆதாரங்கள் இப்போது குவியத் துவங்கியுள்ளன. இவற்றுட் பல இந்தத் தீர்ப்பாயத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. நண்பர் கொலம் மக்ரேயின் ஆவணப் படங்களில் காட்டப்பட்ட சில காட்சிகள் இத்தகைய ஆதாரங்களின் ஒரு சிறுதுளி மட்டுமே என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மொத்தத்தில் இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு நடந்துள்ளது இனப்படுகொலைதான் என்பது எனது வாதம்.

**கருத்துக்களுக்கு -**
facebook.com/orupaper @orupaper

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

**அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்**

Criminal Defence Service
Community Legal Service
The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk
Emergency
079 4764 1876
079 1225 3418

# அனுபவமில்லாத அரவிந்த் கேஜ்ரிவாலின் அரைவேக்காட்டுத்தனம்



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

2013இறுதிப் பகுதியில் நடந்த டில்லி சட்ட சபைத் தேர்தலில் மொத்தம் எழுபது தொகுதிகளில் 28 தொகுதிகளில் வெற்றி பெற்ற அரவிந்த் கேஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி ஆளும் காங்கிரசுக் கட்சியை மூன்றாவது இடத்திற்கு தள்ளியதுடன் பாரதிய ஜனதாக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் செய்தது. தமது கட்சியை பொது மகன் கட்சி என்பதற்காக ஆம் ஆத்மி எனப் பெயரிட்டு தாம் நாட்டைச் சுத்தப்படுத்துவதற்காக வந்தவர்கள் என்பதற்காக தமது கட்சியின் சின்னத்திற்கு துடைப்பத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

தன்னைப் பொது மகன் எனச் சொல்லிக் கொண்டு வந்த அரவிந்த் கெஜ்ரிவால் அறுதிப் பெரும்பான்மை இல்லாத போதும் காங்கிரசுக் கட்சியின் வெளியில் இருந்து வழங்கும் ஆதரவுடன் டில்லி சட்ட சபையின் முதலமைச்சராகப் பதவி ஏற்றார். அதனால் அவர் தனக்குத் தானே சூட்டிக் கொண்ட பொது மகன் என்னும் பட்டத்தை இழந்து ஒரு பிரபலம் ஆனார். அரவிந்த் கேஜ்ரிவால் டெல்லி முதல்வராக பொறுப்பேற்றதும் 700 லீட்டர் தண்ணீரை இலவசமாக வழங்கினார். மக்களுக்கு மின்சாரம் வழங்கும் நிறுவனங்களின் கணக்குகளும் அவை மக்களிடம் அறவிடும் கட்டணமும் கடுமையான கணக்காய்விற்கு உட்படுத்த உத்தர விட்டார். டெல்லி வாசிகளின் குறைகளை நேரடியாகக் கேட்டு, அவற்றுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக ஜனதா தர்பார் எனப்படும் மக்கள் அரசவை நடத்தப்படும் என்றார். ஆனால் மக்கள் தமது குறைகளைச் சொல்ல மிகப் பெருமளவில் திரண்டு வந்து தடைகளையும் மீறி அரவிந்தைச் சந்திக்க முயன்றதால் பெரும் குழப்பம் ஏற்பட்டது. பின்னர் இந்தத் திட்டத்தை அரவிந்த் கைவிட்டு மக்கள் தமது குறைகளை இணையவெளியூடாக தனக்குத் தெரிவிக்கலாம் என்றார். ஆனால் எல்லாப் பொதுமக்களுக்கும் அந்த வசதி இருக்கிறதா என்ற கேள்வி பொதுமக்களிடம் இருந்து வந்தது.

### ◆ அந்நிய முதலீடு இரத்து

டில்லியில் அந்நிய முதலீடுகளுக்கு முன்னைய மாநில காங்கிரசு அரசு அனுமதி வழங்கியிருந்தது. அரவிந்த் கேஜ்ரிவால் ஆட்சிக்கு வந்ததும் இதை இரத்துச் செய்தார். இதனால் டில்லியில் கடைத் தொகுதிகளை அமைத்திருந்த வால்மார்ட், ரெஸ்க்கோ போன்றவை அவற்றை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் பலர் வேலை இழக்க நேரிட்டது. அரவிந்த் கேஜ்ரிவாலின் கட்சிக்குள்ளும் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. ராஜஸ்த்தான் மாநிலத்தில் காங்கிரசிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றிய பாரதிஜ ஜனதாக் கட்சி இந்த விவகாரத்தில் அவசரப்படவில்லை. இது பற்றி மீள் பரிசீலனை செய்வதாக அறிவித்தது.

### ◆ மலையாளத் தாதிகள் கறுப்பிகள்

அடுத்த அடி அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு அவரது கட்சியின் நகைச்சுவைப் பரப்புரை செய்யும் குமார் விஸ்வா என்பவரால் விழுந்தது. விஸ்வா தனது மேடை நகைச்சுவை நிகழ்ச்சி ஒன்றில் கேரளத்து மலையாள கறுப்புத் தோல் தாதிகளைப் பார்க்கும் எந்த ஆணும் அவர்களை 'சிஸ்டர்' என்றுதான் அழைப்பான் எனக் கிண்டலடித்தார். இது ஒரு இனவாதக் கருத்து என்ற கண்டனத்துக்கு ஆளாகியுள்ளது. பொதுவாக வட இந்தியர்கள் தென் இந்தியர்களை குறைந்த சாதியினர் என்று ஒரு நினைப்புடன் இருப்பார்கள். இத்தனைக்கும் குமார் விஸ்வா ஒரு சாதாரண ஆளல்ல அவர் ஒரு பேராசிரியர். அவர் இந்த நகைச்சுவையைக் கூறியது ஒன்றும் சாதாரண இடமுமல்ல. கவிஞர்களின் தேசிய மாநாடு ஒன்றில் அவர் இந்த நிறவெறி நகைச்சுவையைக் கூறினார். இதில் கவனிக்கக் கூடிய இன்னும் ஒரு அம்சம் குமார் விஸ்வா இந்த நிறவெறி நகைச்சுவையச் சொன்னது 2008-ம் ஆண்டு. காங்கிரசுக் கட்சியினர் இதைத் தேடி எடுத்து யூரியூப்பில் போட்டு மீண்டும் தீமூட்டினார்கள். கேரளாவின் ஆம் ஆத்மி கட்சியினரின் பணிமனை அடித்து நொருக்கப்பட்டது. குமார் விஸ்வா பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்.

### ◆ விக்கி ஐயாவைப்போல் காவலில்லா அரவிந்த்

இந்தியாவில் பொதுவாக மாநில அரசுகளின் கீழ் மாநிலக் காவற்துறை இருக்கும். ஆனால் விக்கி ஐயாவின் வடமாகாண சபை போல் டில்லி மாநில அரசின் கீழ் டில்லிக்கான காவற்துறை இல்லை. டில்லிக்கான காவற்துறை மைய அரசான காங்கிரசு அரசின் உள்துறை அமைச்சின் கீழ் இருக்கின்றது. டில்லியில் ஒரு வீட்டில் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த பெண்கள் விபச்சாரமும் போதைப் பொருள் வியாபாரமும் செய்வதாக அரவிந்த் கேஜ்ரிவாலின் அமைச்சரவையின் சட்டத் துறை அமைச்சர் சோம்நாத் பார்தி குற்றம் சாட்டி அவர்களை கைது செய்யுமாறு வேண்டினார். நீதிமன்ற ஆணையில்லாமல் அவர்களைக் கைது செய்ய முடியாது என காவற்துறையினர் மறுத்து விட்டனர். ஆத்திரமடைந்த சட்ட அமைச்சர் சோம்நாத் பார்த்தி தனது ஆதரவாளர்கள் புடை சூழ அந்த வீட்டுக்குள் புகுந்து இரு உகண்டா நாட்டுப் பெண்களையும் இரு நைஜீரிய நாட்டுப் பெண்களையும் பிடித்து நடுத்தெருவில் வைத்து அவர்களின் சிறுநீர் மாதிரிகளை வற்புறுத்திப் பெற்றுக் கொண்டனர். அந்தப் பெண்கள் தமது கைப்பேசிகளை எடுத்து காவற்துறையுடன் தொடர்பு கொள்ள முயன்றபொது ஆம் ஆத்மி கட்சியினர் அவர்களின் கைப்பேசிகளைப் பறித்து நிலத்தில் வீசி எறிந்து எம் நாட்டுக் காவற்துறையினரிடம் எம்மைப்பற்றி குற்றம் சாட்டுவீர்களா கறுப்பிகளே என கூறினர். இது காங்கிரசு அரசையும் வெளியுறவுத் துறை அமைச்சையும் கடும் ஆத்திரத்திற்கு உள்ளாக்கியது. இந்திய உள்துறை அமைச்சர் மனிஷ் திவாரி இந்தியாவும் ஆபிரிக்க நாடுகளும் பல ஆண்டுகளாகப் பேணிவந்த நிறவெறிக்கு எதிரான ஒற்றுமையான போராட்டத்தை ஆம் ஆத்மி கட்சியினர் கெடுத்துவிட்டனர் எனச் சாடினார். உகண்டா நாட்டுப் பெண் ஒருவர் சோம்நாத் பார்த்திக்கு எதிராக காவற்துறையில் புகாரும் கொடுத்துள்ளார். காங்கிரசுக் கட்சியினர் அரவிந்த் கேஜ்ரிவாலில் சட்ட அமைச்சர் சோம்நாத் திவாரி பதவி விலக வேண்டும் என கூச்சலிட்டனர். ஆபிரிக்கப் பெண்கள் டில்லியில் நிர்வாண நடனம் ஆடும் நிலையங்கள் பாலியல் தொழில் நிலையங்கள் நடத்துவதாக ஆம் ஆத்மி கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். டில்லியில் ஒரு இளம் பெண் தீமூட்டிக் கொல்லப்பட்டமை டென்மார்க் பெண் ஒருவர் கற்பழிக்கப்பட்டமை ஆகியவை ஆட்சி மாறினாலும் டில்லியில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மாறாது என சுட்டிக் காட்டியது.

### ◆ காங்கிரசுக்குள் குழப்பம்

தனது சட்டத்துறை அமைச்சரின் அடாவடித்தனத்தை கண்டிக்காத அரவிந்த் கேஜ்ரிவால் டில்லி மாநில அரசிடம் காவற்துறை இல்லாததால்தான் இத்தனை பிரச்சனை எனக் கூறி தனது மாநில அரசின் கீழ் காவற்துறை கொண்டு வரப்பட வேண்டும் என தனது ஆதரவாளர்களைத் திரட்டி தெருவில் இருந்து போராட்டம் ஆரம்பித்தார். இந்தப் போராட்டத்திற்கு அரவிந்த் எதிர்பார்த்த அளவு ஆதரவாளர்கள் திரளவில்லை. ஆனாலும் டில்லியில் தெருக்கள் மூடப்பட்டு பெரும் போக்கு வரத்து நெருக்கடி ஏற்பட்டது. ஜனவரி 26-ம் திகதி இந்தியக் குடியரசு தினம் என்பதாலும் அதற்கு ஜப்பானியத் தலைமை அமைச்சர் தலைமை விருந்தினராக கலந்து கொள்வதாலும் டில்லியில் பெரும் பாதுகாப்பு ஏற்பட்டுகள் செய்ய வேண்டி இருந்தது. அரவிந்த் தெருவில் இருந்து போராட்டம் செய்வதால் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு பின்னடைவு ஏற்பட்டது. பின்னர் மைய அரசின் உட்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டேயும் அரவிந்த் கேஜ்ரிவாலும் பேச்சு வார்த்தை நடாத்தி சட்ட அமைச்சர் சோம்நாத் பார்த்தியின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்காத மூன்று காவற்துறையினரையும் சம்பளத்துடன் கூடிய விடுமுறையில் அனுப்புவதாக ஒத்துக் கொள்ளப்பட்டது.

**ஊழலை ஒழித்து அரசியலைச் சுத்தப்படுத்துவேன் என்ற கூக்குரலுடன் அரசியலுக்கு வந்த அரவிந்த் கேஜ்ரிவால் ஊழல் ஒழிப்பைத் தவிர வேறுபல செய்கின்றார். நீண்ட கால அரசியல் அனுபவம் பெற்ற காங்கிரசுக் கட்சி எதிர்க் கட்சிக்குக் கிடைக்கவிருக்கும் வாக்குகளைப் பிரித்தெடுப்பதில் பலே கில்லாடிகள்.**

இந்த உடன்பாடு காங்கிரசின் தலைமைக்குத் தெரியாமல் செய்யப்பட்டதால் சோனியாவும் அவரது பேபி ராகுலும் கடும் ஆத்திரம் அடைந்தனர். காங்கிரசின் உச்ச சபை கூடி உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டேயைக் கண்டித்தது. பாரதிய ஜனதாக் கட்சியினர் அரவிந்தின் போராட்டம் தோல்வியில் முடிவடைந்ததாக கேலி செய்தனர்.

### ◆ ஊழல் ஒழிப்பு எங்கே

ஊழலை ஒழித்து அரசியலைச் சுத்தப்படுத்துவேன் என்ற கூக்குரலுடன் அரசியலுக்கு வந்த அரவிந்த் கேஜ்ரிவால் ஊழல் ஒழிப்பைத் தவிர வேறுபல செய்கின்றார். நீண்ட கால அரசியல் அனுபவம் பெற்ற காங்கிரசுக் கட்சி எதிர்க் கட்சிக்குக் கிடைக்கவிருக்கும் வாக்குகளைப் பிரித்தெடுப்பதில் பலே கில்லாடிகள். காங்கிரசுக் கட்சியினர் முலாயம் சிங் யாதவ்வின் சமாஜவாதக் கட்சியையும் மாயாவதியின் பகுஜன் சமாஜவாதக் கட்சியையும் எதிர்க்கட்சிகளின் வாக்குகளைப் பிரிக்கப்பயன்படுத்தினர். 2009-ம் ஆண்டு நடந்த தேர்தலில் விஜயகாந்தைத் தனித்துப் போட்டியிட வைத்தது எதிர்க்கட்சிகளின் வாக்கை காங்கிரசுக் கட்சியினர் பிரித்தாகக் குற்றம் சாட்டப்பட்டது. காங்கிரசுக் கட்சி அரவிந்த் கேஜ்ரிவாலையும் எதிர்க்கட்சிகளின் வாக்கைப் பிரிக்கப் பயன்படுத்துவதாக ஐயம் எழுகின்றது. அரவிந்த் கேஜ்ரிவால் தலைப்புச் செய்திகளில் அடிக்கடி வந்து பாரதிய ஜனதாக் கட்சியின் தலைம அமைச்சர் வேட்பாளர் நரேந்திர மோடியை ஓரம் கட்டுகிறார்.


**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN

CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN

CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN



BBK PARTNERSHIP

www.bbkca.com

Email: admin@bbkca.com

R3

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

# 'A Fleeting Moment In My Country'

## - *Interview with Dr N Malathy*



Dr N Malathy, a Tamil diaspora activist, currently working as an analyst and programmer at the University of Cantebury, has lived in New Zealand for over 4 decades.

She spent 4 years working for various human rights and social welfare institutions, within the Tamil de-facto state in Vanni from 2005 to 2009. 'A Fleeting Moment In My Country' describes, Malathy's experience and reflections of the LTTE administered de-facto state after returning to the region to engage in social welfare work.

Following ara a summarised transcript of Tamil Guardian's interview with Malathy.

"Most of the institutions had a person in there that was a member of the LTTE. To me, their presence created a non-corrupt environment."

**TG:** What was your experience of the institutions that existed in Vanni during the de-facto state?

**DR N MALATHY:**

"Well there was every institution you could think a state should have plus more. Some astounding welfare centres a police force that had nearly half representation of women, a court force did that have half representation of women... It had a wide range of programmes from welfare centres to giving small scale employment to women who needed them."

"You stop being amazed by it and you accepted it, like here I'm in my country and here are all the institutions. That was quite a gradual enlightenment for me. Had it survived I think it would have been an amazing place."

TG: What are your thoughts on allegations of child soldier use by the LTTE and the way in which they were addressed?

**DR N MALATHY:**

"The effect it [the international campaign on child soldiers] had on Tamil activists was oppressive because you didn't know how to deal with it because there wasn't enough countering evidence that came out from Vanni... I think due to lack of resources or otherwise it didn't happen."

"On the first day on one of my trips... I observed a big scene where a 16 year old girl was saying 'I want to stay with the LTTE' and the mother was trying to take her away and there was a lot of shouting. And eventually the girl stood her ground and the mother couldn't physically drag her away. It kinda confused me, you know, what you hear in the Western media and what I was observing."

"I had very intensive involvement in the child soldier issue. Then I met UNICEF representatives every week. Then you realise, that UNICEF wasn't really working for the children. I can state several examples of the deceit carried out by UNICEF."

"I want to state one. This is a 7-year-old girl from Batticaloa, who made destitute because of the tsunami. The LTTE took these destitute children when they were in Batticaloa and they kept them in a children's homes there."

"UNICEF had put all these children as LTTE recruitment. The youngest was a 7-year-old. When I started working on the UNICEF list, I traced this girl and traced a lot of the other ones in the children's homes. We told UNICEF "Here they are, go and see them" and they refused to remove them from the list, saying they would remove them only when they are reunited with their families. But the fact is the families didn't exist and UNICEF couldn't track down their families."

"A couple of weeks after this conversation, it was international news, - 'The youngest person in the LTTE is 7 years old.'"

"That was quite an amazing thing. That just shows what they want to do, that example is enough. Why would they say that unless their aim was to demonise the LTTE?"

"Everyone who is concerned LTTE child soldiers should know is the Optional Protocol on Children in armed conflict... the first time they raised the age to 18 for non-state armed actors."

"By then the LTTE had existed for 20 years. Here is an organisation that grew up when the minimum recruitment age was 15... They were just bombarded by a demonising campaign rather than giving the LTTE time to grow up to the new requirement... Actually they (the LTTE) very serious and by the end of 2007 the minimum age was 18."

TG: How did the diaspora work to contribute to society in the Vanni?

**DR N MALATHY:**

"The diaspora put in resources to create a lot of tertiary institutions mainly IT teaching, so that was quote well developed. The Vanni Tech was quite extensive, it was almost like a university, we had some diaspora teachers."

"An education and skills development centre for war affected children that had missed schooling for several years was set up."

"Basically you had a state which didn't generate enough revenue to provide the services it did. All of them couldn't be LTTE members who were working for free"

TG: Were the institutions able to function with independence and credibility within the society?

**DR N MALATHY:**

"Most of the institutions had a person in there that was a member of the LTTE. To me, their presence created a non-corrupt environment."

"The lack of abuse and the lack of corruption (was possible) because there were LTTE members put in these institutions. Otherwise they functioned independently."


TG: What were your views on the eventual proscription of diaspora funding directed to Vanni?

**DR N MALATHY:**

"A lot of Tamil people gave money to TRO (Tamil Rehabilitation Organisation)."

"When I was there in 2007 there was a Human Rights Watch report about the extortion of money (by the LTTE). Just like the child soldier issue, the level of campaigning, it is a form of oppression on Tamils. Here you are giving up your hard earned money to help destitute people - children, women, education. And then you are told that you are funding terrorism. Not only are you told you are funding it, but that the LTTE extorts money."

"The way the Human rights watch report was written was so negative. The wording that was used painted a picture of a gruesome group that's going and grabbing people's necks and saying "Give us money, or else". How far from the truth can you state a case like that? This is just one of several examples of the international campaign to paint a picture of the LTTE as such a gruesome thing that they were planning to destroy so the world would not be outraged. It was all in preparation for the destruction of the LTTE."




"The diaspora put in resources to create a lot of tertiary institutions mainly IT teaching, so that was quote well developed. The Vanni Tech was quite extensive, it was almost like a university, we had some diaspora teachers."

TG: Are there any experiences from working in the de-facto state that have stuck with you?

**DR N MALATHY:**

"To me it's the loss of what women have gained that's really painful. It strikes you."

"One of the things that immediately strikes you is how committed the staff were to taking care of the people... The relationship they had with the people there was definitely unique."

"I got to know a lot of civilian women and LTTE women. They were forceful in expressing views and taking actions. One of the woman in Vaani told me how the LTTE leader Prabhakaran told her to learn to stand her point and be stubborn. It was a culture that was nurtured."




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# Prolonging debate on 13th Amendment is ploy to deprive genuine solution

*The rhetoric and political play with the 13th Amendment will continue in the island's post war constitutional discourse for a considerable period of time. Those who have a vested interest in keeping the debate alive will do their utmost to prolong the debate. It is likely that the next few years might witness an utterly useless battle between the Colombo Government and the Tamil National Alliance (TNA) over trying to retain what is left over in the 13th Amendment.*

*But in the midst of all this hysteria, any move towards finding a meaningful and genuine political solution will be lost, writes Jaffna University law academic, Kumaravadivel Guruparan, who is currently on Commonwealth scholarship to do doctoral research at the University College, London.*

Goodin's conclusion that there is no constitutional solution to be found to the case of 'radical social diversity' might just as well be true for the island, Guruparan observed in concluding his paper published in Junior Bar Law Review, 2013, pp 30-42.

The researcher was primarily reflecting on the politics and constitutional praxis of the 13th Amendment.

After listing out the fundamental defects and inadequacies of the 13A, and arguing how the structural deficiencies of the 13A fails to even perform the role of a reference point to a discourse on a political solution, Guruparan raised a question on the irony of India and the TNA demanding for a 'full implementation of the 13A' that is already there in the constitution.

Other than the irony of such a demand, it is important not to forget that a full implementation of the 13th Amendment will suffer from the fundamental flaws he had outlined, the academic observed.

Citing from how the Eastern Provincial Council is practically controlled by the SL governor to the Supreme Court's problematic role as 'arbitrator', Guruparan exposed the 'negative asymmetry' in the working of the 13th Amendment in the North and East compared to other provinces.

Talking about 13+ has no constitutional meaning, as the SL Supreme Court has already implied that the 13A is the maximum one could go within the confines of the unitary state as envisaged in the current constitution, Guruparan pointed out.

Any changes going beyond 13A have to go through a referendum and chances of positive results are very remote, the researcher said, by citing the Sinhala-Buddhist nationalist discourse on the unitary state.

Today, the TNA is under pressure from the Indian Government to accept a solution based on the 13th Amendment and any rejection of it is interpreted as going against Indian interests, Guruparan said, adding that "The complicated political dynamics is such that the TNA also probably does not want to be seen as rejecting something that President Rajapaksa is reluctant to give."

As a result the Tamil representatives are engaged in a futile battle with those who call for it to be repealed, to save whatever little is left in the 13th Amendment, the researcher observed.


Those who want to repeal the 13A citing that it devolves land and police powers, when it does not, and India and the TNA misleading the Tamil people that the 13A is a starting point, offering something meaningful, make a "wholly nonsensical debate," Guruparan said.

"The international actors interested in Sri Lanka also seem to have clung on to the 13th Amendment as a remedy for the current impasse in Sri Lanka. This can only mean that the international actors have not learnt much from the previous failed attempts at liberal peace making," he further observed in the article.

*Courtesy: TamilNet*

# Professor S.J. Tambiah:

## A Humble And Passionate Intellectual



By Jude Fernando

Stanley Jeyaraja Tambiah, a world renowned social anthropologist, Esther and Sidney Rabb Professor (Emeritus) of Anthropology at Harvard University passed away on the January 19, 2014 at the age 84. He was born in Sri Lanka and studied at University of Ceylon, Cornell and Harvard universities. Having served as a UNESCO technical assistance expert in Thailand from 1960 to 1963, he joined the faculty at the University of Cambridge, and was a Fellow of King's College. He went to the University of Chicago in 1973 as a tenured professor, and joined Harvard University in 1976. He was also the curator of South Asian Ethnology at the Peabody Museum.

He specialized in studies of Thailand, Sri Lanka, and Tamils, as well as the anthropology of religion and politics. His academic interests were in comparative analysis of the ways Western categories of magic, science and religion have been used by anthropologists to make sense of non-Western cultures. He started his career by studying Buddhism in Thailand. He brought in new dimension to study of religion in anthropology in particular and social sciences in general. He His work also made a significant contribution to the study of state formation in colonial societies. His commentary on Edmund Leach, the author of Pul Eliya, is still regarded s masterpiece in anthropology.

After 1983 riots in Sri Lanka, he focused on religious and ethnic identities and their role in violence in Sri Lanka. His book "Buddhism Betrayed", apparently banned in Sri Lanka, is still popular among those interested in role of religion ion ethnic conflict. In this book, Tambiah was critical of the essentialized notions "Buddhism in terms of its pristine teachings and viewed all subsequent developments, especially those of political kind as deviations from the canonical form." The controversy over the book has to do with how it seeks to provide a scholarly answer to "the question of how the Buddhist monks in today's..

*(continued on page 26)*


ABRA WHOLESALE LTD
LONDON'S LEADING WHOLESALER & EXPORTER
5 PICKETTS LOCK LANE
EDMONTON, LONDON N9 0AS

proud to be a member of LANDMARK WHOLESALE / LONDON CHAMBER OF COMMERCE AND INDUSTRY

ALCOHOL - TOBACCO - GROCERY - CONFECTIONERY - SOFT DRINKS - TOILETRIES - HOUSEHOLD

VACANCY

BUSINESS DEVELOPMENT MANAGER

Location: North London

Package: Basic £18 - £ 22K + Bonus and Car

We require a skilled sales professional capable of opening and servicing new accounts as well as serving the existing customers delivering profitable growth for the company.

Successful candidate will have a proven track record in retail sector demonstrating the ability to deliver business growth, be capable of working independently and have high levels of drive and ambition and must be eligible to work in the UK and have full UK Driving Licence.

To Apply: Email your CV with detail of your current package to sales@abrawholesales.co.uk



SRI KANTH & CO SOLICITORS





We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649



பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

லண்டனை மையமாகக் கொண்டு
இயங்கும் பத்திரிகை நிறுவனத்துக்கு
Tooting மற்றும் Croydon பகுதிகளில்
பத்திரிகை விநியோகஸ்த்தர்கள்
உடன் தேவை !

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

Contact Number - 020 7043 4310

KIDS பேப்பர்

## தினம் ஒரு குறள்

*வேண்டுதல் வேண்டாமை*
*இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும்*
*இடும்பை இல.*

பொருள்:- விருப்பு வெறுப்பற்றுத் தன்னலமின்றித் திகழ்கின்றவரைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு எப்போதுமே துன்பம் ஏற்படுவதில்லை.

## Fact ... Fact... Fact!

### Moon Facts (Space)

• How old is the Moon?

The Moon is 4.5 billion years old.

• How long does it take the Moon to orbit the Earth?

The Moon takes about 27 days (27 days, 7 hours, 43 minutes, 11.6 seconds) to go all the way around the Earth and return to its starting position.

The Moon's orbit around the Earth is a slightly squashed circle called an ellipse.

• How far is the Moon from Earth?

The Moon is about 250,000 miles (384,400 kilometres) from Earth

(Travelling by car: 130 days  Travelling by rocket: 13 hours)

• The moon moves toward the east in our sky by about 12 degrees each day.

• The moon rises in the east and sets in the west

• How wide is the Moon?

The Moon has a diameter of 2,000 miles ( 3,476 kilometres).

• How fast does the Moon travel around the Earth?

The moon orbits Earth at an avaerage speed of 2,288 miles per hour (3,683 kilometres per hour).

புத்தகத்தை வாங்கலாம் - அறிவை வாங்க முடியாது.
உணவை வாங்கலாம் - பசியை வாங்க முடியாது

## நல்மொழிகள் சில

• எழுத்துப் பயிற்சி மூலம் கையெழுத்தைத் திருத்துவது போல, உண்மை பேசும் பழக்கமும் பயிற்சியினால்தான் வரும்

• அளவுக்கு மீறிய சுதந்திரம் ஆபத்தானது.

• ஒவ்வொரு நிமிடமும் நிமிடமும் நல்ல பண்புடன்

• வாழ்வதில் அக்கறையுடன் இருந்தாலே, இவ்வுலகில் எந்நேரமும் மகிழ்ச்சியுடன் வாழலாம்.

• நாளை நான் வாழ்வேன் என்கிறான் மூடன். இன்று என்பதும் காலம் கடந்ததே. அறிவாளிகள் நேற்றே வாழ்ந்து விட்டனர்

• அறிவு தலைக்கு கிரீடம்! அடக்கம் காலுக்கு செருப்பு!

• அடக்கம் என்பது ஓர் அணிகலன் மட்டுமல்ல அது ஒழுக்கத்தின் பாதுகாப்பும் ஆகும்

## விளையாடுவோமா சதுரங்கம் ?



த.செல்வரத்தினம்

*சென்ற வாரத் தொடர்ச்சி.....*

4) அதன் உட்புறத்தில் உள்ள வெள்ளை சதுரத்தில் வெள்ளை இராணியும் (Q) - (கறுத்த சதுரத்தில் கறுத்த நிற இராணியும் Q)

5) மற்றைய சதுரத்தில் இராசா (K) அமைந்திருக்கும்.

6) இந்தகாய்களுக்கு முன்பாக எட்டு சிப்பாய்கள் (P) அமைந்திருக்கும்.

*காய் நகர்த்தல் :*

வெள்ளை காய்களே முதலில் நகர்த்தப்படும். இரு பகுதியினரும் தங்களுக்கு விருப்பமான நிறத்தினை புரிந்துணர்வின்படி தெரிவு செய்யலாம். அல்லது நாணயச் சுழற்சியின் மூலம் தீர்மானிக்கலாம்.

(முதலாவது காய் நகர்த்தல் (வெள்ளைக்காய்) தொடர்ந்து கறுத்தக்காய் நகர்த்தல் நடைபெறும். அவ்வாறு மாறி, மாறி காய் நகர்த்தப்படும். காய் நகர்த்தல் கட்டாயம் செய்யப்பட வேண்டும். அதாவது காய் நகர்த்தலைத் தவிர்க்க முடியாது. எதிரியின் காய்களை கைப்பற்றும் போது அந்தக் காய் இருந்த சதுரத்தில் கைப்பற்றும் காய் அமரும், கைப்பற்றப்பட்ட காய் வெளியே அகற்றப்படும்.

**காய் நகர்த்தல் விதி முறைகள் :**

ஒவ்வொரு காய்களும் நகர்த்துவதற்கான விதி முறைகள் உள்ளது.

1) K: இராசா எட்டுத்திக்கும் ஒரு சதுரம் மட்டும் நகர்த்த முடியும்.

2) Q: இராணி இராசாவைப்போன்று எட்டுத்திக்கும் ஒரே பாதையில் தடைகள் இல்லாவிடின் விரும்பிய சதுரத்திற்கு நகர்த்த முடியும்.

3) R: கோட்டை : இராணியைப் போன்று நேர் கோட்டில் மட்டும் நான்கு திக்குகளும் நகர்த்த முடியும்.

4) B : போதகர் : குறுக்குச் சதுரங்களில் (Diagonal Square) மட்டும் நான்கு திக்குகளும் நகர்த்த முடியும். வெள்ளை சதுரத்தில் உள்ள B எப்போதும் வெள்ளை சதுரத்திலேயே நகரும் அதேபோன்று கறுத்த சதுரத்தில் உள்ள B எப்போதும் கறுத்த சதுரத்திலேயே நகரும்.

5) N: குதிரைகள் : இந்தக்காய் L வடிவில் 3 சதுரங்கள் நகர்த்த முடியும். குதிரை மட்டும் மற்றைய காய்கள் மேலாக பாய்ந்து செல்ல முடியும்.

6) P: சிப்பாய்கள் எதிர்தரப்பினரின் பக்கம் நோக்கி நேர் கோட்டில் மட்டும் நகர்த்த முடியும் எதிர் தரப்பினரின் காய்களை கைப்பற்றும் போது குறுக்கு சதுரத்தில் தாக்க முடியும். சிப்பாய்கள் பின்நோக்கி நகர்த்த முடியாது. (விஷேட காய் நகர்த்தலைக் கவனிக்கவும்.)

*மிகுதி அடுத்த வாரம் தொடரும்..*

## Happy Cat Play Time



There was a happy cat living in a house. There lived a mouse in the house. She liked to play with that mouse. the cat's favourite game was tag. She chased that mouse by a good game of tag. She made words that rhyme with like bat. She was a happy cat.

## முத்துக் கதை நற்செயல், நற்சிந்தனை !

நள்ளிரவு நேரம். ஒரு பணக்காரரின் வீட்டிற்கு ஒரு திருடன் திருடச் சென்றான். அவன் இளைஞன். அப்போது அந்தப் பணக்காரரும் அவர் மனைவியும் தூக்கம் வராமல் பேசிக்கொண்டிருந்தார்கள். அதை ஒளிந்திருந்து கேட்டான் திருடன்.

பணக்காரர் தன் மனைவியிடம் சொன்னார், 'நமக்கோ வயதாகி விட்டது. நமக்கு சொத்துக்கள் நிறைய இருக்கின்றன. நமக்குப் பிறகு நம் செல்வத்தை ஆள்வதற்கும் நமக்கு பிள்ளைகள் இல்லை. இரக்கம் உள்ள இளைஞன் ஒருவனை தத்துப் புதல்வனாக ஏற்றுக்கொள்வோம். பிறகு அவனிடம் நம் சொத்துக்களையும் கொடுத்து விட்டு இருவரும் புண்ணிய யாத்திரைக்குக் செல்வோம்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த திருடன், மெதுவாக வெளியேறினான். மறுநாள் அவன் அந்தச் செல்வந்தரின் வீட்டருகே அமர்ந்து தெரு நாய்களுக்கு உணவிட்டுக்கொண்டிருந்தான். 'இந்த வழியாக வரும் பணக்காரர் என்னைத் தத்து புத்திரனாகத் தேர்ந்தெடுத்தால் அவர் சொத்துக்களெல்லாம் எனக்குத்தான்' என்று நினைத்துக் கொண்டிருந்தான் அவன்.

பணக்காரரும், அவர் மனைவியும் அந்த வழியாக வரும் போது வீதியோரமாக அமர்ந்து தெரு நாய்களுக்கு உணவிட்டுக் கொண்டிருக்கும் அந்த இளைஞனை பார்த்தார்கள்.


'தெருவில் திரியும் நாய்களுக்குக் கூட உணவளித்துக் காப்பாற்றும் இந்த இரக்கமுள்ள இளைஞனை மகனாக ஏற்றுக்கொள்ளலாம். இவன் நம் தொழிலை நல்ல விதமாக வளர்ப்பான். மற்ற மனிதர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வான்' என்று நினைத்த செல்வந்தர் அந்தத் திருடனிடம் சென்று சொன்னார்.

'இளைஞனே, எங்களுக்கு மகன் இல்லை. நீ எங்கள் மகனாக இருக்கிறாயா? எங்கள் செல்வத்தை உன்னிடம் ஒப்படைக்கிறோம். நீ அவற்றைக் கொண்டு வாழ்ந்து மற்றவர்களுக்கும் உதவி செய்!'

அதைக் கேட்டதும் திருடன் மனம் மாறினான். 'நான் நல்லவனாக நடித்த போதே இவ்வளவு பெரிய நன்மை என்னைத் தேடி வருகிறதே! நான் உண்மையாகவே நல்லவனாக மாறினால் என்னென்ன மாற்றங்கள் நடக்கும்!' என்று நினைத்த இளைஞன், பணக்காரருக்குப் பதில் சொல்லாமல் புறப்பட்டுச் சென்றான்.

நல்லவனாக நடித்தால்கூட, அது நமக்கு எதிர் பாராமல் நல்ல பலனைத் தருவதுண்டு. அப்படியென்றால் உண்மையாகவே நல்ல சிந்தனையுடனும், நல்ல செயலுடனும் இருந்தால் எத்தகைய நல்ல பயன்கள் விளையும்.

## Colouring - 210





### Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from Orupaper Gift Team.

நீங்களும் ஒரு பேப்பர் வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

**Visit our Web: www.facebook.com/ orupaper**



## Issue 209 Winner
## A. Vithusika



Rengeeshan- C



S. Piriyanga



Vithusika. A



R.Sujenthiny

### தம்பி தங்கைகளே.....

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், பழமொழிகள் என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள். அனுப்பும் போது உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள்.

## Tips of the Week

ஹலோ குட்டீஸ் இந்த வாரம் http://www.dinamani.com/siruvarmani/ என்ற இணையத்தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பாருங்களேன். பிடிச்சா அடிக்கடி தட்டுங்கோ, பிடிக்காட்டி அடுத்த வாரம் வேற ஒன்டை சொல்லுறம். உங்களுக்கு தெரிஞ்சதையும் எங்களுக்கு சொல்லுங்கோ.



# NEED URGENT CASH?

UAEXCHANGE®
*Service is our Currency*

# GOLD LOANS

FROM
**2.75%**
TO
**3.99%**
PER MONTH*

*Terms & Conditions apply

World's trusted money transferrer




**Tel: 0203 078 7623 | www.uaeexchange.com/gbr**

**Birmingham:** 0121 515 5921 | **Croydon:** 0208 683 1010 | **Eastham:** 0208 503 4234 | **Forest Gate:** 0208 586 7716
**Ilford:** 0208 514 4237 | **Leicester:** 0116 268 8930 | **Manor Park:** 0208 911 0208 | **Soho Square:** 0207 478 0720
**Southall:** 0208 843 2332 | **Walthamstow:** 0203 233 0069 | **Wembley:** 0208 903 7884 | **Whitechapel:** 0207 655 4999
**Wolverhampton:** 0190 233 2793


TASTE
it Today!
Quento
Fly high with a fruit Fizzzz.
BRAND
Niru
Quento
Fly high with a fruit Fizzzz.
1.5Ltr e

# இப்படியும் நடக்கிறது



சமீபத்தில் கிடைத்த இரண்டு செய்திகள் இத் தகவலை எழுதத் தூண்டுகின்றன. கருணை யுள்ளம் கொண்ட 10 வயது நிரம்பிய ஒரு சிறுவன் அவனது கைச் செலவுக்கென பெற்றோரால் வழங்கிய பணத்தினை சிறுகச் சிறுக சேமித்து வைத்தும், தனது 10ஆவது பிறந்த தினத்திற்கு பெற்றோரால் வழங்கிய பரிசுத் தொகையைச் சேர்த்தும் ஈழத்தில் இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்டு நடமாட முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இருவர்களுக்கு தனது சிறு உதவியாக வழங்கியுள்ளான்.

ஜேர்மனி நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட இச்சிறுவன் ஈழத்து பெற்றோருக்கு அரிய மக னாகப் பிறந்த சிறிரஞ்சன் தமிழ்பிரியன் பெற் றோருக்கு மட்டும் பிரியவனல்ல, முழு தமிழ் சமுதாயத்துக்கும் அரிய மகன். இவன் நூறு வருடம் வாழ வேண்டுமென வாழ்த்திய நடமாட முடியாத இருவர்களுடன் நாமும் சேர்ந்து வாழ்த்துவோம். ஐரோப்பிய நாடுகளில் பிறந்த தமிழ்க் குழந்தைகள், மேற்கத்திய சூழ்நிலை யில் வளர்ந்து கொண்டிருந்தாலும், ஈழத்தில் இடம்பெறும் செய்திகளை ஊர்ந்து கவனித்து வருவதை தமிழ்ப் பிரியன் போன்ற சிறுவர்கள், பெரியவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்கள். ஈழத்தில் இடம் வலம் தெரியாத இச்சிறுவன் தனது உதவி உரியவர்களை அடைய அவன் தெரிவு செய்த வழிகளை அறியும் போது, இச் சிறுவனின் புத்திசாலித்தனம் வெகுவாகக் கவர்ந்தது.

பிறந்த நாள் கொண்டாட்டத்தை இவ்வாறு கொண்டாடிய தமிழ்ப்பிரியன் தகவல் கிடைக்கும் அதேசமயம் ஐரோப்பா நாடொன்றில் வாழும் வசதி படைத்த குடும்பமொன்று, தன் மகளின் பூப்புனித நீராட்டு வைபவத்திற்கு ஒழுங்கு செய் யப்பட்ட மண்டபத்திற்கு வானூர்த்தி மூலம் அலங்காரப் பவனிவந்து ஆடம்பரமாக நிகழ்த்திய செய்தியும் கிடைத்துள்ளது.

இத்தகவல்கள் மூலம் பத்தேவயது நிரம்பிய தமிழ்ப்பிரியனின் கருணையுள்ளத்தை காணும் ஒரு புறமும், கொத்துக் கொத்தாக சேர்த்து வைத்த பணத்தை தப்பாகச் செலவு செய்யும் மனிதர்களை மறுபுறமும் கேட்கும்போது, எத்தனை உள்ளங்கள், எத்தனை மனிதர்கள் என எண்ணத்தான் தோன்றுகிறது. மாறுவது எப்போ?

# இணக்கமறிந் திணங்கு

ஒத்த கருத்துடையவர்களை இணைப்பது இணக்கம். ஒத்த விரும்பமுடையவர்களை இணைப்பது இணக்கம். ஒத்த பழக்கமுடைய வர்களை இணைப்பது இணக்கம் நற்செய்கை களில் ஒருவரோடு ஒருவர் இணைவது இணக்கம். நற்குணங்களில் இருவர் இணைவது இணக்கம். நண்பர்களாக இணைவதற்கும் இன்றியமையாது இணக்கம். இணக்கமில்லாத விடத்து எந்தவொரு உறவோ நட்போ நீடிக்க முடியாது என்பதே மனித வாழ்வின் இரகசியம். ஆகவேதான், இணக்கத்திற்கு முன்னுரிமை வழங்கி இணக்கமறிந்திணங்கு என ஔவையார் அழகாகக் கூறியுள்ளார்.

நண்பர்களைத் தெரிவு செய்யும்போது அவர வருடைய நற்குணங்களையும் நற்செயல் களையும் நன்கு அறிந்து தெரிவு செய்த பின்னர் நண்பர்களாக இணைவது நீடித்த நட்டை உரு வாக்குமென்பதே அனுபவ ரீதியாக அறிந்த உண்மை. இத்தெரிவு ஆண், பெண் இரு சாரா ருக்கும் பொருந்தும். ஆண்களோடு ஆண் களும், பெண்களோடு பெண்களும் கூடுதலாக ஆண்களும் பெண்களும் நட்பென்ற உறவு ஆரம்பிக்க முன்னர், அவரவர் குணாதிசயங் களை நன்றாக எடை போட்ட பினன்ர் பழகு வதே இணக்கத்தை உருவாக்கும். இக்கடப் பாட்டை மீறும் நட்பு, நீண்ட நாட்கள் நிலைத்த தில்லை என்பதை அனுபவ ரீதியாக அறிந்துள் ளோம்.

இல்லற வாழ்வில் இணையும் தம்பதியினர் கூட தமது விருப்பு வெறுப்புகளை முன்கூட்டியே அலசி ஆராயாமல் வாழ்க்கையை ஆரம்பிப்ப தால், திருமண வாழ்க்கையில் இணக்கமின்றி இடையில் முறித்துக் கொள்வதை அதிகரிக்கும் விவாகரத்து வழக்குகள் நிரூபிக்கின்றன. இணக்கமில்லாத வாழ்வினால் கொலைகளும், தற்கொலைகளும் இடம்பெறுவது கூட ஊடகங் களில் வெளிவரும் செய்திகள் கூறுகின்றன.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

சமூகமானாலும் சரி, தனியாட்களானாலும் சரி, ஒவ்வொருவருக்கும் அவரவர் விருப்பும், வெறுப்பும் இல்லாதிருக்க முடியாது. ஆகவே, நண்பர்களாக இணையும்போது சரி, தம்பதி களாக இணையும் போதும் சரி, அவரவரின் நற் குணங்களையும், நற்பண்புகளையும், நற் செயல்களையும் நன்றாக அறிந்து தெளிந்த பின்னர், இணங்குவதே சிறந்ததென மீண்டும் இணக்கமறிந்திணங்கு என்ற ஔவையாரின் அறிவுரையை நினைவுபடுத்துகிறோம்.

# கார்களை நிறுத்த கதிர்வீச்சு

காவல் பிரிவினரால் சந்தேகத்துக்குட்பட்ட கார்களை நிறுத்துவதற்கு வழமையாக கடைப் பிடிக்கப்படும் முறைகள் பலன்தராத சமயங் களில் சந்தேகத்துக்குரிய கார்களை பின் தொடர்ந்து வேகமாகத் துரத்தி செல்வதால், பயங்கரமான விபத்துக்குள் நேர்வதை அடிக்கடி கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இத் தகைய விபத்துக்களில் உயிர் இழப்புகளும் ஏற் படுவது தவிர்க்க முடியாதது.

**இணக்கமறிந் திணங்கு என்ற ஔவையாரின் அறிவுரையை நினைவுபடுத்துகிறோம்.**

அனேக அழிவுகளைச் சந்தித்த பின்னர், ஸ்பெயின், ஜேர்மனி ஆகிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விடுத்த வேண்டு கோளுக்கு இணங்க பாதுகாவல் பகுதியின ருக்கு பயன்படும் விதத்தில் சந்தேகத்துக்குரிய கார்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு தொழில் பொறிமுறையொன்றை தயாரிக்கு மாறு Savelec எனப் பெயரிடப்பட்ட திட்டத்திற்கு 4.3 மில்லியன் யூரோ ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

பாதுகாவல் பிரிவினரின் பிடியில் அகப் படாமல் தப்பித்து ஓடும் வேகமான கார்கள் அனேகமாக நவீன தொழில்நுட்பங்களோடு தயாரிக்கப்படுவதால் இவற்றின் (Engine Control Unit) இயக்கத்தைக் கட்டுப்படுத்த கணினித் தொடர்புகளை தற்காலிகமாக தடைப்படுத்து வதே சிறந்த வழி எனக் கண்டு கொண்ட பொறியிலாளர்கள் 60 மீற்றர் தூரத்திலிருந்தே ஒரு விசையை அமுக்க, அத்தொழில்நுட்ப சாதனம் மூலம் பாய்ச்சப்படும் வானலைகள் காரின் வேகத்தை கட்டுப்படுத்தி அதன் இயந் திரத்தை (ECU) தற்காலிகமாக செயல் இழக்கச் செய்ய முடியுமென நிரூபித்துள்ளனர்.

RF Safe Stop என அழைக்கப்படும் இத்தொழில் நுட்ப சாதனம் 2016ஆம் ஆண்ட ளவில் பாவனைக்கு வரும் விதமாக ஐக்கிய இராச்சியத்திலுள்ள Throckmorton விமானத் தளத்தில் வெற்றிகரமாக பரிசோதனைக்குட் படுத்தப்பட்டதாக கடந்த வாரம் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.



# தாய்லாந்து எழுச்சியும் கோவிலான அண்ணனும் தீபமான தங்கையும்



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

தாய்லாந்தில் அறுபது நாட்களுக்கு அவசர கால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்தால் அது எதிர்க்கட்சியினருக்கான ஆதரவை அதிகரிக்கும் ஆட்சியில் இருக்கும் கட்சியின் செல்வாக்கைக் குறைக்கும் என்பதால் தந்திரப் பொறுமையைக் கைப்பிடித்த தலைமை அமைச்சர் யின்லக் ஷினவத்ரா இப்போது பொறுமையை இழந்து வருகின்றார். அவரது ஆதரவாளரான குவாஞ்சை பிறைப்பான என்னும் வானொலி ஒலிபரப்பாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. பல இடங்களில் குண்டு வெடிப்புகளால் அப்பாவிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்தது அரபு வசந்தம். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியாளர்களுக்கு எதிராக பணக்காரர்கள் கிளர்ந்து எழுந்து போராடுவது தாயலாந்தில். தாய்லாந்தில் நடப்பது பல நூறு ஆண்டுகளாக உலகெங்கும் நடக்கும் உள்ளவர்களுக்கும் இலாதவர்களுக்கும் இடையிலான வர்க்கப் போராட்டமே.

தாய்லாந்தில் பியூ தாய் கட்சி ஆட்சியில் இருக்கும் போது மக்களுக்கான சமூக நலன் திட்டங்களை செயற்படுத்தும். மக்களுக்கான இலகு மருத்துவ வசதி விவசாயிகளுக்கான உதவி போன்றவற்றை சரிவரச் செய்யும். இதற்கான அரச செலவைச் சமாளிக்க சூதாட்டம், மதுபான விற்பனை போன்றவற்றிற்கான வரியை அதிகரிக்கப்படும். இதனால் மக்களின் ஆதரவு பியூ தாய்க் கட்சிக்கு எப்போதும் உண்டு. தேர்தல் என்று வரும்போது பியூ தாய் கட்சி வெற்றி பெறும். உடனே எதிர்க்கட்சியான மக்களாட்சிக் கட்சி தேர்தலில் குழறுபடி என்று பெரும் ஆர்ப்பாட்டங்கள் செய்யும். இது தாய்லாந்தில் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தம்மை மக்களாட்சிக்கான கூட்டமைப்பு என அழைத்துக் கொள்கின்றனர். இவர்கள் மஞ்சள் சட்டை போட்டுக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வதால் இவர்களை மஞ்சள் சட்டைக்காரர்கள் என அழைக்கப்படுகின்றனர். எதிர்க் கட்சியினர் ஆட்சிக்கு வந்தால் பியூ தாய் கட்சினர் செஞ்சட்டைக்காரர்கள் என்னும் பெயரில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவார்கள். மக்கள் வலுக் கட்சி என்னும் பெயரில் தொடக்கப்பட்ட கட்சி தடை செய்யப்பட்டதால் இரு தடவை பெயர்களை மாற்றிக் கொண்டது. தாய்லாந்தில் இரு பிரிவினர் உள்ளனர். ஒன்று நடுத்தர வர்கத்தினரையும் ஏழைகளையும் கருத்தில் கொண்ட கட்சியினர். இக்கட்சியினரே மக்கள் வலுக் கட்சி, பியூ தாய் கட்சி, தாய் ரக் தாய் கட்சி என்னும் பெயர்களில் செயற்படுகின்றனர். மற்றது அரச குடும்பம், படைத்துறை, பணக்காரர்களின் ஆதரவைக் கொண்ட மக்களாட்சிக் கட்சி.

தாய்லாந்தில் தேர்தல் மூலம் மக்கள் அரசைத் தெரிவு செய்வதும் பின்னர் அந்த அரசை படைத்துறையினர் கவிழ்ப்பதும் நடப்பதுண்டு. மஞ்சள் சட்டைக்காரர்கள் சிவப்புச் சட்டைக்காரர்கள் என இரு பிரிவாக மக்கள் பிரிந்து ஆர்ப்பாட்டங்கள் செய்வார்கள். இப்போது ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் முதலாளித்துவவாத மஞ்சள் சட்டைக்காரர்கள்.

கற்றறிந்த மேல் தட்டு வர்க்கத்தினரின் வாக்குகளுக்கு கல்லாத கிராமப்புற மக்களின் வாக்குகளிலும் பார்க்க அதிக மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பது மஞ்சள் சட்டைக்காரர்களின் தத்துவமாக இருக்கிறது. எமக்கு வாக்களிக்காத மேல் தட்டு வர்க்கத்தினரைப் பற்றி நாம் கவலைப்படப்போவதில்லை என்பது சிவப்புச் சட்டைகாரர்களின் அரசியல் கொள்கையாக இருக்கிறது.

2006-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த படைத்துறையினரின் ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து தக்சின் ஷினவத்ராவின் மக்கள் வலுக்கட்சி தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் துபாயில் இருந்த படியே தாய் ரக் தாய் கட்சியை (Thai Rak Thai party) தேர்தலில் நிறுத்தி வெற்றி பெறச் செய்து சமக் சுந்தர்வெஜ் தலைமை அமைச்சராக்கப்பட்டார். மஞ்சள் சட்டைக்காரர்கள் சமக் சுந்தர்வெஜ் தக்சின் ஷினவதாராவின் கைப்பொம்மை என எதிர்ப்புக் காட்டினார்கள். சமக் சுந்தர்வெஜ் தொலைக் காட்சியின் சமையல் நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்கு பணம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் பதவியில் இருந்து விலக்கப்பட்டார். பின்னர் வெளிநாட்டில் இருக்கும் தக்சின் ஷினவத்ராவின் மைத்துனர் சோமாச்சி வொங்சவத் (Somchai Wongsawat) தலைமை அமைச்சரானார். இவரும் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார். பின்னர் எதிர்க்கட்சியினர் 2010இல் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இவர்களின் ஆட்சியில் அதிருப்தி அடைந்த தக்சின் ஷினவதாராவின் கட்சியினர் செஞ்சட்டைக்காரர்கள் என்னும் பெயரில் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இவர்களுக்கு எதிராக கடுமையான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. 2011-ம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த தேர்தலில் தக்சின் ஷினவத்ராவின் அழகிய இளம் தங்கை யிங்லக் தலைமை அமைச்சராக வெற்றி பெற்றார். 2012-ம் ஆண்டு முன்னாள் ஆட்சியாளர்களுக்கு எதிராக செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களைக் கொலை செய்த குற்றம் சுமத்தப்பப்பட்டது. 2013-ம் ஆண்டு தங்கை யிங்லக் தனது அண்ணன் உடபடப் பல முன்னாள் ஆட்சியாளர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க முயற்சி செய்தபோது மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் தொடங்கின. தங்கை யிங்லக் தனது பொது மன்னிப்பு வழங்கும் திட்டத்தையும் கைவிட்டார். ஆனாலும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. 2013-ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மஞ்சள் சட்டைக்காரர்கள் ஒரு இலட்சம் மக்களைத் தெருவில் இறக்கியுள்ளனர். 2013 நவமர் மாதம் அவர்கள் தலைமை அமைச்சரின் பணிமனையையும் காவற்துறைத் தலைமைப் பணிமனையையும் ஆக்கிரமிக்கப் போவதாக அறிவித்தனர். வன்முறையை அவர்கள் மீது கட்டவிழ்த்து விடாமல் அவர்கள் அவ்விரண்டு பணிமனைகளையும் கைப்பற்ற அனுமதிக்கப்பட்டனர்.

### ◆ பாங்கொக்கை மூடும் போராட்டம்

ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து தங்கை யிங்லக் பாராளமன்றத்தைக் கலைத்து 2014 பெப்ரவரி மாதம் தேர்தல் நடக்கும் என அறிவித்தார். தேர்தலில் தாம் வெற்றியடையப் போவதில்லை என உணர்ந்த மஞ்சள் சட்டைக்காரர்கள் தாம் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறை கூவல் விடுத்ததுடன் தேர்தல் நடக்க விடப்போவதில்லை எனவும் அறிவித்தனர். தேர்தல் வேட்பாளர்கள் தேர்தல் பணிமனை சென்று வேட்பு மனு பதிவு செய்ய விடாமல் மஞ்சள் சட்டைக்காரர்கள் தடுத்தனர். மஞ்சள் சட்டைக்காரர்கள் தமது ஆர்ப்பாட்டத்திற்கு Bangkok shutdown எனப்பெயரிட்டுள்ளனர். இந்த ஆண்டு (2014) ஜனவரி 12-ம் திகதியில் இருந்து அவர்கள் தமது ஆர்ப்பாட்டங்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர். தலைநகர் பாங்கொக்கை மஞ்சள் சட்டைக்காரர்கள் ஆக்கிரமித்து பல பணிமனைகளுக்கான மின்சார விநியோகத்தைத் தடை செய்தனர். தங்கை யிங்லக்கின் தலைமையிலான இடைக்கால அரசை நீக்கி நிபுணர்களைக் கொண்ட ஒரு இடைக்கால அரசு அமைக்க வேண்டும் என மஞ்சள் சட்டைக்காரர்களின் தலைவர் சுதேப் அறிவித்துள்ளார். தாமது ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கை யிங்லக்கைக் கைப்பற்றி இடைக்கால அரசுத் தலைவர் பதவியில் இருந்து விலக்குவோம் என சுதேப் தௌக்சுபன் கூறியுள்ளார். சுதேப் தௌக்சுபனின் இந்த மாதிரியான வன்முறைப் பேச்சுக்களுக்காக அவர்மீது கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப்போவதில்லை என உறுதியாக இருக்கிறார் யிங்லக்.

மக்களாட்சி முறைமைப்படி தேர்தல் நடத்த விடாமல் தொடர் ஆர்ப்பாட்டங்களைச் செய்து தாய்லாந்தில் பணக்காரர்களுக்கு சார்பான ஒரு படைத்துறை ஆட்சியை அமைப்பதை மஞ்சள் சட்டைக்காரர்கள் விரும்புகிறார்களா என்ற ஐயம் இப்போது எழுந்துள்ளது. மஞ்சள் சட்டைக்காரர்கள் வெளிநாட்டில் இருக்கும் அண்ணனினதும் தாய்லாந்தில் இருக்கும் தங்கையினதும் கட்சியினர் மக்களுக்கான சமூக நலன் திட்டங்களை அறிவித்து அவர்களால் தேர்தலில் பெரும் வாக்கு வேட்டையாட முடியும் என கருதுகின்றனர். ஆனால் ஆர்ப்பாட்டங்களால் தாய்லாந்தின் பொருளாதார வளர்ச்சி 2013-ம் ஆண்டு பாதியாகக் குறைந்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீட்டில் நான்கு பில்லியன்களை தாய்லாந்தில் இருந்து திரும்பப் பெற்றுவிட்டனர்.

தாய்லாந்தின் நகரவாசிகளும் நடுத்தர வர்க்கத்தினரும் மஞ்சள் சட்டைக்காரர்களின் தொடர் ஆர்ப்பாட்டங்களால் தமது அன்றாட வாழ்வு பெரிதும் பாதிக்கப்படுவதால் மிகவும் சலிப்படைந்து வருகிறார்கள். இதனால் மஞ்சள் சட்டைக்காரர்களுக்கான ஆதரவு குறைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

பொதுவாக தாய்லாந்தில் அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டால் படைத்துறையினர் அமைதியை நிலைநாட்ட அழைக்கப்படுவார்கள். ஆனால் காவற்துறையினர் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவார்கள் என தாய்லாந்தின் இடைக்கால அரசு அறிவித்துள்ளது. படைத்துறையினர் எதிர்க்கட்சியினருக்கு ஆதரவாகச் செயற்படுவார்கள் என்ற அச்சத்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம்.

மக்களாட்சிப்படி எல்லா நாடுகளிலும் தேர்தல் நடைபெற்று ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனப் பரப்புரை செய்யும் ஐக்கிய அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தாய்லாந்தில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களையும் மஞ்சள் சட்டைக்காரர்கள் சட்ட விரோதமாக அரச பணிகளை நடக்க விடாமல் தடுப்பதையும் பற்றி இதுவரை பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. கொலைகள் குண்டு வெட்டிப்புக்கள் எனத் தொடங்கியவுடன் ஐக்கிய அமெரிக்கா ஒரு கண்டனத்தைத் தெரிவித்தது. இலண்டனில் இருந்து செயற்படும் Amnesty International எனப்படும் பன்னாட்டு மன்னிப்பு சபை ஆர்ப்பாட்டக்காரர்களின் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்கிறது.

அமெரிக்காவின் மனித உரிமை கண்காணிப்பகம் 2010-ம் ஆண்டு நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது கொல்லப்பட்ட 98 செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களை யிங்லாக் தண்டிக்கவில்லை எனக் குற்றம் சாட்டுகிறது. பெரும்பாலான மேற்கத்தைய ஊடகங்கள் அண்ணனையும் தங்கையையும் ஊழல் மிக்க ஆட்சியாளர்களாகவே சித்தரிக்கின்றன.

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..

உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..

Enrol them in Learna

• Individualised • Interactive • Inspiring

Maths & English Teaching for 4-16 years olds

FREE Assessment

We also prepare pupils for

• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics



LEARNA because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

# தைப்பொங்கல் விழா



கடந்த18,சனிக்கிழமை, Harrow Civic Centre Chambers மண்டபத்தில் கரோ கவுன்சிலின் ஆதரவுடன் தைப் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது, 150க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் கரோவில் உள்ள தமிழ் பாடசாலைகள் மற்றும் முதியோர் அமைப் புகள், சமூக அமைப்புக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தன. நிறைகுடம், மேளம், நாதஸ்வரம் உட்பட, தமிழ் பொங்கல் உணவுவகைகள் என தமிழ்மணம் கமழ்ந்தது.

# தனிநாயகம் தமிழ்ப்பள்ளி



‘நாளும் தமிழ் வாழும் தமிழ்’ எனும் தனித்துவமான கோஷத்துடன் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பெயரில் ‘தனிநாயகம் தமிழ்ப் பள்ளி’ எனும் ஒரு தமிழ்க் கல்விக்கூடம் கடந்த வெள்ளிக்கிழமை 10.01.2014இல் Ilford County High School, Fremantle Road, Ilford, IG6 2JB எனும் முகவரியில் மாலை 6.00 மணிக்கு தொடக்க விழா கண்டது.

உலகப் பரப்பிற்கு தமிழை எடுத்துவந்த ஈழத்து அடிகளார் தவத்திரு தனிநாயகம் அவர்களின் நூற்றாண்டு விழா உலகமெல்லாம் கொண்டாடப் பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் அடிகளாரின் பெயரால் தமிழ் ஆர்வளர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பள்ளியின் தொடக்க விழாவில் பல தமிழ் அறிஞர்களும் நகரசபை உறுப்பினர்களும் பெருந்திரளான தமிழ்ப் பெற்றோர்களும் பிள்ளைகளும் கலந்து சிறப்பித்தனர்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6-8 மணி வரை நல்ல தமிழை எம் இளையோர்க்கு தரும் இப்பள்ளி தனிநாயகம் தமிழ்ப் பல்கலைக்கழகம் எனும் உயரிய நோக்கினை கொண்டுள்ளது என்றனர் இப்பள்ளி நிறுவுனர்கள்.

‘நாளும் தமிழ் வாழும் தமிழ்’

*தகவல் - சிவா*







# இளையோரின் தைப்பொங்கல் நிகழ்வுகள்



படங்கள் : www.facebook.com/tsiuk

படங்கள் : www.facebook.com/tyouk.media




# கோர்த்து விடும் செய்திகள்

## ■ ஒட்டைவாயரின் படைக்கலன் வியாபாரம் நல்லா நடக்குது

விடுதலைப் புலிகளின் படைக்கலன்களும் அரசுக்கு இப்போது தேவையில்லாத படைக்கலன்களும் இப்போது ஒட்டைவாயரின் சொத்து. அவற்றை அவர் பல நாடுகளுக்கு விற்று பெரும் பணம் சம்பாதிக்கிறாராம். ஒரு படகில் அயல் நாட்டுத் தீவிரவாதிகளுக்கு அனுப்பிய படைக்கலன்களை கரையோரப் பாதுகாப்புப்பிரிவினரிடம் அகப்பட்டு விட்டது. ஒட்டைவாயரோடு அவையின்ரை உளவுத்துறை சேட்டை விட ஏலாது. அவர்களின் போர்க்குற்றங்களை நிரூபிக்கக் கூடிய அத்தனை ஆதாரங்களும் ஒட்டைவாயரிடம் இருக்கிறது. ஒரே வழி புலிகள் இப்போது படைக் கலன்களைக் கடத்துகிறார்கள் என்று கதை கட்ட வேண்டியதுதான்.

## ■ ஏன் பள்ளி கொண்டீரய்யா?

விக்கி ஐயா வட மாகாணத்தில தேவைக்கு அதிகமான படையினர் இருக்கினம் என்று சொன்னதிற்குப் பதிலளித்த மஹிந்தர் தவ டிக்காக் தமாய் இன்னவா - இன்னும் கொஞ்சப் பேர்தான் இருக்கினம் எனப் பொய் சொன்னார். அவரது பொய்யை அம்மபலப் படுத்தும் எந்த ஒன்றையும் செய்ய விக்கி ஐயாவோ சம்பந்தரோ முன்வரவில்லை. மேடையில் பேசிவிட்டு மேடையிலேயே நித்திரையாய் போகிற கூட்டமைப்புத்தானே!

## ■ ஜெனிவாவில் என்ன வரும்?

ஜெனிவாவில் நடக்கவிருக்கும் ஐநா மனித உரிமைக் கழகத்தின் 25வது கூட்டத் தொடரில் என்னமாதிரியான தீர்மானம் அமெரிக்காவால் கொண்டு வரப்படவிருக்கிறது? ஜெனிவாவில் ஏற்கனவே ஐக்கிய அமெரிக்கா கொண்டு வந்த இரண்டு தீர்மானங்களை இலங்கை முற்றாகப் புறக்கணித்துவிட்டது. சில அரசியல் விமர்சகர்கள் அமெரிக்க வெளியுறவுத் துறையினரிடம் ஆண்டு தோறும் தீர்மானங்களைக் கொண்டு வரப் போகிறீர்களா எனக் கேள்வி எழுப்பியுள்ளனர். அமெரிக்காவின் முன்னேற்பாடுகளைப் பார்க்கும் போது தீர்மானம் வித்தியாசமானதாக இருக்கும் எனச் சொல்லலாம். ஆனால் தமிழர்களுக்கு விடிவு கொடுக்கக் கூடியதாக இருக்குமா?


## ■ இந்த ஆண்டு தேர்தல் வருமா

இந்த ஆண்டின் இறுதியில் மஹிந்தருக்கு அட்டமத்துச் சனி ஆரம்பமாகிறதாம் அதனால் அவருக்கு 2015-ம் ஆண்டும் 2016-ம் ஆண்டும் நல்லதில்லையாம். அதனால் இந்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தலும் குடியரசுத் தலைவர் தேர்தலும் நடத்தினால் என்ன என்று யோசிக்கிறாராம். அட்டமத்துச் சனி நீதி மன்றத்தில் நிறுத்துமா? அதுவும் பன்னாட்டு நீதிமன்றத்தில்!!!!

## ■ துள்ளியவர் அமைதியானார்

இலங்கையில் நடந்த பொதுநலவாய மாநாட்டுக்குப் போய் அங்கு மஹிந்தரின் குகையிலேயே துள்ளிய பிரித்தானியப் தலைமை அமைச்சர் டேவிட் கமரூன் இப்போது அடங்கிப் போய் உள்ளாராம். ஆனாலும் வழமை போல் வாஷிங்டனின் தாளத்துக்கு ஆடுவாராம்.

- *ஊருளவாளி*




**Tamil Speaking Personal Injury Lawyer**

**Accident Claim | Vehicle Repair | Hire | Medical Treatment**

Your Claim will be dealt by Raj Rajamohan a Tamil Speaking Personal Injury Lawyer with 12 Years Experience in pursuing a wide variety of Personal Injury Claims. He has recovered over 15 million in compensation settlements for all his valued clients over the years.

*We deal with:* Whiplash Injury claims from Road Traffic Accidents, Car, Van, Motorcycle, Bicycle, Bus, Taxi Passenger, Accident at Work, Slip, Trip & Fall Injury (Public/Private Property or Road), Injury Caused by an Animal, Criminal Injury Claim, Fatal Accidents, Untraced & Uninsured Drivers claim and Others.

*We are authorised and regulated by the Solicitors Regulation Authority*

email: raj.claim@gmail.com / raj@notmyfaultlawyers.com

We'll make your life easier by:

- Speaking the same Language.
- Written advice provided in Tamil
- Treatement & Expert medical advice arranged.
- Vehicle Inspection and Replacement Vehicle.
- Get your maximum compensation for your injuries with no deductions.
- No Obligation free Advice on Telephone

We will pay you £1000 upfront upon accepting your claim

TAXI

. Get 100% compensation
. No Fee
- Win or Lose

**NOT MY FAULT LAWYERS - Mobile : 0781 089 7754 - 4, Prince Albert Drive, Ascot, SL5 8AG**

# பூனைக்கு மணிகட்டுவது யார் ?

பாகம் 146

இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே லண்டன் தமிழர்களுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சி நடைபெற்றுவிட்டது. ஒரு தாய்க்கும் அவளது இரு குழந்தைகளுக்கும் ஏற்பட்ட அவமிருத்தான மரணங்கள்தான் அதற்குக் காரணம். முன்பு ஒரு தடவை தெற்கு லண்டனிலும் இதே போல ஓர் இலங்கைத் தமிழ்ப்பெண்ணும் அவளது குழந்தைகளும் மரணத்தைத் தழுவிக்கொண்டார்கள். தற்போது வடக்கு லண்டனில் இந்த அநியாயம் நடந்திருக்கிறது. போலீஸ் விசாரணைகளின் படி தாய்தான் தன் இரு குழந்தைகளையும் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்திருக்க வேண்டுமென்ற முடிவுதான் எட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இம்முடிவு எந்தளவுக்குச் சரியானது என்பது இன்னும் தெளிவாகவில்லை. அயலிலுள்ளவர்களின் சாட்சியங்களின்படி அந்த வீட்டில் கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி வாக்குவாதங்களும் குழந்தைகள் அழும் சத்தமும் கேட்டதாகத் தெரிய வருகின்றது. என்றாலும் அந்தக் குடும்பச்சண்டை இந்த அளவுக்கு மோசமான ஓர் முடிவை எடுப்பதற்குத் தூண்டியிருக்குமா என்பது பெரிய கேள்வியாயிருக்கிறது. எது எவ்வாறிருந்த போதிலும் ஈழத்தமிழர் சமூகம் மிகவும் ஓர் மூர்க்கத்தனமான சமூகம் என்ற அபிப்பிராயம் ஏனைய சமூகங்களிடம் ஏற்படுவதற்கு இத்தகைய நிகழ்வுகள் காரணமாகிவிட்டன. ஏற்கனவே இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றிருப்பதால் போலீஸாருக்கும் இது பழக்கப்பட்ட விடயமாகிவிட்டது. போதாததற்கு தெற்காசியப் பெண்ணொருத்தி தனது மூன்று வயதுக் குழந்தையைக் கொன்று வீசி எறிந்துவிட்டதாகச் சந்தேகிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

சில வருடங்களுக்கு முன் தமிழ் இளைஞர்களிடையே கோஷ்டிச் சண்டைகள் உருவாகிப் பல கொலைகளும் நடந்தன. தற்போது தமிழ்க் குடும்பப் பெண்களும் பொல்லாதவர்கள் என்ற அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது நாம் எங்கு போகிறோமென்பது புரியாத புதிராகவேயிருக்கிறது.

பிள்ளைகளைப் பெற்று வளர்த்தெடுத்து வெளிநாடொன்றிற்கு அனுப்பிவிட்டால் தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணி நிம்மதியாக இருக்கப் பார்க்கும் எமது தாயகப் பெற்றோர்களுக்கு இது ஒரு நல்ல பாடம். அன்னிய நாடொன்றில் வந்து திக்குத்திசை தெரியாமல் திகைப் பூண்டை மிதித்ததுபோல அலையும் எமது இளஞ்சமுதாயம் இத்தகைய பாரதூரமான முடிவுகளை எடுத்துத் தமது வாழ்வையும் தம்மை நம்பியிருந்தவர்களின் வாழ்வையும் நாசமாக்குகின்றது. இத்தகைய அவல நிலைகள் ஏற்படாமல் ஒரு பொறுப்புமிக்க சமூகத்தின் அங்கத்தவர்களாக அவர்களை மாற்றியமைக்க வேண்டிய கடமை புலம் பெயர்ந்து வாழும் எம்மினத்தவர்களுக்கு உண்டு. துரதிஷ்டவசமாக அதற்கான செயற்திட்டங்கள் எதுவும் எம்மவர் மத்தியில் உருவாக்கப்படவில்லை. எத்தனையோ சமூகநலன்புரி அமைப்புக்கள் இருந்தாலும் அவற்றின் செயற்பாட்டு எல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டே இருக்கின்றன. எம்மவர் மத்தியில் அரசியல், சமயம், கல்வி சார்ந்த வேலைத் திட்டங்களில் இருக்கும் ஆர்வமும், ஆதரவும் சமூகத்தின் உளவியல் மேம்பாடு தொடர்பான விடயங்களில் அடியோடு இல்லை. பூனைக்கு மணிகட்டுவது யார்? என்ற கேள்வியோடு ஆரோக்கியமானவோர் சமூகத்தை அமைக்க நாம் பாடுபடவேண்டுமென்ற கோட்பாட்டுக்கு முற்றுப் புள்ளியிடப்பட்டு விடுகின்றது.

கோஷ்டிகளை உருவாக்கிக்கொண்டு பரஸ்பர வன்ம உணர்வுடன் கொலைவெறியோடு அலையும் சில தமிழ் இளைஞர் கூட்டங்கள் மக்கள்கூடும் சமய நிகழ்வுகளிலும் தெருக்களிலும் மோதல்களை நடாத்துவது பலவருடங்களாக ஐரோப்பா, கனடா போன்ற தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றது. சமீபகாலங்களில் அத்தகைய நிகழ்வுகள் சற்றுக் குறைந்திருந்தாலும் முற்றாக இன்னும் அவை நீங்கிவிடவில்லை. பலபேர் சட்டத்தின் பிடியில் அகப்பட்டு சிறைவாசத்தை அனுபவிப்பதால் கோஷ்டிகளுக்குத் தலைமை தாங்குபவர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைந்திருக்கிறது. இருப்பினும் எதிர்காலத்தில் புதிய தலைவர்கள் உருவாகமாட்டார்கள் என்பதற்கில்லை.

நமது தாயகத்தில் இரண்டாந்தரப் பிரஜைகளாக பெரும்பான்மைச் சமூகத்திற்கும், அவர்களது ஆயுதப்படைகளுக்கும் பயந்து வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து பெரும்பாடுபட்டுத் தப்பிப்பிழைத்து நாம் புலம்பெயர்ந்திருக்கிறோம். அபிவிருத்தியடைந்த வெளிநாடொன்றில் சுதந்திரமான வாழ்வொன்று கிடைத்திருக்கிறது. எமது வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார வளத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கேற்ற சூழ்நிலையும் வேலைவாய்ப்புகளும் போதியளவு உள்ளன. இருந்தும் நமது கொழுப்பு நம்மை அமைதியாக இருக்க விடுவதாயில்லை. தேவையற்ற பிரச்சனைகளுக்குள் மூக்கை நீட்டி பல இளைஞர்கள் தமது தலையில் தாமே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு வாழ்வே சீரழிந்து போய் சிறைகளில் வாசம் செய்கின்றனர்.

எமது சந்ததி கற்றுக்கொண்ட பாடங்கள் போதும் இனியாவது அமைதியான வாழ்வுடன் கூடிய ஆரோக்கியமான சமுதாயம் உருவாகுமென்று எண்ணினால் நம்மினத்தின் குடும்பப் பெண்கள் வேறு மூர்க்கத்தனமான தமது செய்கைகளால் சமூகத்திற்கே அவமானகாரமான காரியங்களில் ஈடுபடுகிறார்கள்.

ஒரு மொழி பெயர்ப்பாளனாகக் கடமை புரிவதால் எம்மினத்தில் நடைபெறும் பலசீரழிவுகளைக் கண்கூடாகக் காணக்கூடியதாயிருக்கிறது. போகுமிடமெல்லாம் விவாகரத்து, குழந்தைகளைப் பார்க்கத் தந்தைமார் கோட்டுக்கு வருதல், குழந்தைகளைச் சமூகசேவையினரிடம் இழந்து தவிக்கும் பெற்றோர்களின் புலம்பல், வீட்டுவன்முறை, சட்டவிரோதச்செயல்களால் அகப்பட்டுக்கொண்டு திணறுதல், தடுப்புக்காவலிலிருந்து விடுபடத் தவித்தல் என்று எம்மினத்தவர் படும்பாடுகள் தெரியவருகின்றது. பாதுகாவலர்களின் பராமரிப்பிலிருக்கும் சில குழந்தைகள், சில சமயங்களில் பேசநா கூசுமளவிற்கான குற்றச்சாட்டுகளைத் தமது பெற்றோருக்கு எதிராக முன்வைக்கிறார்கள்.

தந்தை தன்னுடன் தவறாக நடக்க முற்பட்டார் என்ற வாக்கு மூலத்தைக்கூட மொழி பெயர்க்க வேண்டியேற்பட்டது. அதற்கும் மேலாய் தாயின் தகப்பனான தாத்தாவின் மீதும் கூட அக் குழந்தை குற்றஞ் சாட்டியது. இப்படிப் பல சந்தர்ப்பங்கள். சில தகப்பன்மார் இத்தகைய குற்றச்சாட்டுகளால் அதிர்ச்சியடைந்து போய் என்ன கூறுவது என்று தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறார்கள். இவையெல்லாமே நமது தமிழினத்தில் லண்டனில் நடைபெறும் விடயங்கள். தொழில் தர்மம் கருதி இவைபற்றியெல்லாம் இங்கு எழுதுவதைத் தவிர்த்து வந்தேன். யாரையும் நேரடியாகக் குறிப்பிடாவிட்டால் தர்மம் பாதிக்கப்படாது என்பதால் இந்தச் சந்தர்ப்பத்தில் எழுதுகிறேன். எமது சமூகத்தின் அவலங்களை நேரில் பார்க்கும் சாட்சியங்களாக என்னைப் போலப் பலர் இருக்கிறார்கள். இத்தகைய விடயங்களை நான் நேரில் சந்தித்திருந்தாலும் என்னால் அவற்றை உண்மையாக நடந்தவைதான் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. அப்படிக்கூற மனம்வரவில்லை. நமது இனத்திலும் இப்படி நடக்குமா என்று நம்பமுடியவில்லை, ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. ஆனால் தற்போது நடைபெறும் விடயங்களைப் பார்க்கும்போது நம்பாமலும் இருக்க முடியவில்லை.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

இங்கே அவதானிக்கக் கூடியதாகவிருக்கும் முக்கியமான விடயம் எம்மவர் மத்தியில் இருக்கும் அறியாமைதான். குறிப்பாக, குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்குமிடையில் மொழிப் பிரச்சனையால் ஏற்பட்டுவிட்ட இடைவெளி குழந்தைகள் பெற்றோரை வெறுப்புடன் நோக்குவதற்கு வழிகோலுகிறது. அதனால் அவர்கள் சில சமயங்களில் பாதுகாவலர்களின் பராமரிப்பிலிருந்துகொண்டு பெற்றோருக்கெதிராக நம்பமுடியாத குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள். நமது தாயகப் பாணியிலான வளர்ப்பு முறையை வெறுக்கும் குழந்தைகள் அந்தக் கட்டுப்பாடுகளுக்குள்ளிருந்து வெளிப்பட்டுச் சுதந்திரமாக வாழும் வாழ்க்கையொன்று கிடைக்கும்போது பெற்றோர்களை இழிவாகக் கருதுகிறார்கள்.

சமூகசேவையிலுள்ள அதிகாரிகளையும், சட்டவாளர்களையும் இத்தகைய வீட்டு வன்முறை, குழந்தைகளின் பிரச்சனைகள் தொடர்பான வழக்குகள் வந்தடையும்போது, அவ்வழக்குகளுக்கான செலவுகளும் அதிகரிக்கின்றன. எல்லோருக்கும் மேலதிக கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டியேற்படுகின்றது. ஒரு வழக்கை நடத்திய நீதிபதி அன்றைய நாளுக்கு மட்டும் கிட்டத்தட்டப் பனிரெண்டாயிரம் பவுண்கள் செலவென்று கூறினார். இத்தகைய வழக்குகளுக்குச் சட்ட உதவித்தொகை கிடைப்பதால், பலருக்கும் அப்பணத்திலிருந்து கொடுப்பனவுகள் கிடைக்கின்றன.

தாய்க்கான சட்டத்தரணி, பாரிஸ்டர், தந்தைக்கான சட்டத்தரணி பாரிஸ்டர், குழந்தைகளுக்கான சட்டத்தரணி பாரிஸ்டர், பாதுகாவலர்களுக்கான சட்டத்தரணி, பாரிஸ்டர், குழந்தைகளின் நலன்புரி அலுவலர், சமூக சேவையினர், குழந்தைகளைச் சந்திக்கும் நிலையத்தின் பிரதிநிதிகள், நீதிமன்றத்தின் அலுவலர்கள், நீதிபதிகள், மொழிபெயர்ப்பாளர்கள் என்று ஒருவழக்கில் பதினைந்திற்கும் மேற்பட்டவர்கள் உள்ளடங்குவதால் அவர்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டியேற்படுகின்றது.

### தேவையற்ற பிரச்சனைகளுக்குள் மூக்கை நீட்டி பல இளைஞர்கள் தமது தலையில் தாமே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு வாழ்வே சீரழிந்து போய் சிறைகளில் வாசம் செய்கின்றனர்

நமது இனம் இத்தகைய செலவுகளை ஏற்படுத்துவதில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. தற்போது அருவருக்கத்தக்க குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு சந்திசிரிக்கும் இனமாக நமது புலம்பெயர்ந்த தமிழரினம் காணப்படுகிறது. இந்த இனத்தவர்கள் இப்படித்தான் நடப்பார்கள் அதில் சந்தேகமேயில்லை என்று பலரும் கருதக்கூடிய விதத்தில் நம்மவர்கள் போதிய ஆதாரங்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள்.

எம்மினத்தவரின் அவலநிலைகளை நேரில் காணும் சாட்சியாக நானிருந்தும் தொழில் தர்மம் காரணமாக இந்த அலசுவாரம் பத்தியில் அவைபற்றி எழுதமுடியவில்லையே என்ற ஆதங்கம் நெடுநாட்களாக இருந்தது. ஆனால் யாரையும் நேரடியாகப் பாதிக்காமல் எழுதியே ஆகவேண்டும், அப்படியான பதிவுகள் கட்டாயம் தேவையென்று கருதுவதால் தற்போது எழுதுகிறேன். தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாணென்ன முழமென்ன என்பார்கள். சமீபத்தில் எம்மினத் தாயொருத்திக்கும் இரண்டு குழந்தைகளுக்கும் ஏற்பட்ட அவலமான மரணங்கள் உலக முழுவதும் வெளிச்சமாகி விட்டபிறகு, நமது இனத்திற்குள் நடைபெறும் அவலங்களை நாமே ஒழித்து வைப்பதால் எவ்வித பிரயோசனமுமில்லையென்ற முடிவுக்கு வரவேண்டியதாயுள்ளது.

இனியாவது சமூக நாட்டமுடையவர்கள் அரசியலிலும், சமயத்திலும் காட்டும் ஆர்வங்களைப் போல எமது சமுதாயத்தின் ஆரோக்கியமான ஒழுக்க நடைமுறைகளிலும் ஆர்வம் காட்டி மக்களை வழிநடத்த முன்வரவேண்டும். நமது சமூக நலன்புரியமைப்புகள் இளைஞர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நல்வழியில் இயங்க வழிகாட்டக்கூடிய விதத்தில் தமது செயற்திட்டங்களை வகுத்துச் செயற்படவேண்டும்.

மிகச்சிறியவோர் இனக்குழுமமாக லண்டனில் வாழும் புலம்பெயர் சமூகம் தனக்கெனவோர் கௌரமான இடத்தை இந்தப் பல்லின மக்கள் வாழும் சூழலில் ஏற்படுத்திக் கொள்ளத் தக்கதாக அத்திட்டங்கள் செயற்றிறனுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அது நடக்குமா அல்லது அரசியலும் சமயமுமே கதியென்று கிடப்போமா ?

*தொடருவம்...*

**Group Holiday & Tour Services - Tours for 2014**
We would like to take this opportunity to thank all our guests from over the last 30 years and to wish you all a Happy New Year!

March 2014 — Bangkok ,Chaing Mai, Malayasi & Bali (£1999)
March 2014 — Vietnam,Cambodia & YANGON (£2399.00)
April 19th 2014 — Bulb Fields Holland Two Nights £245.00
4th April Garabandal 3 nights £390.00
May 2014 — 3 days 2 nights Landsend, cornwall outing 2 nights half board £270.00
May 2014 (24th to 26th) — one day trip to Benneux, Belgium £60.00
July 2014 — Lourdes 24th - 29th 3 nights (£280) (BY Coach)
9th June 2014: China Beijing & Xian
Sep/Nov2014 — Main Jothylinga Program 18 Days £2450.00
September 19th 2014 — North India (£1450)Varnasi
7th - 10th Sep 2014 (by air) — Lourdes (£360) 3 nights
May SRI LANKA 10 Days Habarana , Sigiriya, Polonaruwa Minneriya National Park, Dumbulla cave Temple, Temple of tooth,Yala National Park

A.E.Joseph 62, Canadian Avenue, Catford, London, SE6 3BP.
Tel/Fax: 020 8697 1608 Mobile: 07940782282 Email: aejoseph90@hotmail.com

Meera Arnold & Co
for all your accounting needs...

pay roll
Accountancy
Auditing
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333



www.poojasweets.com
Best Quality Vegetarian Food for Any Occasions!
5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!
...tempting?
discover a new heaven on earth:
ORDER ON LINE
FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*
We also do International deliveries*
*Terms apply. See online for details
POOJA
SWEETS & SAVOURIES
The Taste That You Will Love, The Quality That You Can Trust
TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com
KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com




SRI STORE
உங்களுக்குத் தேவையான தரமான தாயக, இந்திய உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள்,
கடல் உணவுகள் மற்றும் அனைத்துப் பொருட்களையும் நியாயமான விலையிலும் தரமான
சேவையுடன் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்.
* Fresh Vegetable & Fruits * Asian, English, Europian, Afro Carribean Foods
குறைந்த செலவு... தரத்தில் நிறைந்த மகிழ்வு... இங்கு மட்டுமே
TelePhone : 020 8553 7737
396-400, ILford Lane, ILford, Essex, IG1 2NB
E-mail: sristore@yahoo.co.uk

# வெண் நிலவுகள்...



- பசுந்திரா சசி

“பிச்சை எடுக்கிறதுக்காகவே பிள்ளையை பெறுவது, பிறகு - பேத்தி, பேத்தி - எண்டு சொல்லித்திரியிறதுபேத்தியின்ர அப்பாவும் நான் தான் ! எண்டு சொல் வேண்டியது தானே....” என எரிந்து கொண்டு பெருமாள் கோயில் படி ஏறினார் ஒரு நடுத்தர வயது பெண் ? அந்த பிச்சைக்காற முதியவருக்கு இது ஒன்றும் புதிதில்லை. சேற்றில் தோய்த்தெடுத்த கோலத்தில் இருந்தாலும் பார்ப்பதற்கு அழகான சிலை போல் ஒரு கையில் பிள்ளையும் மறு கையில் பிச்சைத்தட்டும் ஏந்திய படி இருக்கும் மகளையும், மனம் கல்லாகி மரத்துப் போய் எதற்கும் பதிலோ, இல்லை கேள்வியோ கேட்காத அவரையும் இப்படி ஊரார் எள்ளி நகை யாடுவது இன்று நேற்று அல்ல. இரண்டு வருடத்திற்கு மேலாக நடக்கிறது. ‘மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொழுத்துவோம் ‘ என்ற பாரதியின் கூற்றுக்கு மாதர் முதலில் தம்மை தாமே இழிவு செய்யும் மடமையை கொழுத்த வேண்டும். என்ற எழுத்தாளர் ஜெயகாந்தனின் விபரிப்பை மனதில் எண்ணியபடி . தாடியை தடவிக் கொண்டு அனேகமாக காதலிக்காக காத்திருந்த அந்த இளைஞனை நோக்கி நடந்தார் பேச்சு வேண்டிய பிச்சைக்காற முதியவர் .

யாழ் மாநகரிலே பிரசித்தி வாய்ந்த கோயில்களில் பெருமாள் கோயிலும் ஒன்று . அழகான சுற்றுசூழலில் இருக்கும் இந்த கோயிலில் தினமும் பூசைகள் தவறாது நடைபெறும் . இவ் ஆலயம் அதிக பக்தர்கள் சூழும் இடம் என்பதால் காதலர்கள் முதல் வியாபார நிலையங்கள் வரை ஏன் பிச்சைக்காரர்களுக்கு கூட பஞ்சமில்லை. எதையுமே கண்டு கொள்ளாமல் அவனது காணாக் காதலி மோகனா ‘எப்ப வருவாள் ?, நேரில் எப்படி இருப்பாள் ? , என்னை இனம் காணுவாளா..?, கண்டால் நாணுவாளா , இல்லை பிரமிப்பாளா...? பெரியோரால் திருமணமே நிச்சயிக்கப்பட்டு . இரண்டு வருடம் தொலைபேசியில் மணிக்கணக்கில் பேசிய பின்னும் ஏன் நாணவேண்டும் !. ஒடி வந்து கட்டிக் கொண்டாலும் தப்பில்லை. இந்த கோயில் முன்றலிலா ? , முதல் சந்திப்பை வேறு எங்காவது வைத்திருக்கலாமோ... , பெருமாள் கோயிலில் வைத்தது தப்பாகி விட்டது . ஒரு வேளை அவள் அப்படி நினைத்தாலும் இந்த கூட்டத்தின் முன் எப்படி கட்டிக் கொள்வாள்...? - சீ... என் கற்பனைக்கு இங்கிதமே இல்லை. ‘ தலையை குனிந்த படி தன்னை தானே கடிந்து கொண்டான் ஜோன் . ஏறக்குறைய அவன் இவ் உலகில் இல்லை. வெளிநாட்டில் இருந்து திருமணத்திற்காக வந்திருக்கிறான் . மனைவி பற்றிய கற்பனைகள் இருக்காதா என்ன ?.

அவன் முன்னால் ஒரு அழகிய பூங் கொத்து நீண்டது ‘மோகனா’ என உச்சாடனம் செய்து கொண்டு பிரமிப்போடு நிமிர்ந்தான். முன்னால் ஒரு வயோதிபர் பூச் செண்டுடை நீட்டிய படி நின்றார். அவர் கையில் பிச்சைப்பாத்திரமும் இருந்தது ஜோன் புரியாமல் விழித்தான் .

“மன்னிக்க வேண்டும் தம்பி ! என்ர பேத்தி உங்கட மோட்டார் வண்டியில் இருந்த பூச் செண்டை இழுத்து விழுத்தி விட்டாள். ” என்று பூங்கொத்தை அவனிடம் நீட்டினார் . திரும்பி பார்த்தான் பூவை தவிர மோகனாவுக்காக வாங்கி வந்த மீதிப் பொருட்கள் எல்லாம் இருந்தது. பின்னால் குழந்தை ஒன்று பலமாக வீரிட்டு அழுது கேட்டது அத்திசையில் திரும்பினான் .

“சைலஞ்சர் நல்லா சுட்டுப்போட்டுது” என்ற படி பிள்ளையை மடியில் வைத்து நெற்றியை உரஞ்சிக்கொண்டு இருந்தார் தாய்.

“அதுதான் என்ர பேத்தி , அது மகள். இந்த பூங்கொத்தை எடுக்க வந்து பூவையும் விழுத்தி, தானும் தடக்கி விழுந்து விட்டது. வண்டியின் சைலென்னர் நெற்றில நல்லா சுட்டு போட்டுது . நானும் மகளும் பிச்சை தட்டை குலுக்கிக் கொண்டு இருந்ததால பிள்ளையை கவனிக்க இல்லை”. என்றார் அந்த முதியவர்.

“பரவாய் இல்லை ஐயா..’ என்று விட்டு மலரை வேண்டினான். தான் காதலிக்காக வெளி நாட்டில் இருந்து கொண்டு வந்த ‘கற்பறி கன் டோஸை’ அவரிடம் கொடுத்து பிள்ளையிடம் கொடுக்கச் சொன்னான்.

அவ் வீதியால் கோயிலுக்கு சென்ற இளைஞர்களில் ஒருவன். பிள்ளையோடு இருந்த அவ் இளம் பிச்சைக்காரியை காட்டி “ டேய்.. தொங்கல்ல இருக்கிறத பாத்தியா....? மணித்துண்டு” என்றான் . இன்னொருவன் இந்த முதியவரைப் பார்த்து “தாத்தா கொடுத்து வைச்ச கட்டை !” என்றான். ஜோன் முதியவரை பற்றுதல் இன்றி பார்த்தான். சற்று முன் அவன் காதுகளில் விழுந்து அவன் கிரகிக்காமல் போன அந்த பெண்ணின் பேச்சு மீண்டும் எதிரொலித்தது .

“இந்த வயதிலும் கிழடுக்கு.... சீ.... கறுமம், கறுமம். போயும் போயும் கோயில் வாசல்ல இதுகளை விட்டுக்கிடக்கு.....” ஜோன். முகத்தை சுளித்துக்கொண்டு மறு பக்கம் திரும்பி நெற்றியை தடவினான். பிச்சைக்கார முதியவர் புளுப் போல நெளிந்தார் . அவன் கொடுத்த சொக்லேட் கையில் இருந்து நழுவியது. பேத்தியை கூப்பிட்டு அதை கொடுத்து விட்டு .

“தம்பி உம்மை பார்த்தால் நல்ல பிள்ளை மாதிரி தெரியுது . யாருக்கும் சொல்லத்தேவை இல்லை என்று விட்டதை ஏனோ என் மனம் உமக்கு சொல்ல வேண்ணும் எண்டு நினைக்குது. நான் உண்மையை சொல்லிப் போடுறன் தம்பி! இவையள் சொல்லுறதும் உண்மை தான்? அது என்ர மகளும் இல்லை , இது என்ர பேத்தியும் இல்லை. இரண்டும் என்னை காப்பாற்றும் கடவுள் !’ என்று கண்ணீர் உருகினார்.

“ பின்பு ஏன் பேத்தி என்று பொய் சொல்ல வேண்டும் ?” என எண்ணிக்கொண்டு முதியவரை மேலும் கீழும் பார்த்தான் ஜோன் . முதியவர் தொடர்ந்தார்.

“அவளை நான் முதன் முதலாக பார்த்தது ஒரு வெள்ளிக்கிழமை........”

“ பாரு..., பாருகுட்டி ..., அடி பார்கவி ! நான் மினக்கட்டு கதை சொல்லுறன் நீ என்னடா எண்டால் நித்திரை கொள்ளுறியா...? ? என்ற படி கதையை நிறுத்தி விட்டு மடியில் நித்திரை கொண்ட மகளை உலுப்பினான் யோகேந்திரன் . அவளோ மடியில் கிடந்த படி யன்னல் ஊடாக தெரிந்த நட்சத்திரங்கள் ஊடே கதையின் பாத்திரங்களை மனக்கண்ணில் உலாவ விட்டிருந்தாள் . தந்தை கதையை நிறுத்தியும் சிரிஷ்டித்த பாத்திரங்கள் திரையில் நின்றும் மறையாமல் நீண்டு கொண்டு போயின. அந்த இளம் பிச்சைக்காறியின் தட்டில் கிடந்த வெள்ளிக் காசுகளாய் வான் வெள்ளிகள் மின்னின - திடீரென திடுக்கிட்டவளாய் .

“ அப்பா ஏன் கதையை நிப்பாட்டிப்போட்டீங்கள்.? என்றாள்? உனக்கு நாளைக்கு பள்ளிக் கூடம் நேரத்திற்கு சாப்பிட்டு விட்டு படுக்க வேண்டும் என்றான் யோகேந்திரன். சனிக் கிழமையில யாரப்பா பள்ளிக்கூடம் வைக்கிறது என்று விட்டு சிரித்தாள். ஆறே வயதான மகள் பார்கவி. “சரி சரி கீழ அம்மா கூப்பிடுறா சாப்பிட்டாப்பிறகு மிச்சத்தை சொல்லுறன்” என்றான் யோகேந்திரன்.

◆ ◆ ◆ ◆

“ இண்டைக்கு இங்க லண்டன் -M25- ரோட்டில விபத்தாம் தம்பி கேள்விப்பட்டனியளோ.. ? ” என்றபடி தொலைக்காட்சியை நிறுத்தி விட்டு எழும்பி சமையல் கட்டை நோக்கி வந்தார் யோகேந்திரனின் மனைவி நிலானியின் தந்தை யோசப்பர் . “ ஓம் மாமா அதுதான் நானும் வேலையால வர சுணங்கியது அண்டகிறவுண்ட ரெயின் எண்டால் கெதியா வந்திருக்கலாம் கார் எண்டதால பெரிய கஸ்டமாப் போச்சு” என்று விட்டு சமையல்கட்டுக்குள் நுழைந்தான்.

சமையல் கட்டில் - நிலானி பொரித்து காச்சிய கத்தரிக்காய் குளம்பை அடுப்பை விட்டு இறக்கிக் கொண்டு இருந்தாள். அதன் வாசனை மூக்கோடு சேர்த்து அவனையும் அருகில் இழுத்தது.

வெளியில் மழை சிலு சிலு வென சிணுங்கிக் கொண்டு இருந்தது. ஐரோப்பாவில் இது பனிக் காலம் என்றாலும், இந்த மழைக்கு காலமே இல்லை வருடம் பூராகவும் இப்படித்தான் வடித்துக்கொண்டிருக்கிறது

“ அப்பா விட்ட குறையில இருந்து கதையை சொல்லுங்கோ.....” என்று அடம் பிடித்துக் கொண்டு அழுதாள் பார்கவி .

“சரி சரி... எங்க விட்டனான்.”

“அந்த பிச்சக்கார ஐயா முதல் முதலா இளம் பிச்சக்காரியை எப்ப பாத்தார்.... என்ற இடத்தில”

◆ ◆ ◆ ◆

அந்த பிச்சக்கார முதியவர் சொன்னார் ..

“அது ஒரு வெள்ளிக்கிழமை மாலைப் பொழுது. 2009 சித்திரை முதல் பகுதி , கிளிநொச்சியின் கரையோர புதுமாத்தளன் கிராமம் நாலா புறமும் புகையும் , வெடிச்சத்தமும் , ஓலக் குரலும் , பிஞ்சு போன அங்கங்களும், பெருவாரியான பிரேதக் குவியல்களுமாய் இருந்தது. விளக்கில் விழுந்து சாகும் விட்டில் பூச்சிகள் போல மக்கள் பாதுகாப்பு என ஓடிய இடமெல்லாம் படு குளிகள் ஒளித்திருந்தன. தணலில் விழுந்த நண்டு தாவி அணைச்சதெல்லாம் நெருப்புக் கட்டிகள் என்பது போல் ஒதுங்கிய இடமெல்லாம் குண்டுகள் பாய்ந்தது . நான் - செல் விழுந்து இறந்த என் மனைவி கற்பக மேரியின் கால்களை பிடித்தபடி கதறிக் கொண்டு இருந்தேன். அவ் வளியால் ஓடிய சனம் எல்லாம் என்னை திட்டியது. நான் காதில் போட்டுக் கொள்ள வில்லை. எனக்கு பின்னால் இறந்த தாயின் மார்பை முட்டியபடி ஒரு குழந்தை அழுது கொண்டு கிடந்தது. எங்கள் பக்கம் ஓடி வந்த ஒரு இளம் பெண் அந்த குழந்தையை கையில் எடுத்தபடி என்னிடம் ‘இதில இருந்தால் நீங்களும் சாக வேண்டியது தான் எழும்பி வாங்கோ’ என்றாள். “நான் மாட்டேன் என் மனைவியோடு நானும் போறன் இனி எனக்கு யார் இருக்கு” என அழுதேன் . “அப்பா... .! பிச்சை எடுத்தெண்டாலும் நான் உங்களுக்கு கஞ்சி ஊத்துறன் எழும்பி என்னோட வாங்கோ...’ என்ற அவள் வேறு யாருமல்ல - அதோ பிச்சையே எடுத்துக் கொண்டு இருக்ககும் அந்த பெருமாள் கோயில் இளம் பிச்சக்காரி தான். என்ர ஒரே ஒரு பிள்ளையும் சுனாமியில போயிற்றான். அவள் எப்ப என்னை அப்பா...! என்றாளோ... அப்பவே அவள் என் மகள் ஆகி விட்டாள். இங்கால வந்து என்னை தன் அப்பா என்றும், குழந்தையை தன் மகள் என்றும், கணவன் செல்லடியில் செத்தப் போயிற்றார் என்றும் பதிவு செய்தாள். இரண்டு வருசமா செட்டிகுளம் கதிர்காமர் முகாமில இருந்தோம். பிறகு மீள் குடியேற்றம் எண்டு மாங்குளத்தில கொண்டு

வந்து ஒரு காட்டுக்குள்ள இறக்கிப் போட்டுப் போயிற்றாங்கள். நான் கடல் தொழில் செய்யிறனான். வீடு வளவு , காணி ஒண்டும் இல்லை . அவளோ செஞ்சோலையில இருந்து வளர்ந்த பிள்ளை உறவினர் யாருமே இல்லை. குழந்தைக்கு எங்கள் இருவரையும் தவிர யாரும் இல்லை . நாங்கள் எங்க போவது? வீடு வீடா, கடை கடையா , வேலை கேட்டு திரிஞ்சம். எனக்கு வேலை இல்லை என்று விட்டு அவளின் மேலைப் பார்த்து “வேலை தரலாம் பின்னேரம் வீட்ட வா..” என்றார்கள் . போனால் வேலையை மறந்து விட்டு சேலையை பிடித்தார்கள். உதறி விட்டு வந்துவிட்டாள். அரை வயிறுகால் வயிரோட கிடந்தோம். வாழ வழி இல்லை. யாரோ ஒருவர் யாழ்ப்பாணம் கோயில்ல கஞ்சி ஊத்துறார்கள் என்றார்.

- தொடர்ச்சி 28ம் பக்கம்



# தைப்பிறப்பு



தமிழர்களுக்கு தைப்பொங்கல் புதிய ஆண்டின் முதன்நாள். புதுவருடப்பிறப்பு வள்ளுவர் ஆண்டாக காலாகாலமாக கணிக்கப்பட்டுவருகின்றது. தை முதலாம் நாள், தமிழர்களுடைய புதுவருடமான வள்ளுவர் பிறந்த நாள் என்று, உலகலாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆங்கிலப் புத்தாண்டு ஜனவரி முதலாம் திகதி என கொண்டாடப்படும் வழக்கத்தினிடையையும் தமிழர் வாழும் தாயகப் பிரதேசங்களில் தைப்பொங்கல் தமிழர் நாளாக குதூகலமாகக் கொண்டாடப்படுகிறது. எங்கள் ஊரிலும் அந்த நாட்களில் உழவர் விழா காணுகின்ற நாளாக தைத்திருநாள் இருந்தது. கோலாகலமாக கலை நிகழ்ச்சிகளோடு மகிழ்ச்சியாக அந்த உழவர் திருநாள் நடக்கும்.

பட்டிமன்றம், கவி அரங்கம், கலை நிகழ்ச்சிகள், நாடகம் என்று அந்த விழா களை கட்டும். அம்பனைக் கலைப் பெரு மன்றப் பெயரிலே இயங்கிய கலை மன்றத்தால், வைரவர் ஆலய முன்றலில் நடத்தப்படும் விழா அது. புதுவருடப்பிறப்பின் ஆரம்பம், மாரி வெள்ளத்தின் முடிவு. ஆகாயச் சூரியனின் கதிர்கள் அதிகாலையிலே அகிலப் பரப்பி இருளை அகற்றுவதற்கான கால மாற்றத்தின் ஆரம்பம் என்பனவெல்லாம் இந்தத் தையின் சிறப்புகள் தான். மரம், செடி, கொடி என்று எங்கும் புதிய தளிர்கள் கிளை விடும் காலம் இது. குளிரில் கூடிக்குலாவிய பறவை இனங்களும் காலைச் சூரியனின் கதிரைக் கண்ட களிப்பில் ஆனந்தக் கூச்சலிடுவதையும், பனிப்படர்ந்த தைமாத காலங்களில் கேட்கமுடியும்.

தாய்ப்பறவைகளோடு புதிதாக முட்டைகளைக் கிழித்துக் கொண்டு தலை நீட்டுகின்ற இளம் பறவைகள் கூட தை மாத காலைகளின் தாயகச் சிறப்பு. விவசாயிகளுக்கும் புதிய செடிகளுக்கான நாற்று மேடை அமைக்கின்ற காலம் இது. நெற்செய்கைக்கு அறுவடை காலம் இது. நான்கு மாத உழைப்பின் பலன்கள் கைக்கு வந்து சேருகின்ற நேரம் தை மாதம். பள்ளி மாணவர்களுக்கு புதிய வருடத்தின் புதிய வகுப்புக்கள் புகுகின்ற வகுப்பேற்றம் என்கின்ற உயர்வை நோக்கி நடக்கின்ற களிப்பைத் தருவதும் தை மாதம் தான். கனிஷ்ட பாடசாலை மாணவர்கள் கல்லூரிக்கு மாறுகின்ற மகிழ்ச்சி புதிய வகுப்பறை, புதிய வகுப்பாசிரியர், புதிய புத்தகங்கள், புதிய சீருடை, புதிய சில நண்பர்கள் என மாணவப் பருவத்தின் தை மாதம் புதிய மாற்றத்தைத் தோற்றுவிக்கின்ற மாதம்.

பயிற்சிக் கொப்பிகள், பாடப் புத்தகங்கள் சீருடைக் கடைகள், சீருடைகள், பாதணிக் கடைகள் என்று எல்லாமே காலமாற்றத்தை காசாக்குகின்ற கலகலப்போடு கடை நிறைந்த பொருட்களோடும், வாடிக்கையாளர்களோடும் காணப்படும் மாதம் தை மாதம் தான். பொதுவாக புத்தகம், உடுப்பு என்கின்ற மாணவர்களுக்கான தேவைகளை விற்பனை செய்கின்ற கடைகளுக்கு, வருவாய் வருகின்ற மாதம் தை மாதம். அடுப்பறை என்ற சமையறைக்குள் அம்மாக்களின் கரங்களில் பழையன கழிவதும், புதியன புகுவதும் இந்த மாதத்தில் ஆரம்பம் காட்டும். பொங்கலுக்கு முன்னதாக இவைகள் நடக்கும். பொங்கலோடு மாட்டு வண்டில்களை வீட்டு வாசலைத் தாண்டும் பானை, சட்டி விற்பனையாளர்களிடம் புதிய மண் சட்டி வாங்குவதும், பழைய சைவ அல்லது மச்சச் சட்டிகளை பாவனைக்கு ஏற்றவையல்ல என்று கோடிக்குள் கவிட்டு வைப்பதும், இந்த நாட்களில் ஏற்படும் மாற்றம் ஒன்று.

தாய், தகப்பன், பிள்ளைகளுக்கு தனித்தனியாக வழக்கத்திலிருந்த பித்தளை மூக்குப் பேணி, அலுமினியக் கோப்பை, சில அலுமினியச் சட்டிகள் என்பன புதிதாக சமையறைக்குள் நுழையும். ஊர் வாசிகசாலைகள் கலை நிகழ்ச்சிகள், பொங்கல் விழா செய்வதும் இந்த நாட்களில் உற்சாகமான ஒன்று. மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள், ஆங்குமிங்குமாக நடக்கும். பொதுசன சங்கங்களில் ஆண்டு விழாக்கள் புதிய நிர்வாகிகள் தெரிவு என்ற மாற்றமாக தை மாதம் இருந்தது. அனேகமாக புதுவருடத்தோடு ஒட்டி மாற்றமாகி வரும் உத்தியோகத்தர்களை உள்வாங்குவதும் சங்கத்தைச் சார்ந்திருக்கும் சிலர் ஆர்வம் காட்டுவார்கள். பொங்கலுக்கென்று புதிதாக வெளியாகும் சினிமாப் படங்களால் நகர்ப்புறப் பகுதிகள் களை கட்டும். எந்தச் சனி அல்லது ஞாயிறு படத்திற்குக் கூட்டிப் போவது என்று பிள்ளைகளின் கேள்வியாக இருக்கும்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

எப்படியோ நல்லதெனச் சொல்லப்படுகின்ற ஒரு சில சினிமாப் படங்களுக்கு பிள்ளைகளை கூட்டிச் செல்லும் தாய் தகப்பனையும் அனேக குடும்பங்களில் இந்த மாதங்களில் காண முடியும். மாரிக்காற்று, சூறாவளி அபாயம் எனக் கடற்தொழிலில் ஏற்பட்ட மந்த மாற்றங்கள் மாறி மீன்பிடிப் படகுகள் கடலுக்குள் அலை அலையாக நுழைய ஆர்வம் காட்டுவதும் தை மாதப் புத்துணர்வு.

சூடை மீன் கூடைகளை நிரப்ப மீன் விற்பனையாளர்களின் ஹோரன் சத்தம் வீதிகளில் மீண்டும் பலமாக ஒலிக்க ஆரம்பமாகும். மாரி மழையால் முட்டி நின்ற கிணறுகளில் நீர் மட்டம் படிப்படியாக இறங்குவதும் கேணிகள், குளங்கள் என்று நீர் நிலைகளின் தண்ணீர் மட்டம் உயர்ந்து ஒரு இளம் சூட்டு உற்சாகத்தைத் தருவதும் தைமாதச் சிறப்புகளில் ஒன்று. இன்னும் ஒரு பார்வையில் தை மாதம் செலவுக்குரிய மாதமாக இருக்கின்றது. எல்லாவற்றையும் வாங்குவதற்காக இந்தச் செலவுகளை ஈடு கட்டுவதற்காக கடன் படுவதிலும், சேமிப்பிலிருந்து பணத்தை எடுப்பதிலும் என்ற மனச் சுமையிலும் குடும்பத் தலைவர்களின் கவலையைக் கூட்டுகின்ற மாதமாகவும், தை மாதம் தான் இருக்கின்றது.

தாய், தந்தையர் கடன் சுமையை எப்படி ஈடுகட்டுவது என்று தவிப்பதையும் காணமுடியும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கைக்குடைய வாக்காக காலாகாலமாக தொடர்கின்றது. தை பிறந்திருக்கின்றது தமிழர்களுக்கு வழி காட்டுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## அம்மாவாணை எனக்கொரு ஆசை !!

அம்மாணை எனக்கொரு ஆசை
ஊரில படுக்கவேணும்
என்ர மண்ணுக்கு மேல...
ஓப்பனுக்கெண்டாலும்
நிம்மதியா நித்திரை கொள்ள..

எத்தனை நாளைக்கு
இங்க குளிரில கிடந்து சாக
இஞ்சை ஒரு கோதாரியும்
இல்லை காசைத் தவிர.!

சில்லம்பல்லமாய் சிதறிப்போச்சு
எங்கட வாழ்க்கை
மக்கரிப்பாங்கள் எங்கட
ஊருக்குள்ள வந்ததால.!

கடல் தண்ணி குண்டி நனைக்க
கக்காவுக்கு இருந்த சுகம்
"ஏசிக்" கக்கூசுக்குள்ள
ஓப்பனுக்கும் இல்லை.

கரவலை மீனில
ஒரு சொதியும்..
கறுத்தப்பச்சையரிசி சோறும்...
கறுமொறெண்டு
அப்பளப்பொரியலும்...
சுட்ட பத்தாம்பட்டி கருவாடும்...
உந்த "சைனீஸ்" காரண்ட
"பிறைட் றைஸ்" பிச்சை வாங்கும்.

சாதுவா கோப்பிறேசன்
கள்ளைப்போட்டு
தென்னை மர நிழலில
சாரத்தைப்போட்டு
தலை மாட்டில "ரேடியோவில"
பாட்டைப்போட்டு
சும்மா கிடந்தா நித்திரை
கண்ணை செம்மும்.

அம்மாணை எனக்கொரு ஆசை
ஊரில படுக்கவேணும்
என்ர மண்ணுக்கு மேல

கொடிகாமத்து கூழன்
பிலாப்பழத்தை
கொண்டு வருவா சரசு மாமி
சந்தை "வானில்"
நாலா புறிச்சு ஒரு பங்கு
வாங்கி வந்து
நல்லா கையிலை
எண்ணை பூசி
சுழையை பிரிச்சுத்திண்டா
புறங்கையில ஓடும் தேனா..!

"கூப்பன்" மாவில
புட்டைக்குழைச்சு
சாதுவா தேங்காய்ப்பூவை
மேல தூவி
சீனியும் கொஞ்சம் போட்டு
கறுத்தக்கொழும்பான்
மாம்பழத்தை துண்டாய் சீவி
குழைச்சு அடிச்சா சொல்லி
வேலையில்லை.

கொட்டையை வடிவா சூப்பி
திண்டபிறகு சருவத்துக்கு
பக்கத்தில தாட்டு
வைச்சா முளைக்கும் மாங்கண்டு.

அம்மாணை எனக்கொரு ஆசை
ஊரில படுக்கவேணும்
என்ர மண்ணுக்கு மேல

சில்லம்பல்லமாய் சிதறிப்போச்சு
எங்கட வாழ்க்கை
மக்கரிப்பாங்கள் எங்கட
ஊருக்கை வந்ததால

அண்ணை கனடாவில ஓடாய்தேஞ்சு
என்னை எடுத்துவிட்டான் இஞ்சை
"ஏஜென்சி" காரனிட்ட காசைக்கொட்டி

குண்டி தேய உழைக்க வேணும்
வாங்கின கடன் குடுக்க வேணும்

என்ன கோதாரிக்கு
இஞ்சை அனுப்பினவங்கள்
ஒரு அறுப்பும் விளங்கயில்லை.

என்ர சினேகித பொடியள நினைச்சா
கவலை வரும்
அம்மான்ர மடியை நினைச்சா அழுகை
வரும்.

சாப்பிடும் போது பிரைக்கடிக்கும்
ஊரில மச்சாள் தான்
நினைக்கிறாள் எண்டதும்
அவள் பாத்து கொடுப்புக்குள்ள
சிரிச்சதுதான் நினைவு வரும்.

மச்சாளைப்பார்க்க
பின்னெரத்தில மாமி வீடு
முட்டைப்பொரியலும் நண்டுக்கறியும்
மருமோனுக்கு சக்க வசதி

விக்கல் வந்து நிமிந்து பாத்தா
மச்சாள் தருவாள்
செம்பில பச்சைத்தண்ணி
கடைசியாய் குண்டு
கோப்பையில் தேத்தண்ணி

அம்மாணை எனக்கொரு ஆசை
ஊரில படுக்கவேணும்
என்ர மண்ணுக்கு மேல
ஓப்பனுக்கெண்டாலும்
நிம்மதியா நித்திரை கொள்ள

எத்தனை நாளைக்கு
இங்க குளிரில கிடந்து சாக
இஞ்சை ஒரு கோதாரியும் இல்லை
காசைத் தவிர

அம்மாவாணை எனக்கொரு ஆசை
என்னைத் திருப்பி அனுப்பவேணும்..!!!!

தமிழ்ப்பொடியன்
12.01.2014



# நிவேதா உதயராஜனின் சிறுகதைகள்…

**– முல்லை அமுதன்**

சிறுகதைக்கான வரைவிலக்கணம் எதையும் கணித்த படி தற்போதைய சிறுகதைகள் வாசிக்கக் கிடைக்க வில்லை. இன்று பலர் சிறுகதைக்குள் வந்துவிட்டனர். கல்வி, கணனியியல் வசதி என வாய்ப்புக்கள் கைக்குள் வர வடிவங்களிலும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இன மோதல் களில் சிதறுண்ட மக்கள் பல நாடுகளில் வாழும் நிலையில் வாழ்வின் சோகம், யுத்த நோவுகள், குடும்பச் சிதைவுகள், ஒன்றிணைவுகள் எல்லாம் இன்னும் கைகளுக்குள் வராத சூழலில் பலர் எழுத்தை தம் வடிகாலாக்கினர். இதற்கு புலம்பெயர் சூழலில் வானொலிகளின், தொலைக்காட்சி களின், அச்சு ஊடகங்களின் வருகை பலரையும் உள் வாங்கும் களமாகவும் ஆகிவிட்ட நிலையில் சிறுகதைகள் எழுதும் பலரையும் உருவாக்கிவிட்டிருந்தது.

புதிய சிந்தனைகளை வரவேற்கும் சிறுசஞ்சிகைகளின் வருகையும் நம்பிக்கை ஊட்டுவனவாகவே அமைந்தன. கூடவே, முகநூலின், சமூக வலைத் தளங்களின் வருகை யும் பலரின் எழுத்தை சுவைக்கும் வாய்ப்பும் நமக்குக் கிடைத்தன. படிமுறை வளர்ச்சி, பிற இலக்கியங்களை வாசிக்கும் பன்முக ஆற்றலும் அவர்களுக்குள் மாற்றங் களையும் ஏற்படுத்தியது.

லண்டனிலிருந்து தமிழாசிரியராகவும், செய்தி வாசிப் பாளராகவும் எமக்கு அறிமுகமான நிவேதா உதயராஜன் எழுதிய சிறுகதைகள் சிலவற்றை அண்மையில் வாசிக்கக் கிடைத்தது.

அவரது ‘**நீங்கள் கடிச்சிட்டுத் தாங்கோ**’ என்கிற கதை புலம்பெயர் நாடுகளில் நடைபெறும் கதை. தனியாக வாழும் ஒருவனுக்கு அவனது தாய் பெண் பார்த்து அனுப்பு கிறாள். அப் பெண் ஏஜண்ட் ஊடாக வருகையில் இத்தாலி யில் தாண்ட கப்பலுடன் மூழ்கிப்போகிறாள். பின் அனுப் பப்படும் பெண் முன்னால் வந்து நின்று ஆயிரம் கற்பனை களை அவனுள் ஏற்படுத்த அதுவும் நனவாகிவிடுகிறது. அவள் இன்னொருவனுடன் சொல்லாமேயே சென்று விடுகிறாள். செல்வன் என்கிற பாத்திரம் மூலம் கதை சொல்லப்படுகிறது. அவனின் தாய், தங்கை, எழிலி என்கிற பாத்திரங்களூடாக கதை நகர்த்தபட்டிருக்கிறது.செல் வனின் எதிர்பார்ப்பு,குடும்பத்தாருக்காக தன்னை அர்ப் பணித்து வாழ்கிற சராசரி மனிதனின் மன உணர்வுகளை அழகாக சொல்லியிருக்கிறார்.

ஆரவாரமில்லாத கதை நகர்வு.கதையாக சொல்லாமல் ஒரு வாழ்வியல் அனுபவத்தைச் சொல்கிற இவரின் கதை சொல்லும் பாங்கு விரும்பத்தக்கது.தமிழர்களிடையே காணப்படும்,சாதகம்,கிரகங்கள்,பெண்பார்க்கும் படலங்கள் இன்னும் வாழ்வியல் மாற்றங்களிடையேயும் மறைந்துவிடவில்லை என்பதை இவரின் கதை சொல்லிச் செல்கிறது.

‘**பெண்**’ என்கிற கதை முகநூல் நண்பரை நம்பி மோசம் போகும் மது என்கிற பெண்ணின் சோகம் சொல்லப்படுகிறது.விரும்பித் திருமணம் செய்யும் கபிலன், மதுவுக்கு குழந்தையும் கிடைக்கிறது.வீட்டில் குழந்தை,வீட்டுவேலை, கணவன் குடும்பம் என்றிருந்த வளுக்கு கணணி வாய்ப்புக்கிடைக்க அதன் முலம் முக நூலில் அரட்டை அடிக்கும் பழக்கத்தில் அறிமுக மாகும் கரனின் நட்பு அவளின் வாழ்வை திசை திருப்பி விடுகிறது.பின் கரனிடமிருந்து கிடைத்த ஏமாற்றம் கபிலனை, அவன் மூலம் கிடைத்த மகிழ்ச்சி,குழந்தை மனதில் வந்து போக அவனிடம் வந்து சேர்கிறதான கதை நமது அன்றாட வாழ்வில் வந்துபோகிற பாத்திரங்கள் தான். கதை லாவகமாக நகர்த்தப்பட்டிருக்கிறது.அதிக வர்ண னைகள் அற்ற கதை சொல்லும் பாங்கு சில சமயம் சுவாரஸ்யம் குன்றிவிடவும் வாய்ப்புண்டு. பாத்திரங்கள் இன்னும் ஆழமாக உருவாக்கப்பட்டிருகலாமோ என நினைக்கத் தோன்றுகிறது.

ஒவ்வொரு கதைகளிலும் புலம்பெயர் வாழ்வின் கதை கள்,சோகங்கள்,நோவுகள் சொல்லப்படுகின்றன. அனுபவம்என்பதுஇருவகை..தன்அனுபவம்.இன்னொன்று பிறரது ஞாபகம்.கதாசிரியருக்கும் இவ்வனுபவம் நிறை யவே இருக்கிறதாக கதை மூலம் உணரப்படுகிறது.

ஏஜண்டு மூலம் அனுப்படுகின்ற ஒவ்வொரு ஆணும், பெண்ணும் படுகின்ற அவலங்கள் யாவரும் அனுபவித்தே வந்துள்ளனர். இன்னும் அவுஸ்திரேலியா,இத்தாலியக் கடலுள் மூழ்கி போகிற உயிர்கள்தான் எத்தனை… அவன் அல்லது அவள் வருவதை எதிர்பார்த்து வலிக்கின்ற மனது கள் தான் எத்தனை?எத்தனை??

‘**நினைவு சுடும்**’ கதை கூட அவலத்தின் இன்னொரு கதைதான்.

காந்தன் சுசிலா எனும் இரண்டு பாத்திரங்களூடாக இன்றைய சமகால அவலத்தைச் சொல்லுகிறார்.ஏஜன்ட் மூலம் மனைவியையும் குழந்தையையும் எடுக்கப்போய் இன்னொருவரின் மனைவியாக வருகின்ற பெண்படும் காயங்கள் அழகாகச் சொல்லப்படுகிற கதை ‘நினைவு சுடும்’. ரஸ்யாவிலிருந்து களவாக எல்லையைக் கடக் கின்ற போது சூழல் பிரிக்கபடுகின்ற போது உறவுகளும் பிரிந்து போக காலம் முழுதும் வலியுடன் வாழ்கிற கொடுமை சொல்லப்படுகிறது. இப்படி எத்தனை மனிதர்கள் எல்லையைக் கடக்கின்றனர். எத்தனை பேர் குடும்பங்களுடன் இணைகிறார்கள். குடும்ப உறவுச் சிக்கல் எப்படு மாறுபாடடைகிறது. சமூகம் ஏற்றுக்கொள் கிறதோ இல்லையோ காலம் நமக்கு சொல்லிவைக்கிற பாடம் அனேகம். கதை நேரடியாகவே சொல்லப்படு கிறது. ஆலாபனைகள் அதிகம் இல்லை. பாத்திரங்களின் உரையாடல்கள் இன்னும் ஆழமாகப் பேசப்பபட்டிருக் கலாம்.

**புதிய சிந்தனைகளை வரவேற்கும் சிறுசஞ்சிகைகளின் வருகையும் நம்பிக்கை ஊட்டுவனவாகவே அமைந்தன. படிமுறை வளர்ச்சி, பிற இலக்கியங்களை வாசிக்கும் பன்முக ஆற்றலும் அவர்களுக்குள் மாற்றங் களையும் ஏற்படுத்தியது.**

முகநூல் நண்பனாகி அவனை மனதுள் விருப்பத்திற் குரியவனாக்கி அவனின் அண்மை தேவைப்பட, அவளுக்கு பல்கலைக்கழகம் சுதந்திர உணர்வுகள் சிற கசைக்க, கை கொடுக்க, ஒரு சந்திப்பின் போது அவனின் சுயரூபம் தெரியவர அவனின் நட்பைத் துண்டிக்க எண் ணியவளுக்கு சிரமங்கள் ஏற்பட இறுதியில் காவல் நிலையம் புறப்படுவதாக ‘**எத்தனை மரங்கள் தாவும்**’ கதை சொல்கிறது.

நிவேதா இப்போது தான் சிறுகதைகளில் கை வைத் திருக்கிறார் என்று தெரிகிறது.ஆனாலும் சொல்ல வந்ததை சொல்கிறார். குறைவாவே எழுதும் நிவேதா தொடர்ச்சியான எழுத்து பயிற்சியைக் கொடுக்கலாம்.

இன்னும் வீச்சான கதைகளை எதிர்காலத்தில் எதிர் பார்த்து இலக்கிய உலகம் காத்திருக்கிறது.

# Manchester City Enjoy Taste of Success with Jaguar Energy Drink UK

Jaguar Energy Drink becomes first Official UK and Ireland Energy Drink Partner of Manchester City.

Jaguar Energy Drink UK has today announced a new partnership agreement to become the first ‘Official UK and Ireland Energy Drink Partner’ of Manchester City Football Club. The deal with the newly launched energy brand is the only sponsorship of its kind in the Barclays Premier League and the brand’s first taste of football sponsorship in the UK.

The sponsorship will kick-off at the top of the table clash between Manchester City and Chelsea at the Etihad Stadium, on Monday 3rd February.Fans attending the eagerly awaited fixture will be able to sample the product for the first time, where itwill be available throughout the Club’s food and beverage offering.

This includes the Etihad Stadium’s corporate suites, hospitality boxes, stadium concourse kiosks andin BT City Square, the Club’s pre-match fan entertainment zone. Following the launch, Jaguar will collaborate on a series of bespoke in-stadium and digital fanactivations throughout the remainder of the season.

Dr Amit Sra, C.E.O at 1SRA LTD, Jaguar Energy Drink U.K said:

“As one of the biggest football clubs in the world and one famous for its loyal and passionate fanbase, Manchester City was the only choice for Jaguar Energy Drink. We pride ourselves on theknowledge that once you try Jaguar Energy Drink you will become a fan for life, so we are lookingforward to giving supporters their first taste of the brand at home to Chelsea. This is the start of agreat journey which will see us roll-out an exciting campaign to City fans.”

Tom Glick, Chief Commercial and Operating Officer for Manchester City Football Club, also commented:

“We’re delighted to welcome Jaguar on board and are extremely proud to be selected as their firstever sports partner. We look forward to helping them grow their brand over the coming years and are sure that Jaguar will be a big hit with our fans”.

# Professor S.J. Tambiah…

*(continued from page 14)*

..Sri Lanka—given Buddhism’s traditionally nonviolent philosophy—are able to participate in the fierce political violence of the Sinhalese against the Tamils.” In this book, Tambiah was critical of the essentialized notions “Buddhism in terms of its pristine teachings and viewed all subsequent developments, especially those of political kind as deviations from the canonical form.” This book is misunderstood and misinterpreted by many of his critics. As a pacifist who believed in Buddhist notions of non-violence, Tambiah was greatly disturbed by the ethnic violence in Sri Lanka and always hoped for a peaceful settlement. His negative experience during the ethnic riots during 1950s and threats following his book prevented him from visiting Sri Lanka frequently.

In November 1997, Tambiah received the prestigious Balzan Prize for “penetrating social-anthropological analysis of the fundamental problems of ethnic violence in South East Asia and original studies on the dynamics of Buddhist societies [that] have opened the way to an innovative and rigorous social-anthropological approach to the internal dynamics of different civilizations”. Later Royal Anthropological Institute of Great Britain and Ireland awarded him the Huxley Memorial Medal and Lecture, the highest award by the institute.

In 1998, he was awarded the Fukuoka Asian Culture Prize by the city of Fukuoka, Japan. In 2000, he was inducted as a corresponding Fellow of the British Academy a title given to those who have “attained high international standing” in a discipline in the humanities or social sciences. He also served as the president of the Association for Asian Studies (1989-90) and was a fellow of the American Academy of Arts and Sciences (1984) and a member of the National Academy of Science (1994).

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்….



seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from concept to design

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 37 வயது, 5'4" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4797

2. 34 வயது, 5'6" Accountant born and brought up in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4788

3. 55 வயது, 5'6" Permanent resident divorced software engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4787

4. 41 வயது, 5'8" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4786

5. 39 வயது, 5'9" British citizen, self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4782

6. 27 வயது, 5'8" Graduate, working in Colombo தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4784

7. 34 வயது, 5'11" Divorced born and brought up in uk doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4781

8. 30 வயது, 5'3" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4775

9. 34 வயது, 5'6" Permanent residence in uk doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4598

10. 41 வயது, 5'8" British citizen working in a IT department in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

11. 29 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4195

12. 48 வயது, 5'8" Permanent residence divorced accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422

13. 33 வயது, 5'7" working in a company in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4737

14. 31 வயது, 6'1" Graduate student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4732

15. 33 வயது, 5'7" German citizen working as a health care assistant in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4757

16. 38 வயது, 5'9" work permit visa working as a cashier in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4412

17. 30 வயது, 6'0" Graduate, civil engineering in Australia, Australian citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4783

18. 47 வயது, 5'11" British citizen working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4755

19. 23 வயது, 5'5" Residence permit for 5 years self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4752

20. 32 வயது, 5'11" Permanent residence in france working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4746

21. 27 வயது, 5'5" Graduate student visa working as a web developer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4745

22. 26 வயது, 5'10" Graduate German citizen working in company in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4744

23. 34 வயது, 5'1" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4733

24. 25 வயது, 6'0" British citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4743

25. 42 வயது, 5'7" Permanent residence shop keeper தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4742

26. 29 வயது, 5'8" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4740

27. 33 வயது, 5'7" working in a company in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4737

28. 31 வயது, 6'1" Graduate student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4732

29. 40 வயது, 6'1" Divorced Graduate working in a Administrative service தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1684

30. 26 வயது, 5'10" Permanent visa working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4722

31. 42 வயது, 5'8" British citizen woking in Investment Bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

32. 30 வயது, 5'6" British citizen doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272

33. 35 வயது, 5'4" PSW visa graduate working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4730

34. 31 வயது, 5'6" Australia citizen working as a system engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4729

35. 31 வயது, 5'7" Geman citizen manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4615

36. 33 வயது, 5'8" Permanent residence in uk software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4503

37. 33 வயது, 5'8" divorced work permit visa graduate doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4713

38. 30 வயது, 5'8" Born and brought up in uk working as a IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4710

39. 31 வயது, 6'3" Permanent residence in Singapore Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4708

40. 40 வயது, 5'3" British citizen working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4706

41. 21 வயது, 5'5" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4701

42. 30 வயது, 5'2" Teacher in srilankan தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4009

43. 45 வயது, 5'6" German citizen Living in UK, Divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4660

44. 26 வயது, 6'1" Born and brought up in uk working as a Software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4699

45. 41 வயது, 5'8" PR holder in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

46. 59 வயது, 5'4" British citizen handicap தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4697

47. 32 வயது, 5'5" Permanent residence in France working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4695

48. 28 வயது, 5'8" student visa in uk graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4690

49. 34 வயது, 5'5" Canadian citizen working in a bank as a manager in Canada தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4724

50. 34 வயது, 5'6" Asylum seeker living in uk for 14 years தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4688

## மணமகன் தேவை

1. 40 வயது, 5'5" Asylum seeker in france தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4795

2. 30 வயது, 5'4" British citizen divorced graduate working as a IT consulant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4793

3. 28 வயது, 5'2" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4789

4. 22 வயது, 5'3" British citizen working as a teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4785

5. 45 வயது, 5'5" in srilanka working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4772

6. 48 வயது, 5'2" German citizen divorced working as a teacher with the child தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4770

7. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4766

8. 40 வயது, 5'10" German citizen Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4756

9. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754

10. 34 வயது, 5'0" Graduate working in a IT field in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4749

11. 24 வயது, 5'3" Graduate working in a Bank in uk French citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4161

12. 43 வயது, 5'3" Graduate British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4731

13. 38 வயது, 5'3" Graduate British citizen working as a Graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4646

14. 43 வயது, 5'2" German citizen Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4666

15. 29 வயது, 5'5" Residing in Srilanka, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4519

16. 31 வயது, 5'4" Canadian, Residing in Canadian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4527

17. 39 வயது, 5'2" Born and brought up in uk working as a Project manager in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4704

18. 35 வயது, 5'5" divorced british citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4709

19. 24 வயது, 5'8" German citizen graduate working in a private sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4702

20. 38 வயது, 5'3" German citizen working as a graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

21. 27 வயது, 5'2" Born and broughtup in uk nurse தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4681

22. 28 வயது, 5'6" PSW visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4673

23. 29 வயது, 5'6" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4659

24. 27 வயது, 5'1" medical student living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3350

25. 27 வயது, 5'4" srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4414

26. 27 வயது, 5'3" Permanent residence working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

27. 28 வயது, 5'3" British citizen working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4629

28. 21 வயது, 5'3" born and broughtup in Norway student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4607

29. 35 வயது, 5'5" working as a manager in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4591

30. 39 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

31. 31 வயது, 5'6" British citizen accountant working in NHS Hospital தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4584

32. 44 வயது, 5'2" divorced, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4576

33. 25 வயது, 5'3" Permanent residence working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

34. 30 வயது, 5'3" British citizen Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4562

35. 32 வயது, 5'10" srilanka, graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4552

36. 32 வயது, 5'3" British citizen working in a company as a manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4539

37. 24 வயது, 5'4" born and brought up in uk working as a financial investment in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3504

38. 33 வயது, 5'5" Accountant in Singapore தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3947

39. 40 வயது, 5'3" divorced German citizen living in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4542

40. 30 வயது, 5'7" British citizen working in NHS as a Personal assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4357

41. 33 வயது, 5'2" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4513

42. 31 வயது, 5'5" Graduate working in a supermarket in a work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102

43. 39 வயது, 5'3" widowed living with childrend in netherland wishes to move to uk accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4511

44. 28 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4496

45. 22 வயது, 5'3" British citizen accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4491

46. 34 வயது, 5'4" PR in Uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4489

47. 21 வயது, 5'8" PR in Uk student graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4488

48. 26 வயது, 5'0" PR in Uk graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4487

49. 27 வயது, 5'2" British citizen Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4485

50. 25 வயது, 5'6" PR in Uk working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4484

51. 29 வயது, 5'7" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4483

52. 34 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4473

53. 24 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4481

54. 27 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4477

55. 23 வயது, 5'2" British citizen graduate student தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4471

56. 37 வயது, 5'5" Accountant working in srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4465

57. 40 வயது, 5'4" Doctor work permit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4455

58. 32 வயது, 5'0" working in pharmacy US citizen living in US தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4398

59. 29 வயது, 5'2" British citizen graduate working in NHS தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

60. 28 வயது, 5'8" British citizen working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

61. 33 வயது, 5'2" British citizen divorced working as a IT manager தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4373

62. 23 வயது, 4'10" Permanent residence in uk student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4362

63. 24 வயது, 5'4" Graduate living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4536

64. 28 வயது, 5'3" British citizen, working in an IT field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4338

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# புற்றுநோய்




**மாசிலாமணி**

*(ஒரு பேப்பருக்காக)*

எமது உடலின் ஒவ்வொரு உயிர்க் கலமும் சுவாசிக்கின்றது. அவற்றிற்கு போதிய உயிர்வளி கிடைக்காமையே புற்று நோய்க்கான காரணிகளில் முதல் இடத்தைப் பிடிக்கின்றது. போதிய உயிர்வளி இல்லாது சீரழியும் கலங்கள் புற்று நோய்க் கலங்களாக மாறும் சந்தர்ப்பங்களில் அப்படி மாறும் கலங்கள் நொதித்தல் மூலம் கிடைக்கும் உயிர் வளியைப் பயன்படுத்தும் ஆற்றல் கொண்டவையாக உள்ளதால் நலனுடன் உள்ள கலங்களிலும் அவற்றின் வளர்ச்சி கூடும்.

நிலையான, உறுதியான தன்மையே மூலக் கூறுக்களின் இயல்பான தன்மை. என்ன காரணத்தினாலோ ஒரு மூலக்கூறு ஒரு இலத்திரனை இழந்து இலத்திரன் எண்ணிக்கை முழுமை பெறாத நிலையை அடைந்தால் அது ஆபத்தானதாகி விடும். அது சுயமாக கட்டுப்பாடின்றி இயங்கத் தொடங்கிவிடும். உயிரியலில் இவற்றை free rdicals என்பார்கள். இவை எந்த அளவுக்கு ஆபத்தானவை என்றால். நன்நிலையில் உள்ள கலங்களின் டி.என்.ஏ.யில் இருந்துகூட இலத்திரன்களைப் பறித்து அவற்றை புற்றுக் கலங்களாக மாற்ற வல்லவை.

200 ஆண்டுகளுக்கு முன்பிருந்த விகிதாசாரத்தைவிட கூடிய விகிதாசாமானவர்கள் புற்று நோயால் பாதிப்படைகிறார்கள். காரணம் Free radicals உற்பத்தி கூடுவதற்கு ஏற்ற சூழல் கூடியுள்ளது. நீர் என்றால் அதற்குள் குளோரின் கலக்கப்படுகிது. மின்காந்த அலைகளின் பயன்பாடு கூடியுள்ளது. பூச்சி கொல்லிகளின் நஞ்சும் மற்றைய நஞ்சுகளும் கூடியுள்ளன.

கலத்தின் கருவிலுள்ள டி.என்.ஏ. தாக்கத்துக்கு உள்ளானால் அவை இறந்து விடும். விதிவிலக்காக சில கலங்கள் இறக்காது தப்பி விடுகின்றன. அவைதான் ஆபத்தானவை. கட்டுப்பாட்டிற்கு உட்படாது பெருகும் தன்மை அடைகின்றன. இப்படியான ஒரு கோளாறு ஏற்படுவது கண்டு உடற் கட்டுமானம் அலட்சியமாய் இருக்காது. தற்காப்பு நடவடிக்கையாக அவற்றை அழிக்கும். அதற்கும் தப்பும் கலங்களே புற்று நோயை தோற்றுவிக்கின்றன. வயதும் மரபுவழி வரும் ஜீன்களும் காரணிகளுடன் ஒத்துழைக்கின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பெருக்கத்தை இழந்து பெருகும் கலங்கள் தம்மை எண்ணிக்கையில் பெருக்கிக் கொள்ளும். எண்ணிக்கை கூடும்போது தமக்கு தேவையான இரத்த ஓட்டக் குழாய்களைக் கூட அமைத்துக் கொள்கின்றன. காலப் போக்கில் உடலின் வேறு பகுதிகளுக்கு சென்று ஏற்ற இடத்தில் வளரவும் தொடங்குகின்றன. உடல் உறுப்புக்களைப் பாதிக்கின்றன. வெளி உறுப்புகள் என்றால் கட்டி, புண் போன்ற அறிகுறிகள் தோன்றும். ஈரல், நுரை ஈரல் போன்ற முக்கிய உள் உறுப்புகள் தாக்கப்பட்டால், பெரும் பாதிப்பு ஏற்பட்ட பின்புதான் எமக்கு தெரிய வரும். கொடிய நோய் இது. எமக்குத் தெரியாமலே எமது இறுதிப் பயணத்திற்கு நாள் குறித்து விடும்.

புற்று நோயிலிருந்து எம்மைக் காப்பதில் எங்கள் உணவுள் அடங்கும் உயிர்வளியேற்ற எதிர்பிகள் பெரும் பங்கை வகிக்கின்றன. அவற்றின் முக்கிய பங்களிப்பு இந்த இலத்திரன் எண்ணிக்கை முற்றுப்பெறாத மூலக்கூறுகள் எமது உடலிலுள்ள கலங்களுக்குபாதிப்பை ஏற்படுத்து முன் அவற்றிறிற்கு தேவையான இலத்திரன்களை அவைகளே அளித்து எம் கலன்களின் அழிவைத் தடுக்கின்றன.

உயிர்ச் சத்துக்கள் A, C, E ஆகியவை உயிர்வளியேற்ற எதிர்ப்பிகளாகச் செயற்படுவது கண்டறிந்தமைதான் உயிர் வேதியலில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. இன்று பழங்களும் மரக்கறி வகைகளும் சிறந்த உயிர் வளியேற்ற எதிர்ப்பிகள் என்று சிபார்சு செய்கிறார்கள்.

நாம் புற்று நோய் முதல் பல்வேறு தாக்கங்களுக்கு ஆளாகாமல் எம்மை பாதுகாக்க வேண்டுமென்றால் உயிர்வளியேற்ற எதிர்ப்பிகள் தயவைத்தான் நாடவேண்டும். இவற்றுள் எத்தனையோ வகை அடங்கும். தலை சிறந்த உயிர்வளியேற்ற எதிர்ப்பியான உள்ளியில் மட்டும் அந்த ரகத்தைச் சேர்ந்த 15 வகையான பொருள்கள் அடங்குகின்றன. தேயிலைகூட, அதில் உள்ள பிளேனோவிட் என்னும் உயிர் வளியேற்ற எதிர்ப்பிக்காக எம் பட்டியலில் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. அவரை இன விதைகளும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. எம் மனதைவிட்டு அகலாத விடயங்களில் ஒன்றாக நாம் நாள்தோறும் உணவுடன் போதிய அளவு உயிர்வளியேற்ற எதிர்ப்பிகள் எடுப்பதும் இருக்க வேண்டும். பழங்கள் கூட தேவைக்கு அதிகமாக எடுப்பதைப் பெரிதாகச் சிபார்சு செய்யவில்லை.

சாதாரண கலங்களுக்குள்ள வீரியம் புற்றுக் கலங்களுக்கு இல்லை. இந்த வீரியம் குன்றிய தன்மையைப் பயன்படுத்தித்தான் இந்தக் கலங்களை கதிர் வீச்சு மூலமோ வேறு வழிகளிலோ கொல்லுகிறார்கள். இந்தச் சிகிச்சையின் போது நன்நிலையிலுள்ள சாதாரண கலங்களும் பாதிப்புக்கு உள்ளாகலாம். மிதைல்குளைக்சல் என்னும் ஊசிமூலம் செலுத்தும் மருந்து உடலில் இருக்கும்போது புற்றுநோய்க் கலங்களின் பெருக்கம் தடைபடுகிறது. இவற்றைவிட ஆச்சரியப் படத்தக்க வகையில் சியோலைற் என்னும் தாதுப் பொருள் புற்றுநோய்க் கலங்களை மட்டும் கொல்லுகிறதாம்.

ஆனால் அது இன்னும் அங்கீகாரம் பெறாத மருந்தாகவே உள்ளது. இம்மருந்தால் மரணத்தின் வாயில் வரை சென்றவர்கள் கூடத் தப்பி பிழைத்துள்ளார்கள். அக்கறை உள்ளவர்கள் சியோலைற் பற்றிய விபரம் தரும் இணையத்தளத்தில் மேலதிக தகவல் பெறலாம்.

(http://www.cancerfightingstrategies.com)

சாதாரண கலங்களுக்குள்ள வீரியம் புற்றுக் கலங்களுக்கு இல்லாததால் அவற்றின் மந்த நிலையைப் பயன்படுத்தி போதியளவு நீரும் உகந்த உணவும் உட்கொண்டு மற்றைய கலங்களை உசார்படுத்துவதன் மூலம் புற்றுநோய்க் கலங்களுக்கு பாதகமான சூழலை உருவாக்கலாம். உயிர்வளியை குருதியிலிருந்து நேரடியாகப் பயன் படுத்துதல் புற்றுக் கலங்களுக்கு எளிதான செயல் அன்று. அவை கலங்களுக்குள் கூட்டுப் பொருளாக மாறிய உயிர்வளியையே பயன்படுத்துபவை.

உயிர்வளி புற்றுக் கலங்களுக்கு கிடைப்பதைத் தவிர்க்க, கலங்களுள் கூட்டுப் பொருளாக மாறிய பிராண வாயுவை வெளிக் கொண்டுவர வல்ல உயர்வளியேற்ற எதிர்ப்பிகளான பழவகை, மரக்கறி போன்ற உணவு வகைகளையும் தேநீர் போன்ற நீர் ஆகார வகைகளையும் இனங்கண்டு உட்கொள்ளுதல் நல்ல பலனைத் தரும். உயிர்க் கலங்களுக்கு தேவையான பிராண வாயு கிடைக்காமல் அவை பாதிப்புற்று புற்றுக் கலங்களாக மாறும் அதேசமயம் பிராண வாயுச் சூழலில் புற்றுக் கலங்கள் அழியும்.

உடலின் அமிலத் தன்மையைக் குறைப்பதும் அவசியம். காரணம் அமிலச் சூழலில்தான் புற்றுநோய்க் கலங்கள் பெருகும் சாத்தியம் அதிகம். உணவின் பங்களிப்பு அமிலத் தன்மையைப் போக்குவதில் முக்கிய பங்கை வகிக்கின்றது. உயிரக் கலங்களுக்கு தேவையான அளவு சுரப்பித் திரவங்கள் சென்றடையாவிட்டாலும் பாதிப்பு உண்டாகும். சமைத்த உணவை மட்டும் சாப்பிடாது சமைக்காது உண்ணும் கரட், பழவகை, லெட்ரூஸ் போன்றவற்றையும் உணவுடன் கலந்து சாப்பிட வேண்டும்.

இது கடைசியில் வந்தாலும் மிகவும் இன்றியமையாத செய்தி. உளவியல் ரீதியான பாதிப்பு எம் நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பாதிப்பதால் நாம் நலனுடன் வாழ தேவையற்ற கவலைகளை எப்பவுமே விட்டெறிய வேண்டும்.

# வெண் நிலவுகள்

*(24ம் பக்கத் தொடர்ச்சி)*

இங்கு வந்தால் வெள்ளியில மட்டும் தான் ஏதாவது எங்காவது கொடுக்கிறார்கள். பிள்ளையின் பசிக்காக நான் கை நீட்டினேன், எனக்காக அவள் கை நீட்டினாள், எங்கள் இருவருக்குமாக பிள்ளை கை நீட்டியது இதோ இப்போது பிரபல்யமான பெருமாள் கோயில் பிச்சைக்காரர்கள் ஆகிவிட்டோம்.

பிள்ளை வரம் வேண்டும் என்று தவம் கிடக்கும் பல தாய்களுக்கு மத்தியில் எத்தனை பிள்ளைகள் ஒரு தாய் வேண்டும் என ஏங்கி நிற்கிறார்கள் என்று தன்னையே தாயாக்கிக் கொண்டு வாழும் அந்த தெய்வ விக்கிரகத்திற்கு எத்தனை வசைகள் !எத்தனை வடுக்கள் !. தம்பி உங்களை கை எடுத்து கும்பிடுறன் ஏதாவது ஒரு தொழில்செய்து பிழைக்க எங்களுக்கு ஒரு வழி காட்டுங்கோ.... ' என கண் கலங்கினார் அந்த முதியவர்.

அதற்குள் ஜோனின் கை தொலைபேசி சிணுங்கியது, எடுத்தான் அவன் காதலி மோகனா. "ஹலோ..., ஹலோ..., ஓம், ஓம், நான் ஜோன் கதைக்கிறன்."

"ஜோன் நான் உங்களை பார்க்க வாறது அம்மாவுக்கு தெரிஞ்சு போச்சு. கலியாணத்திற்கு முதல் தனிய உங்களோட வெளிய போக வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டா! நாளைக்கு இதே நேரம் எப்படியும் கோயிலுக்கு வருவன், நாம் ஒருவரை ஒருவர் முதல் முதல் கோயில்ல தான் பார்க்க வேண்டும். நீங்கள் திரும்பி விடுதிக்கு போங்கோ இரவு போன் பண்ணுறன். " என்று விட்டு வைத்தாள் மோகனா.

இன்னும் அந்த முதியவர் அவன் முன்னாலே நின்றார். " ஐயா ஒன்றுக்கும் யோசிக்காதேங்கோ, எனக்கு தெரிஞ்ச ஒரு ஆள் கனடா இந்துக் கோயில் ஒன்றில தலைவரா இருக்கிறார் . அவை இங்க உள்ள பல கைவிடப்பட்ட எங்கிட ஆட்களை பராமரிக்கினம், உங்கட பெயர் விபரத்தை தாங்கோ, நான் அவரோட கதைச்சுப் போட்டு உங்களுக்கு சொல்லுறன்." என்று விட்டு தானே விபரத்தை எழுதி வேண்டினான். மெதுவாக மழை தூற ஆரம்பித்தது. "சரி ஐயா நான் கொஞ்ச நாளைக்கு இங்க தான் நிப்பன் பிறகு உங்களை பார்க்கிறேன் ' என்று கிளம்பினான்.

◆ ◆ ◆ ◆

மறுநாள் அதே இடத்தில் அவனின் எதிர்கால மனைவிக்காக வந்து நின்றான் . இன்று - நேற்றை விட பொலிவாக இருந்தான் . உள்ளத்தில் ஒரு அழகிய உணர்வும் கண்ணில் எதிர்பார்ப்புமாக அந்தரத்தில் நின்றான். படத்தில் பார்த்தவளை நேரில் பார்க்கப்போகிறோம் - என்ற பதைப்பு அவன் கால்களிலும் தெரிந்தது . அவனுக்கு இடப்பக்கமாக ஆட்டோ ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ஒரு சட்டை போட்ட சாமரம் இறங்கிவந்தது .மோகனமாக வந்தாள் அவளோ தான் மோகனா ! அவள் அருகில் வர முன் அவளின் வாசம் சுவாசத்தில் கலந்தது ' அடடா ! என் நண்பர்கள் நல்ல பெண்ணைதான் தெரிவு செய்திருக்கிறார்கள். இரண்டு வருடமாய் நம்முடன் கதைத்தவளா இவள் ? ' என நினைத்தபடி மெய் மறந்து நின்றான்.

"ஜோன் தானே நீங்கள்.." அவன் சிரித்தவாறே வலிந்து வார்த்தைகளை வரவழைத்துக் கொண்டு

" ஓம் நான் தான் ஜோன் , ஆனால் நான் உங்களை உடனே அடையாளம் கண்டு விட்டேன்" என்றான். "கொஞ்சம் தனிய போய் பேசலாமா..?" என்றபடி தேர்முட்டிக்கு அருகில் சென்றாள். அவன் பரிசுப் பொருட்களையும் எடுக்காமல் அவளை பின் தொடர்ந்தான். அவள் சன நடமாட்டம் இல்லாத இடத்திற்கு வந்ததும்.

" இஞ்ச பாருங்கோ ஜோன் . இனியும் நான் உங்களை ஏமாற்ற விரும்ப வில்லை !நான் ஒருவரை காதலிக்கிறேன். இனி நீங்கள் எனக்கு போன் பண்ண வேண்டாம் இத பெரிசு படுத்தினா என்னை ஏமாத்திப்போட்டார் என்று சொல்லுவன் பிறகு யாரும் உங்களுக்கு பொண்ணுதர மாட்டார்கள். இதை இதோட விட்டிருங்கோ " என்று விட்டு பதிலை எதிர்பாராமல் அதே ஆட்டோவில் ஏறிப் போய் விட்டாள்.

தேர் சில்லோடு சாய்ந்து இருந்து விட்டான் ஜோன். அதன் சில்லு அவன் கழுத்திலும் வயிற்றிலும் ஏறி கடந்து போவது போல் இருந்தது. கண்கள் திறந்திருக்க காட்சிகள் இறந்து கிடந்தன. சில கணங்கள் அவன் இல்லாமல் இருந்தான். "சீ... " என்று விட்டு எழுந்தான் . பெருமாள் சன்னிதானத்திற்குள் புகுந்தான். பெருமாள் உண்டியலுக்குள் போனை போட்டான். கிணற்று நீரில் அவளோடு பேசிய வாயை கழுவினான். வண்டிக்கு வந்தான். வண்டிச் சீற்றில் இருந்த புதிய பூங்கொத்தை எடுத்துச் சென்று முளங்காலில் நின்றபடி "என்னை திருமணம் செய்து கொள்கிறாயா ..." என்று அந்த பிச்சைக்காறியிடம் நீட்டிக் கொண்டு கேட்டான். அந்த வரிசையில் இருந்த எல்லா பிச்சைக்காரர்களும் தட்டை கீழே போட்டு விட்டு அவனையே பார்த்தனர். கோயிலுக்கு வந்தவர்கள் வாயிலுக்கு போகாமல் வாயை பிளந்தபடி நின்றனர். அவள் - அருகில் இருந்த தந்தையை பார்த்தாள். பின் மடியில் இருந்த பிள்ளையைப் பார்த்து விட்டு மீண்டும் தந்தையை பார்த்தாள்.

" தம்பிக்கு நமது கதை எல்லாம் தெரியும். எனக்கு சம்மதம் இனி உன் விருப்பம் " என்றார் தந்தை.

சுற்றி இருந்தவர்கள். " ஓம் எண்டு சொல்லு பிள்ள இப்ப நீ வாழும் வாழ்க்கையை விட எதுவும் கேவலமா இருந்து விடாது" என்றார்கள்.

அவள் தந்தையையே பார்த்துக்கொண்டு இருந்தாள். அவர் "நீ என்ன முடிவு எடுத்தாலும் அதில் எனக்கு முழு சம்மதம்" என்றார். அவளின் மௌனம் கலைய வில்லை . கண்ணில் இருந்து ஒரு துளி பல காலத்திற்கு பின் கனிந்து தட்டில் கிடந்த வெள்ளிக்காசின் மேல் விழுந்து தெறித்தது. அருகில் இருந்த கால் இல்லாத ஒரு அம்மா " தம்பி !பிள்ளை ஓம் எண்டு சொல்லி போட்டுது நீங்கள் ஆக வேண்டியதை கவனியுங்கோ ? என்றார். அவன் பூச் செண்டை நெருங்கி நீட்டினான். அவள் இரு கையாலும் வாங்கி அந்த பூக்களிடையே முகத்தை புதைத்தாள் . என்ன ஆச்சரியம் அவள் முகமும் ஒரு பூவாக மாறிவிட்டது . பின் அதை மடியில் இருந்த பிள்ளையிடம் கொடுத்தாள். அது அவளை பார்த்து சிரித்ததுக் கொண்டு வேண்டியது .

வீதியில் நின்ற மினி வான் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி மணப்பெண், முதியவர், குழந்தை உட்பட அந்த கோயிலில் இருந்த எல்லா திக்கற்றோரையும் வண்டியில் ஏற்றி தான் தங்கி இருந்த விடுதிக்கு கொண்டு சென்றான். பின் ஒவ்வொருவருக்கும் சுமாரான விலையில் உடுப்பு எடுத்து தந்தான். தான் கொண்டு வந்த திருமண புடவையையும் ஏனைய பரிசுப் பொருட்களையும் அவளிடம் கொடுத்து பதிவுத்திருமணத்திற்கு தயாராகுமாறு கூறினான். யாழ் கச்சேரியில் அந்த முன்னாள் செல்வந்தர்கள் முன்னால் ஆடம்பரமின்றி ஆனால் அழகாக திருமணம் நிறைவேறியது. விருந்து முடிந்த பின் அவளின் சக தொழிலாளிகளை ஆதரவற்றோர் காப்பகத்தில் சேர்த்து விட்டன் . பின் மனைவி , குழந்தை, முதியவருடன் வீடு சென்றான் .

-சுபம் -

"சரி கதை முடிஞ்சு போச்சு ..! தூங்கம்மா " என்றபடி மகளை தூக்கிக் கொண்டு அவளின் அறைக்கு நடந்தான் யோகேந்திரன். அறையின் வாசலிலேயே தம்பி என்னிட்ட தாங்கோ நான் தூங்க வைக்கிறேன் என வேண்டிக்கொண்டார் அவனின் மாமா . அவரிடம் கொடுத்து விட்டு கதவை பூட்டிக்கொண்டு திரும்பினான். அழுதவாறு நின்றாள் மனைவி நிலானி . "ஏன் என்னத்திற்கு இப்ப அழுறீர் ? உமக்கும் கதை சொல்ல வேணுமோ ? " என்றான் .

"நீங்கள் மட்டும் அண்டைக்கு பெருமாள் கோயிலுக்கு வந்திருக்காட்டி இப்பவும் எத்தனை நாள் பட்டினியோட எந்த கோயில் வாசல்லயோ தெரியாது" என விம்மி விம்மி அழுதாள். அவளின் கண்ணீரை துடைத்தபடி அவளின் மன நிலையை திசை திருப்பும் நோக்குடன் "யோகேந்திரன் எப்படி ஜோன் ஆனேன் என்று தெரியுமா ?" என்றான். அவள் அழுதபடியே இல்லை என்று தலையை ஆட்டினாள்.

"யோகேந்திரன் - நல்லா இல்லை என்று கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நடு - கேந்திர -த்தை வெட்டி சுருக்கி 'யோன்' எண்டு அந்த ஏமாற்றுக்காறி தான் வைத்தாள் என்றான் . வெளியில் முதியவர் அவருக்காக கை ஏந்திய பேத்தி பார்கவியின் கையை முத்தமிட்டுவிட்டு சிரிப்பது கேட்டது . நிலானியும் சிரித்தாள்.

*முற்றும்.*

# சமூக அநீதிகள் பற்றி அண்ணன்

## சதாவின் நாட்குறிப்பிலிருந்து......



முன்பெல்லாம் நாங்கள் கோபம் வந்தால் கெட்டவார்த்தைகள் சொல்வதுபோல, ஒரு வரை பார்த்து நாயே குரங்கே எருமை மாடே என்றல்லாம் திட்டுவது வழக்கம். அது போலவே, சாதிப் பெயர்களை சொல்லி திட்டுவதும் வழக்கம். அது எந்தச் சாதி என்று கிடையாது எல்லாச் சாதிப் பெயர்களும் வரும். இது எமக்குள் ஒரு சாதாரண தினமும் நடக்கும் இயல்பான விடயம். ஒருவர் என்ன சாதி என்று யாரும் நோண்டிப் பார்ப்பதில்லை. ஆனாலும் கோபம் வந்தால் ஏதோ வாய்க்கு வந்தபடி ஒரு கெட்ட வார்த்தை சொல்லி திட்டுவது போலவே யதார்ர்த்தமாக எல்லா சாதிப் பெயராலும் திட்டுவார்கள். எந்தச் சாதிப் பெயரை சொன்னாலும் அது கெட்ட வார்த்தை என்பதுதான் அங்கு அர்த்தம். ஆனால் சாதிப் பாகுபாட்டை பார்ப்பதில்லை. சில இடங்களில் அது பிரச்சனைகளாக இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

**சின்னச் சின்ன விடயங்களை உன்னிப்பாக கவனித்து போராளிகளை உருவாக்கினார், அண்ணன். அதுதான் மனங்களில் போராளிகள் வாழும் நிலையை உருவாக்கியது.**

சாதிக் கலவரங்கள் சில இடங்களில் நடைபெற்றபோதிலும் அவை குடும்பத் தகராறுகள் போலவே இருந்தன. சில இடங்களில் சற்று மோசமாக இருந்தன. ஆனால் சில இடங்களில் அப்படி ஏதும் இல்லை என்றே சொல்லலாம். பொதுவாக ஈழத்தின் தலைநகர் திருகோணமலையில் அது அறவே இல்லை என்று சொல்லலாம், என் வாழ் நாளில் இதுவரை நான் அப்படி ஒரு நிகழ்வை சந்தித்ததில்லை. இருப்பினும் சிலர் என்னிடம் சில முறைப்பாடுகள் சொல்லியிருந்தார்கள்.

இந்நிலையில் 1983 இல் அண்ணனின் பாசறையில் ஒரு சம்பவம். பயிற்ச்சி களம் அது. அங்கு எல்லோரும் பயிற்சி எடுத்துவிட்டு ஓய்வாக இருக்கும்பொழுது இரண்டு போராளிகளுக்குள் ஏதோ ஒரு சின்ன வாய் தர்க்கம் ஏற்பட்டது. மறு பக்கம் ஒரு சின்னச் சுவர் அருகே அண்ணன் ஓய்வாக சாய்ந்து இருந்தது அவர்களுக்கு தெரியாது. அண்ணனும் என்ன தான் நடக்கின்றது பார்ப்போம் என்று அவர்கள் தர்க்கத்தை பொறுமையாகக் கேட்டபடி இருந்தார். எங்களை அமைதியாக இருங்கள் என்றுவிட்டு அவர்களது வாய்த்தர்க்கத்தை அவர் செவிமடுத்தார். அந்த இரு போராளிகளும் தர்க்கப்படும்போது, ஒரு போராளி மற்றய போராளியை ஒரு சாதிப்பெயரை கோபத்தில் உச்சரித்து விட்டார்.

அப்போது அண்ணன் எழுந்து சென்று இருவரையும் மைதானத்துக்கு கூட்டி வந்தார் அங்கிருந்த மற்றவர்களையும் அழைத்தார் எல்லாரும் அமர்ந்து கொண்டார்கள். அண்ணன் இருவருக்குள்ளும் என்ன பிரச்சனை என்று கேட்டார். அவர்களது உடைகள் கலந்துவிட்டது இது என்னுடையது உன்னுடையது என்று ஆரம்பித்து அவர்களுக்குள் வாய்த்தர்க்கம் ஆகிவிட்டது .

அண்ணன் அவர்களுக்கு சொன்னார் “நீங்கள் இருவரும் ஒரு உடைக்காக சண்டை போடுகிறீர்கள். முதலில் இப்ப நடந்துகொள்ளலாமா என்று சிந்தியுங்கள். உண்மையில் நீங்கள் இருவரும் அன்பாக பேசித் தீர்க்கலாம் இல்லையா? சரி ஒருவர் வேண்டும் என்றே உங்கள் உடையை எடுத்தால் உங்களால் தீர்க்கமுடியா விட்டால் அதை உங்கள் பொறுப்பாளருக்கு சொல்லுங்கள். இப்படி சின்னச்சின்ன விடையங்களுக்காக சண்டை போடக்கூடாது. அது பெரிய விளைவுகளுக்கும் மனகசப்புக்கும் வழி செய்துவிடும். ஈகை, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, அன்பு என்பன இல்லாமல் ஒரு போராளி உருவாகமுடியாது. மேலும் நீங்கள் வாய்சண்டையிடும்போது உங்களில் ஒருவர் ஒரு சாதிப் பேரை சொல்லி மற்றவரை திட்டினீர்கள். அது தான் இங்கு மிகப்பெரிய பிழை. நீங்கள் யதார்த்தமாக வாயில் வரும் ஒரு கெட்ட வார்த்தை போல சாதிப் பெயரைச் சொல்லி இருக்கலாம். அதன் அர்த்தம் தெரியாமல்கூட சொல்லி இருக்கலாம், மற்றையவர் அந்த சமூகத்தை சார்ந்தவர் இல்லை என்றாலும் நீங்கள் அவரை ஒரு சமூகப் பெயரால் திட்டுவது பெரும் தவறு.

அவ்வாறு நீங்கள் யதார்த்தமாக, அதன் விளைவு தெரியாமல் சாதிப் பெயர்களைச் சொல்வது, சமூகத்தில் சில இடங்களில் அது மிகப்பெரிய தாக்கத்தை கொண்டுவரும், நீங்கள் சொல்லித் திட்டும் சமூகத்திலிருந்து எங்களுடன் வந்து இணைந்து, இந்த மண்ணுக்காக போராட வந்த ஒரு போராளி உங்களுக்குள் இருக்கலாம். நீங்கள் தேவையில்லாமல் அவரது சமூகப் பெயரை இங்கு இழுப்பது அவரது மனதைப் பாதிக்கும். இது எந்த வகையில் நியாயம்? சாதிப் பெயரை உங்கள் இவருடைய சண்டைக்குள் இழுப்பது இன்னும் ஒருவரை உங்கள் சண்டைக்குள்? இழுக்கும்? செயல். அது உங்களை அறியாமலே நீங்கள் செய்கின்ற மிகபெரிய தவறு. அதனுடைய தாக்கம் மிகவும் பெரிதாக இருக்கும்.

**இவ்வாறு அண்ணன் ஒவ்வொரு விடயத்துக்கும் அழகாக விளக்கம் சொல்லி போராளிகளை சமூக சிந்தனைமிக்கவராக மாற்றிய பின்னே களம் இறக்குவார்.**

இவ்வாறான சின்ன சின்ன விடையங்கள் மிகப் பாரிய விரிசலை கொண்டுவரும். ஆக மிக அவதானமாக நாங்கள் என்ன செய்கின்றோம், எப்படி பேசுகின்றோம் என்று உணர வேண்டும் . நீங்கள் எல்லோரும் மிக பெரிய பொறுப்புகளை கையில் எடுக்க உள்ளீர்கள். சின்னச் சின்ன விடயங்களை உங்களால் சமாளிக்க முடியாவிடில் நீங்கள் பெரிய விடயங்களில் கவனம் செலுத்த முடியாது. எனவே இவ்வாறான வாய் தர்க்கங்களில் ஈடுபடுவதை தவிர்த்து கொள்ளுங்கள். நாளை மக்கள் முன் நீங்கள் நிற்கும் பொது மக்களை உங்கள்மீது வெறுப்பு அடையும் வகையில் நடந்து கொள்ளாதீர்கள்.

அவர்கள் உங்களை திட்டினாலும் அவர்களை திட்டாதீர்கள். அவர்கள் பிழை செய்தால் எடுத்து சொல்லுங்கள் இல்லை உங்கள் பொறுப்பாளருக்கு தெரியப் படுத்துங்கள்”

இவ்வாறு அண்ணன் ஒவ்வொரு விடயத்துக்கும் அழகாக விளக்கம் சொல்லி போராளிகளை சமூக சிந்தனைமிக்கவராக மாற்றிய பின்னே களம் இறக்குவார். அரசியல் போராளிகளான எம்மை இன்னும் ஆழமாகச் சிந்திக்கச் சொல்லுவார். அன்று அந்த போராளிகள் இருவரும் சண்டையிட்டு தகாதவார்த்தை பிரயோகம் செய்தமைக்காக கடுமையான உடற் பயிற்சிக்கு உள்ளானார்கள்.

சின்னச்சின்ன விடயங்களை உன்னிப்பாக கவனித்து போராளிகளை உருவாக்கினார், அண்ணன். அதுதான் மனங்களில் போராளிகள் வாழும் நிலையை உருவாக்கியது.

## கிட்டு என்ற அந்தப் புலிப் பொடி...

தமிழர் நிலத்தினிலே
ஒல்லாந்தன் கட்டிய கோட்டையிலே
சிங்கக்கொடி..
அது அகற்றி தமிழர் வீரப் புலிக்
கொடியேற்ற சமராடியது ஒரு பொடி
அவனே.. கிட்டு என்ற அந்த புலிப் பொடி.

வேட்டுகள் அவன் விருப்பு அல்ல
மக்கள் விடுதலையே அவன் கனவு..!
சின்னப் பொடியள் முதல்
வயதான தாத்தா வரை
"மாமா" என்றழைக்கும் அன்பு மகன்..
யாழ் நகரின் செல்லப் பொடி.. அவனே..
கிட்டு என்ற அந்தப் புலிப் பொடி..!

விடுதலைப் பாதையிலே
தொல்லைகள் தந்தோர்
குண்டு எறிய ஒற்றைக் காலிழந்த பொடி
நம்பிக்கை தளராத
துணிவோடு களமாடினான் அவனே..
கிட்டு என்ற அந்தப் புலிப் பொடி.

தமிழீழ விடுதலை என்ற
தேசக் கடமைக்காய்
உறவுகளைப் பலப்படுத்த
தலைவன் காட்டி பாதையில்
ராஜதந்திரியாய் ஏழ்கடல் தாண்டி
தொலை தேசமும் நகர்ந்தான் அவனே..
கிட்டு என்ற அந்தப் புலிப் பொடி.

தமிழீழ மண்ணில்
நீந்திய வல்லாதிக்க வெறியுடன்
அண்ணன் படை சண்டை போட
சர்வதேச அரங்கில் இவன்
தமிழர் போராட்ட நீதிக்காய்
முழங்கினான். – அவனே..
கிட்டு என்ற அந்தப் புலிப் பொடி.

இடையில்... அமைதி என்ற பெயரில்
நீந்திய சதி விளங்காது
படகேறி.. வங்கக் கடல்நடுவே தோழரொடு..
தமிழர் வீர மரபேந்தி
வீரமரணம் அடைந்தான்
அவனே கிட்டு என்ற அந்தப் புலிப் பொடி.

ராஜீவின் கொலைப்படைகள்
செய்த பல படுகொலைகளில்
அகத் என்ற கப்பல் தகர்த்த
இக்கொலையில்...
தமிழினம் இழந்த அருமைப் பொடி அவனே..
கிட்டு என்ற அந்தப் புலிப் பொடி.

தேச விடுதலைக்காய்
ஆகுதியான பொடியளுள்
கேர்ணல் கிட்டு என்ற நாமத்துடன்..
ரங்கா.. மணி 50 கலிபர்..
உறுமும் அந்த **Honda 200** காட்டிய பொடி
இன்று.. மாவீரனாய் அவனே...
கிட்டு என்ற அந்தப் புலிப் பொடி.

கிட்டு மாமா என்ற பொடி
அவன் விண்ணிருக்க..
அவன் மருமக்களாய்
கூடி விளையாடிய நாமோ
அநாதைகளாய் இன்னும்...
மண்ணிருந்து விடுதலைக்கு
ஏங்கும் பரதேசிகளாய்..!!!

நெடுக்காலபோவான் (யாழில்)








இந்த உலகம் மனிதனை இரத்தம், சதை, இதயம், மனசாட்சி உள்ள ஒரு உயிராகப் பார்ப்பதில்லை. அதற்கு மாறாக ஒவ்வொருவருக்கும் ஒரு அடையாளத்தை கொடுத்திருக்கிறது. அந்த அடையாளங்கள்தான் அவனுக்கு மகுடங்கள்.. அந்த அடையாளங்கள் அவனுக்கு முகவரி... அந்த அடையாளங்கள் அவனுக்கு எல்லாமாகவும் இருந்துவிடுகிறது. இங்கு ஆடைகள் இன்றி கூட வாழ்ந்து விடலாம் ஆனால் அடையாளங்கள் இன்றி வாழ்வது கடினம்...

நாம் மறைந்தப்பிறகும், நம்மை இந்த உலகம் மண்ணோடு மண்ணாக்கிவிட்டப்பிறகும், நம் அடையாளங்கள் மட்டும் இந்த உலகைவிட்டுப் பிரிவதில்லை... உலக சரித்திரங்கள் இந்த அடையாளங்களைத்தான் வரலாறு என்று இதுவரை பறைச்சாற்றிக் கொண்டிருக்கிறது...

கலிங்கப்போர் என்ற அடையாளம்தான் அசோகரை இந்த உலகிற்கு அடையாளம் காட்டுகிறது... உலகை வெல்லும் ஆசை என்ற அடையாளம் தான் மாவீரன் அலேக்சாண்டரை இந்த உலகிற்கு அடையாளம் காட்டுகிறது... சேகுவேர-வின் வீரமும், விவேகானந்தனின் பக்தியும், பெரியாரின் பகுத்தறிவும் இதுபோன்ற அடையாளங்களே... இப்படியாய் அடையாளங்கள் இல்லாதவர்களே தன் புகைப்படங்களை ஒட்டி எதையெதையோ காட்டிக்கொண்டிருக்கிறார்கள்...

அட என்ன... படத்தின் விமர்சனத்தை விட்டுவிட்டு எதையோ சொல்லிக்கொண்டிருக்கிறார் என்ற கோவம் வேண்டாம்... படத்தின் சிறுதாக்கமே இந்த முன்னுரை....

தனக்கென எந்த அடையாளமும் இல்லாது... ஆசியாவின் மிகப்பெரிய காய்கனி அங்காடியான 'கோயம்பேடு' சந்தையில் மூட்டை தூக்கிபிழைக்கும் நான்கு சிறுவர்கள்.. தனக்கென ஏற்படுத்திக்கொண்ட அடையாளத்தையும், அந்த அடையாளம் அழிக்கப்படும்போது கோவப்பட்டு எழுவதையும் தன்னுடைய பாணியில் விஜய் மில்டன் எளிமையாக சொல்லியிருக்கும் படம்தான் கோலி சோடா...

'பசங்க' படத்தில் நடித்த சிறீராம், கிஷோர், பாண்டி, குட்டிமணி, யாமினி ஆகியோரே இந்தபடத்தில் நடித்திருக்கிறார்கள். கோயம்பேடு சந்தையில் இரவு முழுவதும் மூட்டை தூக்கிபிழைத்து கொண்டு... தனக்கென்று எதுவும் இல்லாது.. தன்னுடைய பெயர்கூட என்னவென்று தெரியாத இந்த நான்கு சிறுவர்களும் (சிறுவர்களும் அல்ல பெரியவர்களும் அல்ல) எப்படியாவது.. நமக்கும் ஏதாவது அடையாளம் வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள்.

இந்த சந்தையிலே ஏதாவது செய்து தன்னுடைய சொந்த காலில் நிற்க நினைக்கும் இவர்களை.. மார்க்கெட்டில் காய்கறி ஏஜென்டாக இருக்கும் ஆச்சி இவர்களுக்கு உறுதுணையாக நிற்கிறார். மேலும் சந்தையை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ரவுடி நாயுடை பார்த்து உதவி கேட்கிறார்கள். அவரும் தன்னுடைய பயன் படாத குடோனை கொடுத்து உதவுகிறார். என்ன தொழில் செய்வது என்று யோசித்து பின் 'ஆச்சி மெஸ்' என்ற உணவகத்தை திறக்கிறார்கள்.... நன்றாக செயல்பட்டு 'ஆச்சி மெஸ்' என்ற அடையாளத்தை பெறுகிறார்கள்.இதற்கிடையில் ரவுடி நாயுடுவின் ஆட்கள் ஹோட்டலில் தண்ணியடிப்பது, தவறான செய்கைகள் செய்வது என தொடர... அதை இந்த பசங்க கேட்க இருவர்களுக்கும் கைகலப்பு ஆகிவிடுகிறது.. தெருவில் அவமானப்பட்ட ரவுடிகள் தன்னுடைய ரவுடி என்ற அடையாளத்தை காட்ட இழந்த மானத்தை காப்பாற்ற அதே இடத்தில் அவர்களை அழித்து மக்களுக்கு தம்மீது உள்ள பயத்தை தக்கவைக்க நினைக்கிறார்கள். ஒரு கட்டத்தில் நான்கு பேரையும் அடித்து உதைத்து திரும்பி வராதமாதிரி இந்தியாவின் நான்கு மூலைகளில் விட்டுவிடுகிறார்கள்...

நம்முடைய அடையாளம் போய்விட்டதே என்று குமுறும் இவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து தம்முடைய அடையாளம் எங்கு பறிபோனதோ மீண்டும் அங்கேதான் அதை பெற வேண்டும் என்று மீண்டும் கோயம்பேடு ஆச்சி மெஸ் வருகிறார்கள். ரவுடிகளுடன் சண்டையிட்டு அந்த இடத்தை பிடித்தார்களா. தன்னுடைய அடையாளத்தை பெற இவர்கள் என்ன செய்கிறார்கள்... அவமானம் பட்ட ரவுடி கும்பல் ரவுடிஸம் என்ற தன்னுடைய அடையாளத்தை பெற என்ன வில்லத்தனம் செய்கிறார்கள்.. இறுதியில் யார் யார் தன்னுடைய அடையாளங்களை தக்க வைத்துக்கொண்டார்கள் என்று நல்லதொரு முடிவைச் சொல்லி கைதட்டலோடு முடித்திருக்கிறார் இயக்குனர்.

பசங்க படத்தில் நடித்த அந்த நான்குபேரும் கதைக்கு எற்றார்போல் பொருந்தியிருக்கிறார்கள்... முதல்பாதியில் காதல், கலாட்டா, என துருதுருவென்று குறும்போடு திரியும் இவர்கள்... பிற்பாதியில் ரவுடிகளோடு போராட்டம் என ஒவ்வொறு காட்சிகள் நெகிழவைக்கிறது. இந்த நால்வரோடு அண்ணாச்சி இமான் நடித்திருக்கிறார். நகைச்சுவைக்கும் பையன்களோடு செய்யும் சேட்டைக்கும் சபாஷ் பெறுகிறார். பாடல்கள் என்று தனியாக மொக்கை போடாமல் கதையோடு கலந்து ஒருசில கானாக்கள் வருகிறது.... ஒரு பாடலுக்கு பவர்ஸ்டாரையும், சாம் ஆண்டர்சனையும் ஆட வைத்திருப்பது சிரிப்புக்கு உத்தரவாதம். படங்களை ஒளிப்பதிவு செய்ததின் மூலம் தனித்துவிளங்கிய விஜய்மில்டன் இந்தபடத்தின் மூலம் இயக்கத்திலும் வித்தியாச இயக்குனர் வரிசையில் இடம்பிடிப்பார் என்று நம்புவோம்...

கோடிகோடியாய் கொட்டி படம் எடுத்து... அதை நல்லப்படம் என்று மக்களை நம்பவைத்து.. தேவையில்லாத விளம்பரங்களை தேடி அப்படியும் ஊத்திக் கொண்டுப்போதும் படங்களுக்கு மத்தியில்.. குறைந்த முதலீட்டில் எளிமையான கதையின் மூலம் ஜெயித்து விட்டது இந்த கோலி சோடா.

*- சௌந்தர்*

## சினித்துளி

### முட்டுச்சந்தில் குதூகலித்த ஜில்லா !



ஜில்லாவும் வீரமும் ஒரே நாளில் ரிலீசாகின. வீரம் படத்தை ஆகா ஓகோ என்று புகழ்ந்த ரசிகர்கள் ஜில்லாவையோ நிறைய குறை கூறினார்கள். பேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக வலைதளங்களில் விஜய்யின் ஜில்லாவை ரசிகர்கள் குறை சொல்லி எழுதிக் கொண்டிருந்தாலும், படம் ஓசைப்படாமல் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றது. இது இப்படியிருக்க ஜில்லா படம் வெற்றி பெற்று விட்டதாக சொல்லிக் கொண்டு பத்திரிகையாளர்களை சந்தித்திருக்கிறார்கள் விஜய்யும் தயாரிப்பாளர்களும் !. பத்து பதினைந்து உறவினர்களை வைத்துக் கொண்டு சடங்கு விழா நடத்துவது போன்று இந்த வெற்றி (?) சந்திப்புக்கு சில பத்திரிகையாளர்களே அழைக்கப்பட்டிருந்தார்களாம். மிக மிக ரகசியமாக இந்த ஜில்லா வெற்றி சந்திப்பு கொண்டாட்டத்தை நடத்தி முடித்திருக்கிறது விஜய் அன்ட் கோ.

### இணையும் வைரமுத்து-யுவன் !



தென்மேற்குப் பருவக்காற்று, நீர்ப்பறவை ஆகிய படங்களின் வெற்றியைத் தொடர்ந்து சீனு ராமசாமி அடுத்ததாக இயக்கும் 'இடம் பொருள் ஏவல்' திரைப்படத்திலும், அவரது முந்தைய திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதிய வைரமுத்து பாடல்களை எழுதுகிறார். சீனுராமசாமியின் முந்தைய இரண்டு படங்களுக்கும் இசையமைத்த என்.ஆர்.ரகுநந்தனுக்கு பதிலாக யுவன் ஷங்கர் ராஜா இசையமைப்பாளராக ஒப்பந்தமாகியிருக்கிறார்.

வைரமுத்து - இளையராஜா மீண்டும் இணைவார்களா? என்ற ஏக்கத்தில் இருக்கும் ரசிகர்களின் தவிப்பை சிறிதளவு போக்கும் விதத்தில் இத்திரைப் படத்தில் முதன்முதலாக வைரமுத்துவின் வரிகளுக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார்.

### லிங்குசாமியின் 'அஞ்சான்' !



சிங்கம் 2 படத்திற்க்கு பின் சூர்யா, இயக்குனர் லிங்குசாமியின் தலைப்பிடப்படாத திரைப்படத்தில் நவம்பர் மாதம் முதல் நடித்து வருகிறார். லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம், யுடிவி நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கும் இப்படத்தின் தலைப்பு 'அஞ்சான்' என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. படம் தமிழ், தெலுங்கு ஆகிய 2 மொழிகளிலும் ஒரே நேரத்தில் உருவாகிறது. இத்திரைப்படம் ஆகஸ்ட் 2014இல் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

### நண்பேன்டா !



ரெட் ஜெயண்ட் மூவிசின் 'ஒரு கல், ஒரு கண்ணாடி' யின் வெற்றிக்குப் பின் 'சுந்தர பாண்டியன்' இயக்கிய பிரபாகரனை வைத்து 'இது கதிவேலன் காதல்' படம் எடுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. 'இது கதிவேலன் காதல்' படம் விரைவில் திரைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து 'நண்பேன்டா' படப்பிடிப்பைத் துவங்க திட்டமிட்டுள்ளனர். இதிலும் உதயநிதியுடன் சந்தானம் நடிக்கிறார். படத்தை ஜெகதீஷ் இயக்குகிறார். இவர் ராஜேஷிடம் உதவி இயக்குனராக பணியாற்றியவர். இப்படத்திற்கும் ஹாரிஸ் ஜெயராஜ்தான் இசையமைக்கிறார்.

We offer our clients expert and focused legal advice, quality, care and efficiency

- Residential Property and commercial property (WE CAN ACT FOR ALL THE LENDERS)
- Immigration Law
- Intellectual Property
- Company law
- Landlord and Tenant
- CRIME (Business Immigration and Regulatory)
- Outsourcing Law
- Partnership Law
- Contract Law
- Serious Fraud




KTS LEGAL Solicitors & Advocates

KTS Legal Solicitors & Advocates
Tel:020 8367 0505
Fax:020 8367 0404
Nicholos House, 12 River Front, Enfield, EN1 3TF
Email: info@ktslegal.co.uk | Web:www.ktslegal.co.uk




Arumpukal Marriage Brokers
Tel : 020 8682 1057
Mob: 07889 930 130 | Fax : 020 8682 1057
E.Mail : arumpugall@gmail.com

MercuryPay

# Merchant Credit Card Processing for your business

Static Terminal | Wireless Terminal | Mobile Terminal




- ✓ Fast and secure transactions
- ✓ Highly competitive card Processing rates
- ✓ UK based customer support 24*7*365
- ✓ Outstanding customer service
- ✓ Clear, honest and transparent price plan designed to suit your business

- Contact us for a quote today -

**020 8550 6677**

Email : **sales@mercurypay.net** Web : **www.mercurypay.net**

Follow us on :


JSN
BATHROOMS
Saneux
Saneux
WIDE RANGE OF BATHROOS & SHOWERS
European Toilet & unit £180
European Single sink with tap 45cm £79 55cm £89
Hansgrohe mixer taps Start from £59
Thermostatic shower mixer Start from £49
European bathroom suite Start from £90
Sliding shower doors CALL FOR PRICES
SPECIAL DISCOUNTS FROM MERLYN, KUDOS, & SANEUX SHOWERS
Thermostatic concealed shower mixer 1 option £150 2 option £170
ITALIAN FURNITURE Start from £256
FULL BATHROOM SUITE Start from £220
Free standing baths CALL FOR PRICES
SPECIAL DISCOUNTS FROM SANEUX
* BATHROOMS
* SHOWERS
* GRANITE /
* MARBLE /
* PORCELAIN
TILES ALL AT
DISCOUNT PRICES
KUDOS
GROHE
GRUNDFOS
Hudson Reed
MERLYN
KUDOS
In Business over 7 years
020 8427 6969
இலவச வாகனத் தரிப்பிட வசதி உண்டு
இலண்டனில் எங்களுக்கு வேறு
கிளைகள் கிடையாது
JSN HEAT SUPPLIES LTD
● PLUMBING ● ELECTRICALS ● BOILERS ● RADIATORS
ALL AT DISCOUNT PRICES
WATER SOFTENERS AVAILABLE ALL BRANDS
Heated towel rails 600x1000 start from £49
DISCOUNTED PRICES ON BOILERS, RADIATORS & UNDERFLOOR HEATING
WIDE RANGE OF BOILERS & RADIATORS IN STOCK
WE STOCK ALL MAKES OF BOILER
ALL MEGAFLOW SYSTEM BOILERS SUPPLIED & FITTED AT AFFORDABLE PRICES
TEL: 020 8427 0553
Ideal Standard
Roca
GROHE
mira
MAIN
Hudson Reed
AQUALUX
ARISTON
Armitage Shanks
AQUALISA
Vaillant
KESTON
Glow-worm
WORCESTER
saneux
148 Pinner Road, Harrow, Middlesex, HA1 4JE